மது அருந்தி வாகனம் செலுத்தினால் வாழ்நாளில் கிடைக்காது லைசென்ஸ் பக். 02

விலை ரூபா 20

பக்கங்கள் 32

# உதயன்

35c - 28c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 | கதிர் 139 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 31, புதன்கிழமை 13.04.2016

# வடக்கு முதலமைச்சருக்கு மைத்திரி அவசர அழைப்பு

## வடக்குக் காணிப் பிரச்சினை குறித்து திங்களன்று சந்திப்புக்கும் ஏற்பாடு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 13
வடக்கு மாகாணத்தின் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்திப்பதற்கு அவசர அழைப்பு அனுப்பியுள்ளார். இதனடிப்படையில் இந்தச் சந்திப்பு எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர்களால் மிகக் காரசாரமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாணத்திலுள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக, ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறும் இந்தக் பக். 27



## பதில் பொலிஸ்மா அதிபரானார் விக்கிரமசிங்க

கொழும்பு, ஏப். 13
பதில் பொலிஸ் மா அதிபராக பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபராக இருந்த என்.கே.இலங்கக்கோன் ஓய்வு பெற்றுச்சென்ற நிலையில், பதில் பொலிஸ்மா அதிபராக விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், பதில் பொலிஸ் மா அதிபராக எஸ்.எம்.விக்கிரமசிங்க நியமனம் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் என்.கே. பக். 30

## உதயனின் அச்சு இயந்திரப் பகுதி தீக்கிரையாக்கப்பட்டு 3 ஆண்டுகள்

### தாக்குதலாளிகள் எவருமே இதுவரை கைதாகவில்லை



யாழ்ப்பாணம், ஏப். 13
உதயனின் பிரதான அலுவலகத்தின் அச்சு இயந்திரப் பகுதி தீக்கிரையாக்கப்பட்டு இன்றுடன் மூன்று வருடங்கள் முடிவடையும் நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை.

உதயன் மீது இதுவரையில் 38 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதும், எந்தவொரு தாக்குதலுடனும் தொடர்புடைய சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பக். 27

## கிராம அலுவலர்களுக்கு அச்சுறுத்தல்; ஆராய வருகின்றது இராணுவ அணி

யாழ்ப்பாணம், ஏப். 13
முல்லைத்தீவில் கிராம அலுவலர்களின் சிவில் நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினர் இடையூறு விளைவித்த சம்பவம் தொடர்பில், விசாரணைகளை மேற்கொள்வதற்காகக் கொழும்பிலிருந்து விசேட இராணுவ அணியொன்று முல்லைத்தீவுக்குச் செல்லவுள்ளதாக இராணுவத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு கொழும்பு ஊடகம் ஒன்று பக். 29

## கீரிமலையில் 6 ஏக்கரை விடுவித்தது கடற்படை

### புத்தர் சிலையையும் விட்டுச் சென்றது



யாழ்ப்பாணம், ஏப். 13
கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் 6.47 ஏக்கர் காணி கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது. பக். 29

## வடக்கு தீர்வு வரைவு மீது அடுத்த வாரமே விவாதம்

### நேற்றைய அமர்வில் அது ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13
வடக்கு மாகாண சபையின் அரசியல் தீர்வுத் திட்ட வரைவு, முதலமைச்சருக்கு நேரமின்மையால் இறுதி செய்யப்பட்டுச் சபையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்படவில்லை.

தீர்வுத் திட்ட இறுதி வரைவு எதிர் வரும் பக். 27

முச்சந்தி முரளி



அழைப்பில ஏதும் விசேசம் இருக்குமோ....?

## பிணையில் விடுவிக்கப்பட்ட அரசியல் கைதி மீண்டும் கைது

யாழ்ப்பாணம், ஏப். 13
அரசியல் கைதியாகப் பிணையில் வந்தவருக்கு எதிராக வழக்கு நடந்துகொண்டிருக்கும் நிலையில் அவரைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர். பக். 30

## ஏகமனதாக நிறைவேறியது போக்குவரத்து நியதிச் சட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 13
வடக்கு மாகாண சபையின் வீதிப் போக்குவரத்து நியதிச் சட்டம் நேற்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த நியதிச் சட்டம் ஆளுநரின் அங்கீகாரத்துக்கு பக். 27

# சிவில் நிர்வாகத்தில் இனிமேல் ராணுவத் தலையீடு வேண்டாம்

## வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 13
சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீட்டை வன்மையாகக் கண்டித்துள்ள வடக்கு மாகாண சபை, இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கோரித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் நேற் பக். 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகங்களில் மாதிரி கிராமம் அமைத்து சுகாதார செயற்பாடுகளை முன்னெடுக்க தீர்மானம்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.13
அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாதிரிக் கிராமம் ஒன்றைத் தெரிவுசெய்து சுகாதாரம் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்து, அது வெற்றி அடையும் பட்சத்தில், ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலுமுள்ள அனைத்துக் கிராமங்களிலும் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது - இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழில் இந்த வருட ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. மாவட்ட அரச அதிபர் தலைமையில் பி.ப. 3 மணிக்கு நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழில் அதிகரித்துவரும் டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் டெங்கு கட்டுப்பாட்டு வாரம் மாவட்ட அரசஅதிபர் பணிப்பில் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச சபைகளிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பிராந்திய சுகாதார சேவை நிலையத்தினர், பிரதேச செயலகத்தினர், பிரதேச சபையினர், பொலிஸ், இராணுவம், பொதுமக்கள் எனப் பலரது ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட்ட, முன்னெடுக்கப்பட்ட நடைமுறைகள் யாது? அவற்றின் வெற்றி, தோல்விகள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டது.

சுகாதார செயற்பாடுகளுக்காக விஞ்ஞான ரீதியாக அதிக தேவைப்பாடு கொண்ட ஒரு கிராமத்தை, ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் தெரிவு செய்து சுகாதார சேவைகள் பணிமனையால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதற்காக பிரதேச செயலகம் அனைத்து மட்டத்துடனும் ஆராய்ந்து எந்தக் கிராமம் இவ்வாறு தெரிவு செய்யப்படும் என்பது எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்துக்கு அறியத்தருதல் வேண்டும். அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளில் கிராம சுகாதார அபிவிருத்தி வெற்றியடையும் அடிப்படையில் அனைத்துப் பிரதேசத்துக்கும் இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரச அதிபர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் குப்பைகளையே காணக்கூடியதாக உள்ளது. ஆடியபாதம் வீதியில் காணப்பட்ட கழிவுகளை நான் கண்டு கொண்டு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினேன். கழிவுகளை அகற்றும் செயற்பாடுகள் தொடர்பாக அசமந்தமாகவே செயற்படுகின்றனர். ஒழுங்கான ஒரு செயற்திட்டம் இல்லை. அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுதல் வேண்டும். ஒருவர் ஒத்துழைக்காத நிலையிலும் திட்டங்களை செயற்படுத்துவது கடினமாகலாம். ஆளணிப் பற்றாக்குறை என்பதை விடுத்து உள்ளவர்களை சீராகப் பயன்படுத்துங்கள்- என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கால எல்லையில் ஊழியர்களுக்கு விடுமுறைகளை வழங்காமலும் சற்றுக் கடினமாகச் செயற்படுங்கள். ஜனாதிபதி செயலகத்தில் இருந்து பிரதேச சபைகள் உரிய வகையில் கழிவகற்றல் செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கடந்த வாரம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வெறுமனே அலுவலகத்துக்கு வருவதும் கையொப்பம் வைத்துவிட்டு செல்வதும் கடமையாகாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சமூகப் பொறுப்புடன் செயற்பட்டு திட்டங்களைச் செய்வோம் என்று சொல்வதைத்தாண்டி செயற்பாட்டு ரீதியாக செய்து காட்டுதல் வேண்டும்- என்றும் அரச அதிபர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில், டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னெடுக்கும் போது சுகாதார பணிமனைக்கு சில பிரதேசசபைகளால் போதுமான உதவிகள் கிடைக்காமல் போனமை குறித்தும், கழிவுகளை அகற்றுவதை சிறப்பாக செய்யாமல் மூன்று வகை கழிவுகளையும் ஒன்றாகச் சேகரிப்பதால் ஏற்படும் அசௌகரியங்கள், இராணுவத்தினரை சுகாதார செயற்பாடுகளுக்கு பயன்படுத்தும் போது ஏற்படும் செலவினம் மற்றும் சுமைகள் தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பாக பிரதேச செயலர்களும், பிரதேச சபையினரும் தம்முடைய விளக்கங்களை முன்வைத்தனர்.

இந்தக் கலந்துரையாடலில், பிரதிப் பிராந்திய சுகாதார அதிகாரி, பிரதேச சுகாதார வைத்தியர்கள், பிரதேச செயலர்கள், பிரதேச சபையினர், மாநகர சபையினர், மாவட்டச் செயலக அதிகாரிகள் எனப் பல தரப்பினர் கலந்து கொண்டனர். (ற-4,ரி5)

## மட்டுவில் கண்ணகை ஆலயத்தில் இறுதித் திங்களில் திரண்ட பக்தர்கள்



சாவகச்சேரி, ஏப்.13
மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பங்குனித்திங்கள் இறுதி நாளான நேற்றுமுன்தினம் பொங்கல் உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் கலந்து கொண்டனர். அந்த நெருக்கடிக்குள் திருடர்களும் தமது கைவரிசையைக் காட்டி 5 பேரிடம் 9 பவுண் நகைகளைத்திருடியுள்ளனர் என்று முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காலை 5 மணி தொடக்கம் இரவு பத்து மணி வரை உள் மண்டபத்தினுள் அடியார்கள் வெள்ளம் நிறைந்து காணப்பட்டது. அதனைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையையும் காட்டியுள்ளனர். அடியார்கள் போன்று நடமாடிய திருடர்கள் எட்டரைப் பவுண் நிறையுடைய ஐந்து சங்கிலிகளை அபகரித்துள்ளனர் என முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை ஆலய சுற்றாடலில் கண்டெடுக்கப்பட்ட பணப்பைகள், தங்க நகைகள் (மோதிரங்கள், கைச்சங்கிலி), கைக்கடிகாரங்கள், அலைபேசிகள் பணம் போன்றவை அடியார்களால் ஒப்படைக்கப்பட்டு ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முன்னைய நான்கு பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தை விட பெரும் எண்ணிக்கையான அடியார்கள் நேற்றுமுன்தினம் வந்திருந்தனர். வாகனங்களில் வருகை தந்த பலர் வாகனங்களை ஆலயத்தை அண்டிய பகுதிகளில் நிறுத்த முடியாத நிலையில் சுமார் இரண்டு கிலோ மீற்றருக்கு அப்பால் தமது வாகனங்களை நிறுத்தி விட்டு ஆலயத்துக்கு வந்தனர்.

ஆலயத்துக்கு பெருமளவு காவடிகளும் பாற்செம்புகளும் நாலாபுறமுமிருந்து வந்து வீதிகளை ஆக்கிரமித்ததால் பொலிஸார் அடியார்களைக் கட்டுப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர். ஆலய உள்பிரவாகத்தினுள் நுழைவதற்கு நீண்ட நேரம் அடியார்கள் வரிசையில் காத்திருந்ததைக் காணமுடிந்தது.

காலை 5 மணி தொடக்கம் இடம்பெற்ற பொங்கலால் ஆலய சுற்றாடல் ஒரே புகை மண்டலமாகக் காணப்பட்டது. (ற-4,9,131)

## மது அருந்தி வாகனம் செலுத்தினால் வாழ்நாளில் கிடைக்காது லைசென்ஸ்

கொழும்பு, ஏப். 13
தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் மது போதையில் வாகனம் செலுத்துவோரின் சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டால் அவை வாழ்நாளில் மீள வழங்கப்பட மாட்டாது என்று பொலிஸார் அதிரடி முடிவை எடுத்துள்ளதோடு அதனைச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

அவ்வாறு பறிமுதல் செய்யப்படும் சாரதி அனுமதிப்பத்திரம் நிரந்தரமாகவே பறிமுதல் செய்யப்பட்டுவிடும். அவற்றை உரியவர்களுக்கு எக்காரணம் கொண்டு வழங்கப்போவதில்லை என்று போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் இந்த நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னைய காலங்களில் மது போதையில் வாகனம் செலுத்தியவர்களின் வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் தற்காலிக அனுமதிப் பத்திரமொன்றை வழங்கி வந்தோம். ஆனால் நேற்றுமுன்தினம் தொடக்கம் அந்த நடைமுறை நீக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப்பத்திரம் இனிமேல் வழங்கப்படமாட்டாது என்று பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவது, அதனால் விபத்துக்கள் ஏற்படுவது, படுகாயமடைவது, உடல் அங்கவீனமாவது, உயிரிழப்புக்கள் ஏற்படுவது, பொருளாதார இழப்பு ஏற்படுவது என்பது உள்ளிட்ட பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இத்தகைய விபத்துக்கள் விபத்தை ஏற்படுத்துபவர்களுக்கு மட்டுமன்றி எதிரே பயணிப்பவர்களுக்கும் பாதிப்பையே ஏற்படுத்தி விடுகிறது. இந்தநிலையில் மதுபோதையில் சாரத்தியம் செய்பவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் நிரந்தரமாக இரத்துச் செய்யப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## வங்கிகளின் கைவிசேடம் வெள்ளியன்று

சாவகச்சேரி, ஏப்.13
சித்திரைப் புத்தாண்டு கைவிசேட நிகழ்வுகள் வங்கிகளில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசினால் வெள்ளிக்கிழமை பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டபோதிலும் அன்று வங்கிகளுக்கான விடுமுறை அல்ல. ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி வெள்ளிக்கிழமை புதுவருட கொடுக்கல் வாங்கல்களுக்காக திறந்திருக்கும் என வங்கிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## விலகவில்லை ஆனால் விலகிவிட்டார்

யாழ்ப்பாணம், ஏப்.13
தமிழ் மக்கள் பேரவையின் செயற்குழுவில் இருந்து விலகிக் கொள்கின்றார் என்று வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாக வெளிவந்த செய்தி தவறானது என்று குறிப்பிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயற்குழுவில் இணையுமாறு முதலமைச்சரைக் கேட்ட போது அவர் தற்போதைக்கு இணைய முடியாது என்று தெரிவித்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையைச் சேர்ந்தவரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இணைய ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு யாப்பை இறுதி செய்யு முகமாக யாழ். பொது நூலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ் மக்கள் பேரவை கூடியது. இதன் போது பேரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக 4 பேர் கொண்ட நடவடிக்கைக் குழு மேலும் 7 பேரை உள்ளடக்கி 11 பேர் கொண்ட செயற் குழுவாக மாற்றப்பட்டது. இந்தக் குழுவிலும் முதலமைச்சரை அங்கம் வகிக்குமாறு கோரப்பட்ட போது தனது வேலைப்பளு காரணமாக செயற்பாட்டுக் குழுவில் தற்போதைக்கு இணைய முடியாது எனக் கூறினார். தனக்காக மருத்துவ கலாநிதி லக்ஸ்மனை நியமிக்குமாறு அவர் கோரினார் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

திருச்செல்வம் வாசுதேவன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் பரந்தன் சந்திக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 860 8784**

## சிறுநீரகம் தேவை

இரு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ள 58 வயது தந்தைக்கு "A" அல்லது "O" இரத்த வகையைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து(வயது 25 முதல் 55 வயது வரை) சிறுநீரகம் எதிர்பார்க்கப்படுகின்றது. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**011 2364 865, 077 6925 226**

## ஆசிரியர்கள் தேவை

Spoken English, IELTS, Spoken Sinhala, Maths, Science, ICT, Commerce (English Medium)
கற்பிக்கக்கூடிய ஆரிசியர்கள் தேவை.
CIL Jaffna,
Please Call:- 0777 382108
mail: ciljaffna@gmail.com

## தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது கோழிப் பண்ணையைப் பராமரிக்க ஆள் தேவை.
தங்குமிட வசதி உள்ளது.
குடும்பமாக வந்து நின்று பராமரிக்க விருப்பமுடையோரும் வரலாம்.

**க.விஷ்ணு 077 474 7488**

## தவறிவிட்டது

குணரத்தினம் தனேஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (9009931964V) வாகன சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ரக்ஸ் என்பன பலாலி வீதிக்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் அதனை தந்துதவுமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்

தொடர்புகளுக்கு: 077 284 4211

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
  நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

### சன்றைஸ் மெடி கிளினிக்

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

### றோயல் மெடிக்கல் சென்ரர்

454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்

**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்**

கட்டடங்கள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி,மன்னார் மாவட்ட பிரதம எந்திரி அலுவலகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்று எந்திரி அலுவலகம் என்பவற்றின் பாவனைக்கு உற்பத்தி ஆண்டு 1998 அல்லது அதற்கு பிற்பட்ட வான் (Van) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விவரங்களினை கடற்கரை வீதி.குருநகர். யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 2016.04.28 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**எந்திரி செ. மோகனதேவன்**
**தலைவர், பெறுகைக் குழு,**
**கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,**
**கடற்கரை வீதி,குருநகர், யாழ்ப்பாணம்.**
**021 222 8091**

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்




மண்ணில் 26.03.1917 — விண்ணில் 13.04.2006
**அமரர் நாகலிங்கம் கந்தையா**

மண்ணில் 19.03.1943 — விண்ணில் 04.02.2006
**அமரர் கந்தையா மயில்வாகனம்**

எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம்
மனதை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாக்கியம் (மனைவி), பிள்ளைகள்.
40, வைரவர் கோவில் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
[illegible] (அம்மா), சகோதரர்கள்.

## MOORTHY

digital imaging service
1 Floor, 62/20 Stanly Road, Jaffna.
021 222 1358
www.jaffnamoorthy.com

**இன்று இனிதாய் மலரும் புத்தாண்டுடன்**
**இலங்கையில் எங்கும் இல்லாதவிலைகளில்**
**இந்தியவிலைகளில் அல்பங்களை**
**பிரதியாக்கம் செய்து தருகிறோம்**

Embossing
Mettalic
Pearl Glossy
3D



## ஆங்கிலத்திற்கு NO 1 பயிற்சி மையம்

IELTS Life Skills பரீட்சையில் இம்மாதம் DMI யில் கல்விகற்றுபரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களை பாராட்டுவதனுடன் இவர்கள் தம் வாழ்கைத்துணையுடன் இணைந்து கொள்ள வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.




ஆங்கிலக் கற்கை நெறிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS**
Academic & General
#Latest course Material #unique Test Tips
#40 hrs with free 4 mock exams

**IELTS Life Skills** (A1,B1) [illegible] UK [illegible]
# UK இல் இருந்து கணினி மூலமான 40 online listening மாதிரி பரீட்சைகள்
# அனுபவம் வாய்ந்த பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் ஆசிரியர் குழாம்
# இதுவரை 2200 க்கும் மேற்பட்டோர் பயின்று UK சென்றுள்ளார்கள்.
# நடைமுறைகள் தொடர்பான இலவச விளக்கங்கள்

**Spoken English** [illegible]
- மாணவர்கள், உயர்கல்வி கற்போர், தொழில்வாய்ப்பைத் தேடுவோர் எளிய முறையில் ஆங்கிலம் பேச எழுத வீட்டா ஆங்கிலக்கல்வி
- ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும் ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி

## DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில். | No. 19,A9 வீதி, |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

## வேலை வாய்ப்புக்கள்

வடமாகாணத்தில் இயங்கி வரும் "ஸ்மாவிஷன் மாக்கெற்றிங்" நிறுவனத்திற்கு O/L, A/L படித்த துடிப்பான இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பதவிகள்: மேற்பார்வையாளர், உதவி முகாமையாளர்.வினியோகஸ்தர், கவர்ச்சியான கொடுப்பனவுடன் இலகுவான பயிற்சிகளும் வழங்கப்படும். அனைத்துப் பதவிகளுக்கும் நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர் முன் பதிவு செய்வோருக்கும் அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை உண்டு. வயது 18-45 வரை.

நேர்முகத்தேர்வு திகதி: 16.04.2016 ஆகும்.

**தகைமைகள் இருப்பின் ஆவணங்களுடன் வரவும்.**

சம்பளம் 12000 ரூபா தொடக்கம் கமிசனுடன் 60000 ரூபா வரை பெற முடியும்.

**தொடர்பு: 077 368 4610 ,021 730 6031**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
11 . 01 . 1970



ஆண்டவன் அடியில்
13 . 04 . 2006

யாழ் சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோயில் வீதியைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## பஞ்சாட்சரம் கிருபாகரன்

(சாரங்கன் நகை மாட உரிமையாளர்)

அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

புன்சிரிப்பை சிந்தி நின்ற பூப்போல் வதனம் புகழளந்த கொடைத் தன்மை
கடவுள் பக்தி நன் நெறியில் நடந்த நடம்
நல்லோர் போற்ற நல்லனவே செய்தவுனை
நடுவில் பிரிந்து மன்னுதுயர் சூழ்ந்தோமே
மனையின் ஒளியே மன்னவனாய் பவனி வந்த மாண்பே கிருபா !
என்ன குறை கண்டானோ ? இரங்காக் காலன்
எடுத்தானோ உன் உயிரை ஏங்கினோமே ! எவருக்கும் கொடுத்து வந்தாய்
எது கேட்டாலும் இல்லையெனச் சொல்லாது
அள்ளி ஈந்தாய் தவவடிவே தலங்கள் பல பணிகள் செய்தாய்
தஞ்சமென ஏழையோர்க்கு தானங்கள் பல செய்தாய்
உவந்து பல நிறுவனங்கள் உதவி கேட்
உணர்வோடு சேவைக்காய் உழைப்பை ஈர்ந்தாய்
எவருமே எதிர்பாரா நேரம் எம்மை
இடிந்தலற வைத்து விட்டு எங்கு சென்றாய்
ஆண்டுகள் பத்து ஓடி மறைந்தாலும் என்றும் உன் நினைவுகளுடன்

*அம்மா, அண்ணாமார், அக்கா, தங்கைமார், அண்ணிமார்,*
*அத்தான்மார், மச்சான்மார், பெறாமக்கள், மருமக்கள்.*

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

483, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ
30 . 05 . 1972



கண் நெகிழ
26 . 04 . 2015

கடந்த 26.04.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்ப குத்துவிளக்காம்

## அமரர் மைதிலி மோகஜீவன்

(ஆசிரியை - புது/மத்திய கல்லூரி)

**வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உயர்
வாழ்க்கையால் உலகோரைக் கவர்ந்து
குடும்பத்தை, மாணவரை உயர்த்தி வைத்து
உயர் பண்பால் உலகோரைக் கவர்ந்து
உயர்ந்து நின்ற எம் குடும்பதீபம்
ஆண்டுகள் பல சென்றாலும் இவ்வுலகில்
இருக்கும் வரை உங்களின் நினைவுகள்
எமது மனதில் என்றும் அழியாது
நிறைந்தே இருக்கும்.**

அன்னாரின் முதலாம் ஆண்டு கிரியைகள் நாளை (14.04.2016) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மோகஜீவன் (கணவர்)
அஜய்,சஞ்சய் (பிள்ளைகள்)
077 066 5915

2ஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## புண்ணியமூர்த்தி
## வேலும்மயிலும்



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பிரான்பற்று பதி தனிலே
சாதனைப் பாதையிலே சரித்திரம் பல கண்டு
நின்று நிலைப்பீரென எண்ணமதாக சாகா வரத்தை தவறிவிட்டாற்போல்
விண்ணவரும் மண்ணவரும் வியந்து நிற்க!
உம்புகழ் விண்ணைத் தொட்டு மண்ணில் நிலைத்து நிற்கும் படி.
அறிவினால், அன்பினால் அதியுயர் சேவையால்
பரிதி போல் பாரினிலே சீர்பெற்று - விளங்குவாய் காண்!
பூமியுள்ளவரை வானம் நிலைக்கும் வரை உன் புகழ் வையமும் சொல்லும் ஐயா!
சளைக்காத மனமும் உறுதியும் தான் வெற்றியைத் தேடித்தரும் எனப் புகட்டி,
பக்தியுடையோர் காரியத்திற் பதறார்.
மிகுந்த பொறுமையுடன் வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவித்தீர்.

உண்மையின் பேர் தெய்வம் என்போம் - அன்றி ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்.
உண்மைகள் வேதங்கள் என்போம் - பிறிது உள்ள முறைகள் கதையெனக் கண்டோம்.
உண்மையின் உறைவிடமே எமைவிட்டு எங்கு சென்றீர்!

தந்தி கிடைத்ததும் மிகநொந்துபட்டு வந்தார்கள். உயிரற்ற நிலையில் தந்தையைக் கண்டதும் தொப்பென
மயங்கிச் சரிந்தான் - உன் மகனுள் ஒருவன் சுடுகாடு செல்லும் வரைக்கும் ஏதும்
ஆகாரம் தின்னாமல் குந்தியிருந்து குமுறி அழுதார்கள் உங்கள் பிள்ளைகள்
மூத்த மகன் மூர்த்தியின் உள்ளக்குமுறலை யார்தான் அறிவாரோ?
எத்தனை இதயம் ஐயா குமுறுகிறது இற்றைவரை! இத்தனை நாள் மட்டுமிது யார்க்கும் தெரியாது!

உண்மையினைக் கண்டெங்கள் உள்ளம் மறவா வண்ணம் மறைவாக வாழ்கின்றீர்
இறவாமல் .. எம் உள்ளமதில்! இன்றும் உயிரோ டிருந்தீரே யாமாகில் என எண்ணிப் பார்க்கையில்....!
காரியங்கள் எல்லாம் ஒரு கைநொடிக்குள் செய்தீரே செத்தாலும் செத்தீர் நும்
செல்வக் குடும்பத்தைப் பத்தியமாய்ப் பார்த்திந்தப் பாரில் வழங்கிவரும் உண்மை உறவுகளறியும்!
பிள்ளைகளை உற்பவித்துப் பெற்றதற்கும் உம் கடமைகள் தவறாது கண்ணியமாய்
செய்ததற்கும் ஈடாக ஓர் வார்த்தையேனும் இயம்பாமல்
போய்விட்டீரோமே! எனப் புலம்புகிறார் உம்மனைவி!

மரணம் என்பது ஜனனமாமே! ஒளியிழந்த நம்வாழ்வில் ஒளியிட்ட மீண்டும்
உம்சந்ததியில் வந்து உதிப்பீர் ஐயா!

பிறப்பு
1946.06.16

இறப்பு
2012.04.28

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(க்2380) (11,17,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிகுமரன் ரெக்ஸ்

தட்டாதெருச் சந்தியில் புது வருடத்தை முன்னிட்டு
விசேட விலைக்கழிவில் புத்தம் புதிய தெரிவுகள்

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக ஆடைகளையும் நம்ப முடியாத விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.



விசேடமாக Office Wear Sarees 690/= இலிருந்து

- பட்டுச் சாறி
- பன்சி சாறி
- கொட்டன் சாறி
- சல்வார்
- சல்வார் துணி
- TOPவகைகள்
- ரவுசர், சேட்

என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள

**சிறிகுமரன் ரெக்ஸ்**
770, K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.



# நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

- ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்
- ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
- ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் மொத கற்கைநெறி.

(Trainer Training (Teacher Training Diploma)

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
- நவீன அணுகுமுறைகள்
- Psychology, Leadership, Personality development.
- Teaching practice
- How to use the Techniques and teaching aids effectively in English

New batches Start On : 9.am (16.04.2016) சனி (weekend batch)
9.am (18.04.2016) திங்கள் (Week day batch)

4th, 5th Batch இல் இணைய பதிவுகளுக்கு முந்துங்கள்

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040



# புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியில் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கு

| | |
|---|---|
| வங்கியியல் கற்கைநெறிகள் IABF & DABF | Medium :- Tamil & English<br>Minimum qualification :- G.C.E. O/L 6 Passes including 5 Credits |
| பட்டயக்கணக்காளர் ஆவதற்கு Chartered Accountancy Executive Level , Business level | Medium :- Tamil & English<br>Minimum qualification:- G.C.E. A/L 3 Passes |
| ஆங்கிலத்தில் நிபுணத்துவம் பெறுவதற்கு CERTIFICATE COURSE IN ENGLISH | Minimum qualification :- G.C.E. O/L 3 Passes<br>Total Hours :- 130 Hours |

A/L வர்த்தகப்பிரிவுகளும் இடம்பெறுகின்றன 2016 & 2017 & 2018

Further Details :-
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
Contact NO :-
021 222 3382, 021 2229149
(C/29944/10.17.18)



# "மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்"



RO with Ultraviolet
~~Rs. 38,000/-~~
Rs.35,000/-
முந்துங்கள்
இச்சலுகை 30.04.2016 வரை மட்டுமே



- உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா என்பதில் சந்தேகமா?
- மேலதிக கல்சியம், மக்னீசியம், நைட்ரைட் ஒரு பிரச்சினையா?
- மலத்தொற்று கிருமிகள் போன்ற உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் உங்கள் கிணற்று நீரிலும் இருக்கலாம் என அச்சமா?
- போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான செலவு அதிகமா?
- மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பிக்கை உத்தரவாதத்துடனான தீர்வு எம்மிடம் மட்டுமே...
- UV உடனான HI-PURE RO நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% தூய நீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெறலாம்.
- அனைத்து நீர் சுத்திகரிப்பு தொடர்பான சிறந்த தீர்வுக்கு எங்களை நாடுங்கள்.

**EVER PURE HI-TEC (PVT) LTD**
341, K.K.S ROAD, JAFFNA.
TEL:- 0215677567, 0773626230



# ABI யின்

## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

தமிழ் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்..



இன்பத்தின் தருணங்கள்
எங்கெங்கு உண்டோ
அபியின் ஆடை வகைகள்
அங்கங்கு உண்டு.

உங்கள் தெரிவுகளுக்கு ஏற்ப
20% முதல் 50%
வரையான விசேட
விலைக்கழிவுகள்

சில ஆடைகளுக்கு
ஒன்று வாங்கினால்
இன்னொன்று இலவசம்

இச் சலுகை 14.04.2016 வரை மட்டுமே

"எதை எடுப்பது எதை விடுவது என்ற
சந்தோசத்தில் நீங்கள் திணறப்போவது நிச்சயம்"

அபியின் வாடிக்கையாளர் அட்டைக்கு 3% விசேட விலைக்கழிவு
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

இந்தப் புத்தாண்டுக்கு முன்னதாகவே வந்து உங்கள் உள்ளத்தை கொள்ளை கொண்ட ஆடைகளை சிறப்புத் தள்ளுபடி விலையில் அள்ளிச் செல்லுங்கள்.

112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்)
தொ.பே: 021 222 3738



# மாபெரும் மலிவு விற்பனை

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

எதிர்வரும் 14.04.2016 வரை

**ராசி கலக்ஷன்ஸ் (ராசி சில்க்ஸ்)**

இந்தியாவில் இருந்து விசேடமாக தருவிக்கப்பட்ட நவீன டிசைன்களினாலான ஆடைத் தினுசுகள்

| | | |
|---|---|---|
| சாறிகள்(சீக்குயின்ஸ்) | ~~4000/=~~ | 1500/= |
| மொடல் சாறி | ~~5500/=~~ | 2000/= |
| கொட்டன் சாறி | ~~1000/=~~ | 500/= |
| நெற் சல்வார் | ~~6000/=~~ | 4000/= |
| கொட்டன் சல்வார் | ~~5000/=~~ | 2500/= |
| TOP | ~~1600/=~~ | 800/= |
| T சேட் | ~~1600/=~~ | 800/= |
| மொடல்சேட் | ~~1800/=~~ | 900/= |



இது மட்டுமன்றி அனைத்து ஆடைவகைகளும் மாபெரும் மலிவு விற்பனை. இன்றே விரையுங்கள். உங்களுக்குப் பிடித்தமானதை அள்ளிச் செல்லுங்கள்.

Rasi Collections
**ராசி கலக்ஷன்ஸ் (ராசி சில்க்ஸ்)**

இல.199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: 021 222 5571


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டில் மின்சாரம் தாக்கி ஒருவர் சாவு

மட்டக்களப்பு, ஏப். 13

வீட்டில் மின்சாரம் தடைப்பட்டபோது மின்மானி பொருத்தப்பட்டிருந்த பெட்டியை பரிசோதனை செய்ய முயற்சித்த நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கினிகத்தேனை பிரதேச பகுதியில் நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் வீட்டின் உரிமையாளரான ஏ.நுவான் சந்துரங்க (வயது 34) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கினிகத்தேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் அதேவேளை சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கினிகத்தேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 13

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அரச புகைப்பட விழா – 2016 மற்றும் பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டி – 2016 ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று நல்லூர் உதவிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டியில் பங்குகொள்ள விரும்புவர்கள் விண்ணப்பங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவிடம் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-ரி)

## ஆண்டு விழாவும் விளையாட்டு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஏப்.13

புது வருடப்பிறப்பை முன்னிட்டு புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு விழாவும் 34 ஆவது விளையாட்டு நிகழ்வும் அம்பாள் விளையாட்டுக்கழகத்தின் 13 ஆவது விளையாட்டு விழாவும் நாளை வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது என்று சனசமூக நிலையத்தினரும், விளையாட்டுக்கழகத்தினரும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலைப் பேராசிரியர் கா.குகபாலன், வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை தவிசாளர் எஸ்.கே. சண்முகலிங்கம், புங்குடுதீவு பிரதேசசபை பொறுப்பதிகாரி கு.விஜயகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

---

### கண்ணீர் அஞ்சலி



**Dr. S. கனகரட்ணம்**

பிறப்பு 24.03.1945 இறப்பு 11.04.2016

மாபெரும் வைத்தியராய்
எம் மனதில் நிலைத்திருந்தீர்
மௌனமாய் நீர் எம்மோடு
இருந்தாலும் நீர் பேசும்
ஒவ்வொரு வார்த்தையும்
எம் மனதில் பதித்து வைத்தோம்
வைத்தியரே நீர் மறையவில்லை
நீர் எம்மோடு மௌனமாய் வாழ்கி றீர்....

அன்னாரின் இழப்பால் தவிக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
Dr.அனுராஜ் குடும்பம்

---

### 20 ஆவது ஆண்டு நினைவுகளுடன்



அமரர் **முருகேசு பாலசிங்கம்**
(சந்தம்புளியடி- காரைநகர்)


இருபது ஆண்டுகள் நிறைந்ததுவே
இதயமெங்கும் கொலுவிருத்திப் பூசிக்கின்றோம்
அருளும் ஆசியும் உங்கள் நினைவில் கலந்ததால்
அவனியெங்கும் வாழ்வாங்கு வாழ்கின்றோமப்பா

118/2, சிவராஜா அவனியூ, பலாலிவீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் வள்ளிப்பிள்ளை சின்னத்துரை**

தோற்றம் 25.08.1925 — மறைவு 14.03.2016

திதி: மாசிமாத பூர்வ பக்ஷ ஷஷ்டி

கடந்த 14.03.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி வள்ளிப்பிள்ளை சின்னத்துரை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.04.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

சிவன்கோயில் வீதி, மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

---

### நெஞ்சத்தில் நீங்கா நினைவுகளுடன் ஆண்டுகள் இரண்டு



அமரர் செல்வி **ஜெறோம் கொண்சலிற்றா**

மண்ணில் 1992.04.11 — விண்ணில் 2014.04.13


"நிச்சயமாகவே முடிவு உண்டு உன் நம்பிக்கை வீண்போகாது"
நீதிமொழிகள் 23:18

அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

---

### கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 16 . 12 . 1954 — மறைவு 11 . 04 . 2016

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினரும் கொழும்பு விவேகானந்த சபையின் தலைவருமான

**இரத்தினவடிவேல் சுரேந்திரன்**

அவர்களின் மறைவு இந்நாட்டு இந்து மக்களுக்கு பேரிழப்பு.
அவரின் மறைவினால் துயரில் மூழ்கியிருக்கும் அவரின் குடும்பத்தினரின் கவலையில் நாமும் பங்குகொண்டு அவர்களுக்கு இந்நாட்டு இந்து மக்களின் சார்பில் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அகில இலங்கை இந்துமாமன்றம்**

91/5,A.C.H.C கட்டடம்,
சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு 02,
தொலைபேசி: 0112 434 990, தொலைநகல்: 0112 344 720
மின்னஞ்சல் : hinducongress@gamil.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் சுவீகரிக்கப்பட்டால் மோசமான விளைவே ஏற்படும்

## நல்லாட்சி அரசை எச்சரிக்கிறார் சிவாஜி

யாழ்ப்பாணம், ஏப். 13
நாங்கள் பாய வேண்டுமா? இல்லையா என்பதை முதலமைச்சர்தான் தீர்மானிக்க வேண்டும். இனிமேலும் எங்காவது காணி சுவீகரிப்புக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி வரும். - இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

வடக்கு மாகாண சபையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை மீது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது-

வடக்கில் எந்தவொரு காணியும் சுவீகரிக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முதலமைச்சருக்குத் தெரிவிக்கின்றார். ஆனால் நடைமுறையில் காணிகளைச் சுவீகரிக்கின்றார். இரட்டை வேடத்தைப் போட்டுக் கொண் டிருக்கின்றார்.

தொடர்ச்சியாக காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. அதைத் தடுப்பதற்காக நாம் அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருக்கின்றோம். இதன் உச்சக் கட்டமாகத்தான், அரச அதிபரை அவரது அலுவலகத்தில் பூட்டி வைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டோம். நாம் அரச அதிபர் வேதநாயகனுக்கு எதிரானவர்கள் அல்லர். அவரது கதிரைக்கு எதிராகவே எமது நடவடிக்கையை மேற்கொண்டோம். அதனால் அரச அதிபர் வேதநாயகனுக்கு மன உளைச்சல் ஏற்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்புக் கோருகின்றோம். காணி சுவீகரிப்பு இனிமேலும் தொடருமாக இருந்தால் விளைவுகள் மோசமாக இருக்கும். இதனை நாம் நல்லாட்சி அரசுக்கு இங்கிருந்து எச்சரிக்கின்றோம். இது போன்று இனிமேல் போராட வேண்டுமா? அல்லது பாய வேண்டுமா? என்பதை முதலமைச்சரே நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் அரசுடன் பேசி முடிவெடுங்கள் - என்றார்.

(ற-5-ரி5-106)

## டியூப்லைட் சாப்பிட்ட சிறுவன் சிகிச்சையில்

கொழும்பு, ஏப்.13
சர்க்கஸ் நிகழ்வைப் பார்வையிடுவதற்குச் சென்றிருந்த 13 வயதுச் சிறுவனான மாணவன், அந்த நிகழ்வில் ஒரு அங்கமாக இருந்த டியூப்லைட்டை சாப்பிடும் சர்க்கஸைப் பார்த்து விட்டு அதைப் போன்று செய்ய முயன்று பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மஹியங்கனையைச் சேர்ந்த தரம் 8 இல் கல்வி பயிலும் மாணவனே, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சர்க்கஸ் பார்த்துக் கொண்டிருந்த சிறுவன், டியூப்லைட் சாப்பிடுவதை, அங்கிருந்த தனது நண்பர்களுக்கு செய்து காட்டுவதற்கு முயன்ற போதே, காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-ஜ-5)

## புங்குடுதீவு மாணவி வழக்கு இருவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13
புங்குடுதீவு மாணவி கொலை செய்யப்பட்ட வழக்கில் இறுதியாகக் கைது செய்யப்பட்ட இருவரின் விளக்கமறியல் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவி பாடசாலை சென்று கொண்டிருந்தபோது கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று அடுத்த மாதம் ஒரு வருடமாகவுள்ள நிலையில் வழக்குடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கடந்த மாதம் 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் கண்கண்ட சாட்சி என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது. ஏற்கனவே 10 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பதில் நீதிவான் இ.சபேசன் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ற-4)

## உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 13
பனங் கைப்பணியாளர்களுக்கு உபகரணம் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமைகாலை 9 மணிக்கு கிளிநொச்சி பனைஅபிவிருத்திச்சபையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் 50 பனங் கைப்பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதியும், கௌரவ விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் சீ. துரைசிங்கமும், பனை அபிவிருத்திச் சபை சிறு சுவடுகள் தலைவி திருமதி த.பவானியும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிமினல் குற்றம் புரிந்த இராணுவத்துக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

## பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 13

கிராம அலுவலர் ஒருவரின் கடமைக்கு இடையூறு விளைவிப்பது கிரிமினல் குற்றமாகும். அத்தகையை குற்றத்தைப் புரிந்த இராணுவத்தினருக்கு எதிராக இன்னும் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. - இவ்வாறு கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன்.

ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரனால் கொண்டு வரப்பட்ட பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மீன்பிடி அமைச்சர் மகிந்த அமர வீர அண்மையில் முல்லைத் தீவுக்கு வருகை தந்திருந்தார். இதன்போது தென்னிலங்கை மீனவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தெரிவித்திருந்தார். நாங்களும் மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் அமைச்சர் அவ்வாறு தெரிவித்து மூன்று நாள்களுக்குள்ளேயே 30 சிங்கள மீனவர்கள், மீன்பிடி அமைச்சினதோ எந்தவொரு தரப்பினதோ அனுமதியும் பெற்றுக் கொள்ளாமல் முல்லைத்தீவுக்கு வந்துள்ளனர்.

-இவ்வாறு அத்துமீறி வந்தவர்கள் தொடர்பில் தகவல் சேகரிப்பதற்காக கிராம சேவையாளர்கள் அங்கு சென்றுள்ளனர். இதன்போது தென்னிலங்கை மீனவர்கள் கிராம சேவையாளர்களைத் தாக்கியுள்ளனர். அத்துடன் தென்னிலங்கை மீனவர்கள் இராணுவத்துக்கு தகவல் கொடுத்துள்ளனர். அங்கு வந்த இராணுவத்தினர் தென்னிலங்கை மீனவர்களுக்கு சார்பாகச் செயற்பட்டுள்ளனர். கிராம சேவையாளர்களை அவர்களும் சேர்ந்து அடித்துள்ளனர்.

> சிவில் நிர்வாகத்தில் தலையீடு செய்வதற்கு இராணுவத்துக்கு அனுமதி கொடுத்தது யார்? கிரிமினல் குற்றம் செய்த இராணுவத்தினருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

கிராம சேவையாளர் ஒருவரின் கடமைக்கு இடையூறு விளைவிப்பது கிரிமினல் குற்றமாகும். சிவில் நிர்வாகத்தில் தலையீடு செய்வதற்கு இராணுவத்துக்கு அனுமதி கொடுத்தது யார்? கிரிமினல் குற்றம் செய்த இராணுவத்தினருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

குடிபோதையில் ஒருவர், கிராம சேவையாளரை தரக்குறைவாகப் பேசினார் என்பதற்காக நீதிமன்றம் சம்பந்தப்பட்ட நபருக்கு ஒருவார காலம் சிறைத்தண்டனை விதித்தது. இங்கே இராணுவத்தினருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனைவிட, முல்லைத்தீவில் தென்னிலங்கை மீனவர்கள் பணத்துடனும் - செல்வாக்குடனும் வருகின்றனர். முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அலுவலர் ஒருவரை பிரபல விடுதிக்கு அழைத்துச் சென்று தென்னிலங்கை மீனவர் ஒருவர் விருந்து வைத்ததை நானே நேரில் கண்டிருக்கின்றேன். இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படு கின்றது. இதனை உடனடியாக நிறுத்த முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இதே பிரேரணை மீது உரையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், எமது மாவட்டத்தில் இராணுவத்தினரால் மாத்திரம் பிரச்சினையில்லை. அங்குள்ள பொலிஸாராலும் பிரச்சினை இருக்கின்றது. ஒரு சம்பவம் நடைபெற்றால், அதன் மீது நடவடிக்கை எடுக்கையில், பொலிஸார் பாகுபாடு காட்டுகின்றனர். தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு நடவடிக்கையும், சிங்கள மக்கள் தொடர்பில் இன்னொரு நடவடிக்கையும் எடுக்கின்றனர்.

மாவட்டச் செயலகத்தில் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் நடந்த கூட்டத்தில், தென்னிலங்கை மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் தமக்கு முறைப்பாடு செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். சட்டவிரோதத்தைப் பிடிப்பதுதான் பொலிஸாரின் வேலை. ஆனால் அதைச் செய்யாமல் இவ்வாறு சாக்குப் போக்குச் சொல்கின்றனர் - என்றார். (ற-5-ரி5)

### தங்கத்துடன் கைதான பெண்ணுக்கு பிணை

நான்கு கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் இருந்து வந்த பெண்ணை யாழ். நீதிவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

கடந்த பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி பொலிஸாரின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று தெரிவித்து பொலிஸாரால் குறித்த பெண் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். சட்டவிரோதமாக தங்கத்தை கடல்மார்க்கமாக கடத்த முயற்சித்ததாக மாதகலைச் சேர்ந்த குறித்த பெண்ணுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இப்பெண்ணை 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்லுமாறு நீதிவான் சி, சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ற-103)

### நுவரெலியாவுக்கு மாடு கடத்திய மூவர் வவுனியாவில் சிக்கினர்



வவுனியா, ஏப்.13

கிளிநொச்சியிலிருந்து நுவரெலியாவுக்கு கால்நடைகளைக் கடத்தி இறைச்சிக்கு விற்பனை செய்த மூன்று பேரடங்கிய குழுவை நேற்றுக் காலை வவுனியா நகரில் வைத்து கைது செய்துள்ளனர் என்றுபோதை ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலிருந்து நுவரெலியாவுக்கு இறைச்சிக்காக கால்நடைகள் தொடர்ச்சியாகக் கடத்தப்பட்டுள்ளன. அது பற்றிய தகவல்கள் திரட்டப்பட்ட நிலையில், நேற்றுக்காலையும் கடத்தல் இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கால்நடைகளைக் கடத்திய குற்றச்சாட்டில் 3 பேரைக் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து கால்நடைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா. மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் போதை ஒழிப்பு பிரிவினரால் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டு, வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளனர் என்று கூறப்படுகின்றது.

கன்ரர் ரக கூடை அடைத்த வாகனத்தில் நான்கு இறைச்சி மாடுகள் ஏற்றப்பட்டு நுவரெலியாவுக்கு கொண்டு சென்றபோது, வவுனியாவில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது. வாகனச் சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணையின்பின்னர் அவர்கள் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-4)

### சுண்டிக்குளம் தொடுவாய் தடுப்பு சமாசத்தினரால் சீராக்கப்பட்டது

முல்லைத்தீவு, ஏப்.13

சுண்டிக்குளம் தொடுவாயின் தடுப்பை கண்டாவளை கடற்றொழிலாளர் சமாசத்தினர் தமது முயற்சியின் மூலம் கட்டியுள்ளனர்.

சுமார் ஆயிரம் மீனவ குடும்பங்கள் குறித்த பகுதியில் இறால் பிடியைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன. இந்த நிலையில் சுண்டிக்குளம் தொடுவாய் உடைந்திருந்தமையால் இறால்கள் கடலுக்குள் செல்லும் நிலை காணப்படுகின்றது. தொடுவாயின் தடுப்பு நீரால் அரித்துச் செல்லப்பட்டு, தொடர்ச்சியாக நீர் வெளியேறிக் கொண்டிருந்தமை சமாசத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

அதையடுத்து சமாச அங்கத்தவர்கள் நூறுபேர் இணைந்து ஒரே நாளில் தடுப்பைச் சீர் செய்துள்ளனர். இதன்மூலம் குறித்த பகுதியில் உள்ள இறால் குஞ்சுகள் வளரக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதால் இந்த ஆண்டும் குறித்த மீனவர்கள் தொழில் வாய்ப்பைப்பெற்றுக்கொள்ளக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது என்று- மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார். (ற-10)

### விபத்தில் இருவர் காயம்

வீதியோரத்தில் அமர்ந்திருந்து கதைத்துக் கொண்டிருந்தவர்களை வேகமாக வந்த வாகனம் மோதியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி- நுணாவில் மத்தியில்ஏ-9வீதியில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ற-9)

# விதை உற்பத்திப் பண்ணை நிலத்தை வர்த்தக மையத்துக்கு ஒதுக்கித் தருக

## வவுனியாவின் 16 பொது அமைப்புக்கள் வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

வவுனியா, ஏப்.13

வவுனியாவில் அமையவுள்ள வர்த்தக மையத்துக்காக தாண்டிக்குளம் விதை உற்பத்திப் பண்ணையில் இருந்து நிலத்தை வழங்கி உதவ வேண்டும் என மாவட்டத்தின் 16 பொது அமைப்புக்கள் ஒன்று கூடி முதலமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளன என்று வவுனியா ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஏற்பாட்டாளருமான சிவலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த வர்த்தக மையம் அமைக்கும் காணி தொடர்பில் ஓர் நிச்சயமற்ற தன்மை நிலவுகின்றது. இது தொடர்பாக மாவட்டத்தின் 16 அமைப்புக்கள் நேற்று முன்தினம் ஒன்று கூடி ஆராய்ந்தோம்.

அதன் நிறைவில் குறித்த வர்த்தக மையத்துக்கான நிலமாக தாண்டிக்குளம் விதை உற்பத்திப் பண்ணையில் எந்த உற்பத்தியும் செய்ய முடியாது என பல ஆண்டுகளாக ஒதுக்கி வைத்துள்ள மூன்று ஏக்கர் நிலத்தை வர்த்தக மையத்துக்காக வழங்கி உதவுமாறு முதலமைச்சரைக் கோருவது என்றும், கோரிக்கையை முதலமைச்சருக்கு எழுத்து வடிவில் அனுப்புவது என்றும் - தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய எமது கோரிக்கையை முதலமைச்சருக்கு அனுப்பியுள்ளோம்- என்றார்.

வவுனியாவில் ஓர் வர்த்தக மையம் அமைப்பதற்கு 2016ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு குறித்த நிதியும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுவிக்கப்பட்டது.

குறித்த பொருளாதார மைய கட்டடம் அமைப்பதற்காக நொச்சிமோட்டை மற்றும் தாண்டிக்குளம் ஆகிய இரு இடங்களில் காணிகள் பரிசீலிக்கப்பட்டன.

அதில் தாண்டிக்குளம் மூன்று கிலோ மீற்றருக்குட்பட்ட தூரத்திலும் பிற காணி 9 கிலோ மீற்றர் தூரத்திலும் உள்ளமையால் அதற்கு தாண்டிக்குளம் மட்டுமே பொருத்தமானது என திட்டத்தின் நிதி வழங்கும் அதிகார சபையும் பரிந்துரைத்தது.

இருப்பினும் பண்ணையின் தேவை மற்றும் புற நகர்ப்பகுதி அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு குறித்த நிலத்தைத் தவிர்த்து மற்றப் பகுதியில் அமைக்க ஆவன செய்யுமாறு முதலமைச்சர் பரிந்துரைத்திருந்தார்.

இந்த நிலையில் நகரின் மத்தியில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தூர எல்லைக்குள் காணி அமையாதுவிடின், குறித்த திட்டத்தை வவுனியாவில் அமைக்க முடியாது என குறித்த அமைச்சு தொடர்ந்தும் வலியுறுத்தி - வருகின்றது. (ற-101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கள – பௌத்தத்தைத் திணிக்கவே ராணுவம் வடக்கில் நிறுத்தப்படுகிறது

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 13
சிங்கள பௌத்த மேலாதிகத்தை வட பகுதியில் நிலை நிறுத்துவதற்காகவே பாதுகாப்புத் தரப்பினர் தொடர்ந்தும் இங்கு நிலை கொண்டுள்ளனர். தேசிய பாதுகாப்பு என்று கூறிக் கொண்டு இவர்களை இங்கு நிலை நிறுத்தி வைத்திருப்பது இதற்காகத்தான். முல்லைத் தீவில் கிராம சேவையாளர்கள் மீது தாக்குதல் நடத்தியது இதனையே எடுத்துக் காட்டுகின்றது.
- இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சியின் உறுப்பினர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன் போது ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரனால் கொண்டு வரப்பட்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை மீது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது-

கடந்த ஆட்சியில் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு இருந்தது. இந்த ஆட்சியில் மீன்பிடி அமைச்சராக இருந்த ராஜித சேனாரத்ன, முல்லைத்தீவில் 52 சிங்கள மீனவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது என்றும் ஏனையோருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தார். இதனைப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

> "கடந்த ஆட்சியில் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு இருந்தது. இந்த ஆட்சியில் மீன் பிடி அமைச்சராக இருந்த ராஜித சேனாரத்ன, முல்லைத்தீவில் 52 சிங்கள மீனவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது என்றும் ஏனையோருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தார். இதனைப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்"

சட்ட விரோதமாக அங்கு இருக்கும் தென்னிலங்கை மீனவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று அமைச்சர் உத்தரவிட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதே போன்று தான் அண்மையில் தற்போதைய அரசின் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்த உத்தரவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அமைச்சரின் உத்தரவைக் கூட நடைமுறைப்படுத்தவில்லை என்றால், இது இங்கு இராணுவ ஆட்சி நடப்பதையே காண்பிக்கின்றது. தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி இராணுவம் இங்கு இருக்கின்றது ஏன் என்பது இதனூடாக வெளிப் படுகின்றது. வடக்கின் பொருளாதாரம் - மதம் என்பவற்றை சிதைப்பதற்கே பாதுகாப்புத் தரப்பு இங்கு நிலை நிறுத்தப் பட்டுள்ளது.

தேசிய பாது காப்பு என்பது என்ன? இலங்கை மீது இன்னொரு நாடு படையெடுத்து வரப் போகின்றதா? பின்னர் என்ன தேசிய பாதுகாப்பு ? தேசிய பாதுகாப்பு இங்கு பிழையாக அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது. தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி நிலை கொள்ளச் செய்யப்படுகின்ற பாதுகாப்புத் தரப்பினர், வடக்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை திணிப் பதையே செய்கின்றனர் - என்றார். (ற-5-ரி5)

# சுகாதார சேவைகளுக்கான புதிய கட்டடங்கள் மன்னாரில் திறப்பு

மன்னார் ஏப். 13
சுகாதார சேவைகளுக்கான பல கட்டடங்களை வடக்கு மாகாண சுதேச வைத்திய சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாகத் திறந்தார்.



சுகாதார சேவையை வலுப்படுத்துவதை முன்மாதிரியாகக் கொண்டு எயிட்ஸ், கசரோகம், மலேரியா நோய்களை அழிப்பதற்கான கருத் திட்ட உலக நிதியத்தின் கீழ் மன்னாரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பல சுகாதார சேவைகளுக்கான கட்டடங்களே திறக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டடங்கள் 180 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நாடாளுமன்ற உறுபபினர், வட மாகாண அமைச்சர் மற்றும் உறுப்பினர்களுடன் இணைந்து குறித்த கட்டடங்கள் மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டன.

முசலி பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட சிலாவத்துறை பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை வட மாகாண சுதேச வைத்திய சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம் வைபவ ரீதியாக திறந்தார்.

அதைத் தொடர்ந்து முசலி சுகா தார வைத்திய அதிகாரி பணிமனை, நானாட்டான் பிரதேச வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, சிறுநாவற்குளம் மலோரியா தடை இயக்க அலுவலகம், மன்னார் எருக் கலம்பிட்டி பிரதேச வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, பேசாலை பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு என்பன வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்-

இந்தத் திட்டத்தின் மூலம் மன்னார் மாவட்டத்தில் சுகாதார சேவையில் புதிய மாற்றம் ஏற்படும் ஏற்படும். நோய் வரும் முன் காப்போம் என்ற செயற்றிட்டமும், நோய் வந்த பின் காப்போம் என்ற திட்டமும் எம்மால் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் போன்று மன்னார் பொது வைத்திய சாலையில் எதிர்காலத்தில் முக்கியமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க எமது அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. - என்றார்.

இந்த நிகழ்வுகளில் வட மாகாண கடற்றொழில் கிராமிய அமைச்சர் பா.டெனிஸ்வரன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன், வட மாகாண சபையின் உறுப்பினர்களான பிறிமூஸ் சிராய்வா, ஞானசீலன் குணசீலன், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் யூட் ரதினி, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சிசில் ரஜினி, சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ற-4,56)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு புத்தாண்டு விடுமுறை

யாழ்ப்பாணம்,பெப்.13
சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு கூட்டுறவுப் பணியாளர்களுக்கு விடுமுறை நாள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பவற்றை சங்கங்கள் சில வழங்கி வருகின்றன.

சங்கங்களின் இயக்குனர் சபை விசேடமாகக் கூட்டப்பட்டு பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய கொடுப்பனவுகளை புத்தாண்டுக்கு முன்னர் வழங்கி வைப்பதற்கும் சங்கங்கள் தயாராகி வருகின்றன.

அத்துடன் இந்த மாத சம்பளக்கொடுப்பனவையும் நிதி நிலைக்கு ஏற்றவாறு புத்தாண் டுக்கு முன்னர் வழங்கி வைப்பதற்கும் சங்கங்களின் இயக்குநர் சபைகள் முடிவெடுத்துள்ளன.

புத்தாண்டு முற்பணமாக சில சங்கங்கள் இம்முறை பத்தாயிரம் ரூபாவை பணியாளர்களுக்கு வழங்கி வைத்துள்ளன.

மேலதிக கொடுப்பனவு ஊக்குவிப்பு போன்ற கொடுப்பனவுகளும் இந்த புத்தாண்டு முற்பணத்துடன் சேர்த்து வழங்கப்பட்டு வருகின்றன.

அதே சமயம் 2015 ஆம் ஆண்டுக்கான லீவு நாள் கொடுப்பன வையும் சங்கங்கள் புத்தாண்டுக்கு முன்னர் வழங்கி வைக்கவுள்ளன. (ற-ஐ-17)

## வருடப் பிறப்பு விசேட பூசை

யாழ்ப்பாணம், ஏப். 13
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானத்தில் வருடப் பிறப்பு பூசை நடைபெறவுள்ளது என்று நிர்வாக சபை தெரிவித்துள்ளது. இன்று புதன் கிழமைமாலை6மணிக்கு 108 கலச சங்காபிசேகமும் இரவு 7.48 மணிக்கு வருடப்பிறப்புப் பூசையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

## விழுவெள்ளி அமையத்தின் பயிற்சிக் கூடங்கள் திறப்பு

சாவகச்சேரி,ஏப்.13
விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் தையல் மற்றும் கணினிப் பயிற்சிக் கூடங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டச்சு வீதி கிராம்புவில் பகுதியில் அமைந்துள்ள கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டன.



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் இ.கைலைநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நாடளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாணகல்விஅமைச்சர் த.குருகுலராஜா, மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைக்க, தையல் பயிற்சிக் கூடத்தை நாடளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், கணினிப் பயிற்சிக் கூடத்தை மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் திறந்து வைத்தனர். (ற-ஐ-9,131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கைவிடப்பட்ட காணிகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு

## விரைவில் நடத்தப்படவுள்ளது என்கிறார் காணி அமைச்சர் ஜோன் அமரதுங்க



கொழும்பு, ஏப். 13
வடக்கு, கிழக்கிலுள்ள கைவிடப்பட்ட காணிகள் தொடர்பிலும், காணி உரிமையற்ற மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவது குறித்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் விசேட சந்திப்பொன்று நடத்தப்படவுள்ளது என்று சுற்றுலாத்துறை கிறிஸ்தவ விவகார மற்றும் காணி அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

சட்டவிரோதமாக காணி உறுதிப்பத்திரங்களை கைமாற்றுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வத்தளை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட காணி உரிமையற்ற மக்களுக்கு நிரந்தர காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காணி அமைச்சில் இடம்பெற்றது. அதில் சிறப்பு பிரதிநிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போது நல்லாட்சி அரசின் அபிவிருத்தி திட்டங்களுக்கு பெரும் பலம் கிடைத்துள்ளது. காணி அமைச்சின் செயற்றிட்டங்களின் ஊடாக மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்ட மிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் தற்போது காணி தொடர்பான வரையறைகள் மற்றும் செயற்றிறன்களை உள்ளடக்கிய வகையில் காணி தொடர்பான விசேட சட்ட மூலமொன்றை கொண்டுவர திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் காணி உரித்தற்ற மக்களுக்கு விரைவாகவும் இலகுவாகவும் காணி உறுதிப் பத்திரங்களை வழங்க முடியும் என்று கருதுகின்றோம்.

எமது அமைச்சின் விசேட செயற்றிட்டத்தின்கீழ் வடக்கு, கிழக்கிலுள்ள கைவிடப்பட்ட காணிகள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. அதனடிப்படையில் வடக்கு கிழக்கிலுள்ள காணி உரிமையற்ற மக்களுக்கு உறுதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் விசேட சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

மக்கள் தங்களது காணி வரையறை மற்றும் எல்லைகள் தொடர்பில் சட்ட ரீதியான ஆவணங்களை வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். அத்தோடு தங்களது காணி தொடர்பில் முறையான வரி மற்றும் கொள்கைத்திட்டங்களை கையிருப்பில் வைத்திருப்பது தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றோம்.

கொழும்பு உட்பட நாட்டின் பல குடியிருப்பு தொகுதிகளில் சட்டவிரோதமாக காணிகளை விற்பனை செய்தமையாலும் மற்றும் காணி உறுதிப்பத்திரங்களை கைமாற்றியமையாலும் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.- என்றார்.

(ற-4)

# பிரதமர், பசில் இடையே இரகசியப் பேச்சுக்கள்!

கொழும்பு, ஏப். 13
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோருக்கு இடையில் இரகசிய கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றது என்று கடந்த காலங்களில் ஊடகங்கள் ஊடாக செய்திகள் வெளிவந்த போதும் அங்கு பேசப்பட்ட விடயங்கள் குறித்து எதுவும் வெளிவரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மகிந்த ராஜபக்ச இடையில் அதிகாரப்பூர்வமற்ற சந்திப்பொன்று கடந்த நாள்களில் இடம்பெற்றது.

அங்கு முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றது என்று தகவல்கள் கிடைத்துள்ளதோடு சந்திப்பின் இரகசியம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முழுமையாக ஒழிப்பது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு அவசியம் எனக் கருதப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதியின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லா தொழிப்பதற்கு தேவையான வேலைத் திட்டங்கள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் யோசனையையும் பெற்றுக் கொண்டுள்ளோம் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிக்க மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட எதிர்க் கட்சியினரின் ஒத்துழைப்பும் பெறப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் முன்னிலையாகாமை, பொதுத் தேர்தலின் போது பிரதமர் பதவியை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் பெறாமை, சிறிலங்கா சுதந்திர கட்சியை பிளவுபடுத்தல் போன்றவை முன்னாள் ஜனாதிபதியின் கவலையாகவுள்ளது என்பதோடு மேலும் வெற்றியை ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெற்றுக் கொடுக்க சந்தர்ப்பம் ஏற்படுத்துவதே ராஜபக்சவின் எதிர்பார்ப்பு என்றும் தெரியவருகிறது.

இவற்றுக்கு பதிலாக ராஜபக்ச குடும்பத்தினர் தொடர்பில் ஏற்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை பெறுதல், நாமல் ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்சவின் எதிர்கால அரசியலை பாதுகாத்து கொள்வது தொடர்பில் ராஜபக்ச குடும்பத்தினர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எதிர்ப்பார்ப்புடன் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

# கேள்விப் பத்திர நடைமுறையை மீறி நடக்கிறார் ஜனாதிபதியின் சகோதரர்

## கொழும்பு ஊடகம் குற்றஞ்சாட்டுகின்றது

கொழும்பு, ஏப். 13
இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான, டெலிகொம் மொபிடெல் தலைவர் குமார்சிங்க சிறிசேன அரசின் கேள்விப்பத்திர நடைமுறையை மீறி செயற்பட்டுள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக மொபிடெல் நிறுவனத்திற்கு 20 மில்லியன் டொலர் வரை நட்டம் ஏற்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனவரி மாதம் 8ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்களினால் கொடுக்கப்பட்ட வெற்றியை டெலிகொம் மொபிடெல் நிறுவனத்துக்கு தலைவராக நியமிக்க கொடுக்கப்பட்ட மக்கள் ஆதரவென தவறாக குமாரசிங்க சிறிசேன புரிந்துகொண்டுள்ளார் என்று அந்த ஊடகம் குற்றம் சாட்டியுள்ளது.

அவர் தன்னிச்சையான அரசின் கேள்விப்பத்திர நடைமுறையை மீறி தான் தலைவராக செயற்படும் அரை அரச நிறுவனமான மொபிடெல் நிறுவனத்தின் காப்புறுதி கேள்விப் பத்திரத்தையே மீறி செயற்பட்டுள்ளார்.

மொபிடெல் நிறுவனத்தின் காப்புறுதி தொடர்பில் பகிரங்கமாக கேள்விப் பத்திரத்துக்கு அழைத்துள்ள நிலையில், இரண்டு கேள்விப்பத்திர வாரியம் மூலம் மற்றும் மதிப்பிடும் குழுவின் மதிப்பீட்டின் பின்னர் பணிப்பாளர் சபை தீர்மானித்ததன் பின்னர் அதற்கு உரியவருக்கு அதனை வழங்காமல் சிறிசேனவின் தீர்மானத்தின்படி வேறு கேள்விப்பத்திரத்துக்கு மொபிடெல் காப்புறுதியை தீர்மானித்துள்ளார்.

இரண்டு கேள்விப் பத்திர வாரியம் மூலம் மற்றும் மதிப்பிடும் குழுவின் மதிப்பீட்டின் பின்னர் பணிப்பாளர் சபை குறைந்த கேள்விப் பத்திரத்தை தீர்மானித்திருந்த போதிலும் குமாரசிங்க சிறிசேன தனது விருப்பத்தின் படி வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம் 20 மில்லியன் டொலருக்கும் அதிகமான கேள்விப் பத்திரத்திரமாகும். இது ஒரு சிறிய விடயம் அல்ல 20 மில்லியன் டொலர் எனப்படும் 300 கோடியாகும்.

மொபிடெல் காப்புறுதிக்கு குறைந்த கேள்விப்பத்திரத்தை யூனியன் இன்சூரன்ஸ் நிறுவனம் சமர்ப்பித்திருந்தது. இது 140 அமெரிக்க டொலர் மில்லியனாகும்.

யூனியன் இன்சூரன்ஸ் நிறுவனம் சமர்ப்பித்திருந்த கேள்விப்பத்திரத்தையே இரண்டு கேள்விப்பத்திர வாரியம் மூலம் மற்றும் மதிப்பிடும் குழுவின் மதிப்பீட்டின் பின்னர் பணிப்பாளர் சபை அனுமதித்திருந்தது.

எனினும் குமாரசிங்க சிறிசேனவால் குறித்த கேள்விப்பத்திரத்தை யூனியன் காப்புறுதி நிறுவனத்திற்கு வழங்காமல் அதனைவிட 20மில்லியன்டொலர் அதிகமாக சமர்ப்பித்திருந்த ஸ்ரீலங்கன் இன்சூரன்சுக்கே வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கன் இன்சூரன்ஸ் முழுமையான அரச நிறுவனம் அல்ல அது அரை அரச நிறுவனமாகும்.

எப்படியிருப்பினும் அரச நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனமும் போட்டியிட்டு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் போது அரச கேள்விப்பத்திரத்தை மீறி செயற்படுவதற்கு ஒருவருக்கும் அனுமதியில்லை.

இதன்போது குமாரசிங்க சிறிசேன என்பவரால் அரை அரச நிறுவனமாக ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் நட்புறவுடன் செயற்பட்டுள்ளமையால் தான் தலைவராக செயற்படுகின்ற அரை அரச நிறுவனமாக மொபிடெல் நிறுவனத்துக்கு 300 கோடி நட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்.

அரை அரச நிறுவனத்தின் தலைவர் ஒருவரின் விருப்பத்துக்கமைய செயற்பட முடியும் என்றால் இரண்டு கேள்விப்பத்திர வாரியம் மூலம் மற்றும் மதிப்பிடும் குழுவின் மதிப்பீட்டின் பின்னர் பணிப்பாளர் சபையின் அனுமதி அவசியமற்றது. நேரடியாக தலைவரின் அனுமதிக்கமைய கேள்விபத்திரம் ஒன்றை தீர்மானிக்க முடியும்.

எப்படியிருப்பினும் தனது சகோதரர் நிறைவேற்று அதிகாரம் கொண்டுள்ள ஜனாதிபதியாக மக்களால் நியமிக்கப்பட்டுள்ளமையை தவறாக புரிந்து கொண்டே குமாரசிங்க சிறிசேன என்பவரால் தொடர்ந்து இவ்வாறு ஊழல்கள் நடத்தப்படுகின்றன என்று அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ற-4)

## ஜனாதிபதியின் பாதுகாப்பில் பிரச்சினை காணப்படுகிறது

கொழும்பு, ஏப். 13
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு தொடர்பில் பெரும் பிரச்சினை காணப்படுகின்றது என்றும் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் பிரஜைகள் அமைப்பின் ஏற்பாட்டாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பாதுகாப்புக்கெனவுள்ள ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு என்ன செய்து கொண்டிருக்கின்றது? என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். இதற்கு முன்னரும் பல தடவைகள் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருக்கும் போது மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதன்போது, மதுபோதையில் இருந்த இருவர் ஜனாதிபதியின் அருகில் சுற்றித் திரிந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இதுதொடர்பில் ஜனாதிபதி விசாரணைப் பிரிவில் முறைப்பாடொன்றும் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இது தொடர்பில் இதுவரையில் எந்தநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது நல்ல ஒரு நிலைமையல்ல எனவும் அவர் குறிப்பிட்டார். (ற-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் கைகோர்த்து நடக்கும் ஜனாதிபதிக்கு ஆபத்தில்லையாம்

## மகிந்தவுக்கே அச்சுறுத்தல் உண்டு என்கின்றார் விமல் வீரவன்ச எம்.பி.

கொழும்பு, ஏப். 13

புலிகளுடனும் புலம்பெயர் புலி அமைப்புக்களுடனும் இணைந்து தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு எப்போதும் புலிகளால் எந்த அச்சுறுத்தலும் இல்லை. அந்த வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சரத் பொன்சேகா ஆகியோரின் உயிருக்கு எப்போதும் அச்சுறுத்தல் இல்லை. ஆனால், புலிகளுக்கு எதிராகச் செயற்படும் மகிந்த ராஜபக்சவுக்கே இன்று உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது.- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பொது எதிரணியினரால் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு தொடர்பில் அரசு தற்போது வேடிக்கையாகக் கருத்துகளைத் தெரிவித்து வருகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பை நீக்கவேண்டும் என்ற கருத்துக்களையே தெரிவித்து வருகின்றார். ஜனாதிபதி பிரதமர் மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் நாட்டில் எந்தவித அச்சுறுத்தலும் இல்லை எனக் கூறுகின்றனர். அவ்வாறு கூறும் அனைவரும் இம்முறை ஜனாதிபதி தேர்தலின் போது புலிகளுடனும் புலம்பெயர் புலி அமைப்புகளுடனும் இணைந்தே தேர்தலில் வெற்றி பெற்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடமாகாண சபையினரும் எப்போதும் புலிகளுடன் கைகோர்த்து அரசியல் செய் பவர்கள். இன்று அவர்களின் கொள்கையால் நாட்டில் பிரிவினைவாதம் பலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறன நிலையில் புலிகளை ஆதரித்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சரத் பொன்சேகா ஆகியோரின் உயிருக்கு எப்போதும் அச்சுறுத்தல் இல்லை. ஆனால், மகிந்த ராஜபக்ச இலக்கு வைக்கப்பட்டுள்ளார். அவர் நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயங்கள் அச்சுறுத்தல் என்னவென நன்கு அறிந்துள்ளார். ஆனால் இன்று ஆட்சிக்கு வந்தவர்களுக்கு அந்த சம்பவங்கள் தெரியாது. அவ்வாறு இருக்கையில் அவர்களுக்கு தேசிய பாதுகாப்பு என்னவென்பது தெரியாது.

வடக்கில் புலிகளின் ஆதிக்கம் தலைதூக்கியுள்ளது. வடமாகாண சபையும் முதல்வரும் நாட்டில் பலமான பிரிவினை வாதக் கொள்கையை மேற்கொண்டு வருகின்றனர். இனிமேல் இவர்களுக்கு இடம்கொடுத்தால் நாட்டில் மீண்டும் ஒரு ஆயுத புரட்சி ஏற்படும். மக்கள் அதை தடுத்து நிறுத்த எம்முடன் கைகோர்க்க வேண்டும்- என்று தெரிவித்துள்ளார்.(ற-4)

# சம்பூர் விடயத்தில் இந்தியா ஆராய்ந்து முடிவெடுக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13

சம்பூர் அனல் மின் நிலைய விடயத்தில் இந்தியா மக்கள் நலன் கருதி சிந்தித்து செயற்படும் என நான் நம்புகின்றேன். இந்தியா எமது மக்களுக்கு பல விடயங்களில் உதவி செய்த நாடாகும். எனவே இந்தியாவுடனும் இலங்கை அரசுடனும் பேச்சு நடத்தி இந்த விடயத்தில் நல்ல முடிவை நாம் காண்போம். - இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



மூதூருக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்ட அவர் அனல் மின்நிலையம் தொடர்பாகவும் சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பான மக்களின் போராட்டம் குறித்தும் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சம்பூர் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமல் அவை முதலீட்டுச் சபையினூடாக தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டிருந்தன. அதில் 818 ஏக்கர் காணிகளை முதலில் நாம் விடுவிக்க முடிந்தது. பின்னர் கடற்படையினர் வைத்திருந்த 237 ஏக்கர் காணியையும் படையினரிடமிருந்து விடுவிக்க முடிந்தது. தற்போது அங்கு இந்தியாவின் உதவியுடன் அனல் மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அது தொடர்பான பிரச்சினை மக்களால் முன்வைக்கபட்டு வருகின்றன. இந்த விடயங்களில் எமது மக்களுக்கு பாதிப்புள்ளது. இதில் பல பிரச்சினைகள் உள்ளமை தொடர்பில் மக்கள் விடயங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்த விடயத்தைப் பொறுத்த வரை இதனை நாம் பக்குவமாகவும் நிதானமாகவும் அணுக வேண்டும். ஏனெனில் இந்தியா இத்திட்டத்தை அமைக்கவுள்ளது. இந்தியா எமக்கு பல வகையிலும் உதவுகின்ற நாடாகும். எனினும் மக்கள் இத்திட்டத்தால் பாதிப்பு ஏற்படும் என தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் இந்த விடயத்தை இந்தியாவும் ஆராயும் என நான் நம்புகின்றேன். இந்த விடயம் தொடர்பில் நாம் இந்தியாவுடனும் இலங்கை அரசுடனும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடனும் பேசி ஒரு முடிவைக் காண்போம்.

அதற்காக எவரும் அவசரப்படக்கூடாது. ஒருவருடன் கவலையளிக்கும் வகையில் நாம் செயற்பட முடியாது. இந்தியாவின் உதவியை நாம் உதாசினம் செய்ய முடியாது. இந்தியா பல விடயங்களில் பல சந்தர்ப்பங்களில் எமக்குதவியுள்ளது. எனவே எமது மக்கள் நிதானமாக சிந்தித்து பக்குவமாக செயற்பட வேண்டும். இந்தியாவும் இந்த மக்களின் பிரச்சினையை ஆராய்ந்து நல்ல முடிவை எடுக்கும் என நான் நம்புகின்றேன்- என்றார். (ற 4)

# கடற்படையின் தலைமையகம் அம்பாந்தோட்டைக்கு மாற்றம்

கொழும்பு, ஏப். 13

கடற்படையின் தென்பிராந்தியத் தலைமையகம், அம்பாந்தோட்டைக்கு மாற்றப்படவுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தகவல் வெளியிட்டுள்ளார்.

கடற்படையின் தென் பிராந்தியத் தலைமையகம், காலி துறைமுகப் பகுதியில் - எஸ்.எல்.என்.எஸ் தக்சிண என்ற பெயரில் இயங்கி வருகிறது.

இந்த கடற்படைத் தளமே, அம்பாந்தோட்டைக்கு மாற்றப்படவுள்ளது என்றுபிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். சீனத் தலைநகர் பீஜிங்கில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகப் பிரதேசத்தை அண்மித்து, சீனாவின் முதலீடுகள் இடம்பெறவுள்ளநிலையிலேயே, இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகப் பகுதியைச் சீனா தன் வசம் எடுத்துக்கொள்ளவுள்ளது என்று தகவல்கள் பரவுவதைத் தடுக்கும் நோக்கில், பெரும் கடற்படைத் தளம் அங்கிருப்பதை உறுதிப்படுத்தவே இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது என்று கூறப்படுகிறது. (ற-ஐ-5)

# உள்ளக விசாரணைப் பொறிமுறையை ஜெனிவாவில் சமர்ப்பிக்க நடவடிக்கை

## ஐ.நா. ஆணையாளரின் அறிக்கைக்கு முன்னதாக

கொழும்பு, ஏப். 13

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத்தொடரில் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல் ஹூசேன் இலங்கை குறித்த வாய்மூல அறிக்கையை வெளியிடவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக இலங்கை அரசு தனது உள்ளக விசாரணை பொறிமுறையை முன்வைக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதனை நோக்காகக்கொண்டு உள்ளக விசாரணை பொறிமுறையின் வடிவத்தை இறுதி செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட செயலணியானது மக்களிடம் கருத்துக்களையும் யோசனைகளையும் கோரியுள்ளது. அத்துடன் புதுவருடப் பண்டிகையின் பின்னர் மக்களுடன் நேரடி கலந்துரையாடல்களையும் இந்த விசேட செயலணி நடத்தவுள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றது என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பாக அரசால் முன்னெடுக்கப்படவுள்ள உள்ளக விசாரணைப் பொறிமுறையின் இறுதி வடிவமானது மே மாத இறுதியில் தயாராகும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் அந்தத் திட்டம் ஜெனிவாவுக்கு கையளிக்கப்படும்.

எதிர்வரும் ஜுன்மாதம் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நடைபெறவுள்ள பேரவையின் 32 ஆவது கூட்டத் தொடரில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் இலங்கை நிலைமை தொடர்பில் வாய்மூல அறிக்கையை வெளியிடவுள்ளார்.

இந்த நிலையிலேயே அதற்கு முன்னதாக இலங்கை அரசு உள்ளக விசாரணைப் பொறிமுறை குறித்த இறுதி வடிவத்தை தயாரிப்பதற்கு கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகிறது.

ஜுன் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடரில் அரசின் சார்பில் கலந்துகொள்ளவுள்ள உயர் மட்ட தூதுக்குழு உள்ளக விசாரணை பொறிமுறை குறித்து சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்தவுள்ளது. அத்துடன் உள்ளக விசாரணை பொறிமுறை வடிவமும் ஜெனிவாவுக்கு கையளிக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டத் தொடர்பில் அமைச்சர்கள் மட்ட தூதுக்குழு கலந்துகொள்ளும் என்றும்- வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூட்டத் தொடரில் இலங்கையின் சார்பில் உரையாற்றுவார் என்றும்- எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசு ஏற்கனவே உள்ளக விசாரணைப் பொறிமுறை தொடர்பில் அடிப்படைத்திட்டமொன்றை தயாரித்துள்ளது.

அந்த அடிப்படைத் திட்டத்தில் காணாமற் போனோர் குறித்த அலுவலகம் நட்டஈடு வழங்கும் செயற்பாடு, நீதித்துறை மற்றும் மீண்டும் ஒரு போர் நிகழாத வகையில் அரசியல் தீர்வு ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே, அந்த அடிப்படைத் திட்டத்தை முதன்மையாகக் கொண்டே இறுதி வடிவம் தயாரிக்கப்படவுள்ளது.

இது இவ்வாறிருக்க கடந்த பெப்ரவரி மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த செயிட் அல் ஹூசைன் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். அத்துடன் செய்ட்அல் ஹூசேன் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி வெளியிட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் வருடாந்த அறிக்கையில் இலங்கை தொடர்பிலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதில் இலங்கை பொறுப்புக்கூறல் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை அடைவதில் முன்னெடுக்கும் அதன் சொந்த செயற்பாடுகளில் முக்கிய பாடங்கள் காணப்படுகின்றன. தற்போது அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என தெரிவித்திருந்தார்.

காணாமற் போனோரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். இலங்கையைப் பொறுத்தவரையில் அடுத்த சில மாதங்கள் மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது என்றும் செயிட் அல் ஹூசைன் கூறியுள்ளார். (ற-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாதிக்கப்பட்டோருக்கு நீதி; உள்நாட்டில் சாத்தியமா?

வலிந்து காணாமற் போகச் செய்யப்பட்டவர்களுக்கு, ஏது நடந்தது, அவர்கள் என்னவானார்கள்--என்பது தொடர்பில், அனைத்துலக நிபுணர்கள் முன்னிலையில் விசாரணை நடத்தப்பட வேண்டும். அவர்களின் பூரண பங்கெடுப்புடன் அது நடைபெறுவதற்கு வகை செய்யப்படுவது அவசியமும், கட்டாயமும் ஆகும்.

நேற்று முன்தினம் மூதூரில் நடத்தப்பட்ட, காணாமற் போனவர்களின் உறவுகளின் ஆர்ப்பாட்டத்தில், மேற்கண்ட கோரிக்கை ஓங்கி ஒலிக்கப்பட்டது.

மூதூர் பிரதேச செயலகத்துக்கு முன்பாக, கவன ஈர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அவ்வேளை பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சார்பில், மனு வழங்கப்பட்டது. அதனை மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஊடாக, ஜனாதிபதிக்கு அனுப்புமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டமை பதிவுக்கு உரியதே.

பாதிப்புற்றவர்களுக்கு--அவர்களின் உறவுகளுக்கு--நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அந்த மனுவில் முதன்மைப்படுத்தப்பட்டது.

✱ பாதிப்புற்ற மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதோடு, தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்--

✱ பாதிப்படைந்துள்ள மக்களுக்கு, அனைத்துலக தரத்திலான, நட்டஈடுகள் கிடைப்பதற்கும் வகை செய்வது இன்றி அமையாதது--என்றும் அரசுக்கு வழங்கிய மகஜரில்-வேண்டுகையில்--வலியுறுத்தப்பட்டு உள்ளது.

இதேவேளை--

பாதுகாப்புத் தரப்பினரின் தேவைகளுக்காக, யாழ்ப்பாண மாவட்டத்தில், காணி சுவீகரிப்பு எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று உத்தரவாதம் தரவேண்டும் என்று கோரி--

யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு முன்னால், ஆனைக்கோட்டை-கூழாவடி மக்கள் போராட்டம் நடத்தியதும்--இங்கு தொட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மறு புறத்தில் -- முல்லைத்தீவில் -- தங்களுக்கு உரிய கடமைகளை, மேற்கொள்ள விடாது தடுத்த, இராணுவத்தினரின் "சண்டித்தனம்" குறித்த கவன ஈர்ப்புப் போராட்டம் நடத்தி உள்ளனர், கிராம சேவகர்கள்!

இராணுவமே! சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் தலையிடாதே! இராணுவக் கடமைகளுடன் மட்டும் நிறுத்திக்கொள்! அரச ஊழியர்களின் கடமைகளில் மூக்கை நுழைக்காதே--என்று அவர்கள் கடும் தொனியில் கருத்துக் கூறி உள்ளனர்.

அரசே! சிவில் உத்தியோகத்தர்கள் சுயமாகப் பணி செய்வதற்கு உரிய வழி வகைகளைச் செய்!- என்று போராட்டம் நடத்தினர்.

ஒட்டுமொத்தத்தில்-

தமிழர் பிரதேசங்களில், இப்போதைய அரசு, சிவில் நிர்வாகத் துறைகளில் அதீதமாக வேண்டுமென்றே, தனது நாட்டாண்மையைக் காட்டி, தமிழ் அதிகாரிகளையும் மக்களையும் மிதித்து உழக்கவே முன்னிற்கிறது.

ஆனால், அதனை நல்லாட்சி என்று மகுடம் இட்டு, வர்ணம் பூசுகிறது அரசு! அதுவே இன்றைய ஆட்சியின் குறிக்கோள் (Motto) ஆக உயர்கிறது.

அதற்காகவா மைத்திரி-ரணில் அரசுக்குத் தமிழ் மக்கள் தமது வாக்குகளை வழங்கினார்கள்? இது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய விவகாரமாக மாறுகிறது...!

# ராஜபக்ச–விக்கிரமசிங்க சந்திப்பு ஏற்படுத்தியுள்ள அரசியல் அதிர்வுகள்

சண்டேலீடர் அரசியல் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

திட்டமிடப்படாத சந்திப்பொன்று கடந்தவாரம் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதியும் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்சவுக்குமிடையில் இடம் பெற்றிருப்பதானது அரசியல் வட்டாரங்களில் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்களில் அதிர்ச்சி அங்கலாய்ப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் காணப்படும் நல்லுறவைக் கெடுக்கும் வகையிலான தமது சதித்திட்டத்தில் ராஜபக்சவினர் இப்போது இறங்கியிருக்கிறார் என்பதையே இது காட்டுகின்றது. பிரித்து ஆள்வது என்பதுதான் ராஜபக்சவின் கொள்கை என்பது அவருடைய முதல் தவணை ஆட்சிக்காலத்தில் தெளிவாக உணர்த்தப்பட்டிருந்துள்ளது. அவ்வாறு பிரிவினையை உறுதி செய்ததன் மூலம் பிரதான அரசியல் கட்சியில் பிறழ்வுகளையும் கட்சித் தாவல்களையும் ஏற்படுத்திய ராஜபக்ச எதிர்ப்புக்களை மிகவும் குறைத்துக் கொண்டு, தாம் நினைத்ததுபோல் ஆட்சி செய்யும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அதே பிரிவினைகளை ஏற்படுத்துவதில் ராஜபக்சவினர் இப்போதும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தமுறை ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுமே அவர்களின் குறியாகவிருக்கின்றது. ராஜபக்சவின் நெருங்கிய சகபாடிகளின் குழுவொன்று நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதற்கு ஐ.தே.கவின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள மறைமுகமான முறையில் செயற்பட்டு வருகின்றது.

கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் பிரதம மந்திரிக்கும் ராஜபக்சவுக்குமிடையிலான சந்திப்பு நிகழ்ந்திருக்கின்றது. இந்தக் கலந்துரையாடலின்போது எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பி.தினேஷ் குணவர்த்தனவும் அதில் கலந்து கொண்டிருந்தார். இந்தச் சந்திப்பானது முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புத் தொடர்பானது என்ற பரப்புரை செய்யப்பட்டிருந்தாலும், உரையாடல் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்துவதாய் இருந்துள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது, இன்றைய அரசின் சீனாவுடனான உறவுகளை உள்ளடக்கியதாகவும் அது இருந்துள்ளது. இந்தச் சந்திப்பின்போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பாக விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு என்னவென்று ராஜபக்ச வினவியுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு ஐ.தே.க. ஆயத்தமாக விருக்கிறது என்றும் அது தொடர்பான

> ராஜபக்சவின் நெருங்கிய சகபாடிகளின் குழுவொன்று நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதற்கு ஐ.தே.கவின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள மறைமுகமான முறையில் செயற்பட்டு வருகின்றது.

ஆலோசனைகளை சுதந்திரக் கட்சியின் பரிசீலனைக்கு ஏற்கனவே சமர்ப்பித்திருப்பதாகவும் விக்கிரமசிங்க பதிலளித்திருப்பதாகவும் தெரிவிக்கின்றது. மேலும், இது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசனைகள் கிடைத்ததன் பின்னர், தமது கட்சி மேற்கொண்டு நடவடிக்கைகளில் இறங்கவிருப்பதாகவும் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். இதனைக் கேட்டவுடனேயே எதிர்த்தரப்பினரும் நிறைவேற்று அதிகாரங்களை ஒழிப்பதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று ராஜபக்ச அவசரமாகப் பதில் அளித்திருக்கிறார். இவ்வாறு விக்கிரமசிங்கவைச் சந்தித்ததன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டிருந்த அறிக்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும். தேர்தல் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் தெரிவித்துப் பகிரங்க அறிக்கையொன்றை ராஜபக்ச விடுத்தார். இந்த இரண்டு வாக்குறுதிகளும் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி சிறிசேனவால் வெளிப்படுத்தப்பட்டிருந்த வாக்குறுதிகளே.


இந்தச் சந்திப்பு பற்றிய தகவல் வெளியானவுடனேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சிறிசேன ஆதரவாளர்கள் மத்தியில் அதிர்ச்சியும் அரசியல் குழப்பமும் தலைதூக்க ஆரம்பித்திருந்தது. அதேநேரம் நிறைவேற்று அதிகாரங்கள் தொடர்பாக இதுவரை காலமும் அமைதியாக இருந்து வந்துள்ள எதிர்த்தரப்பிலுள்ள சிலரும்கூட குழப்பமடைந்துள்ளனர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பாகக் கொள்கைப் பிரகடனமொன்றை வெளியிடுவதற்கு முன்னர் ராஜபக்ச தங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை என்பது அவர்களின் கவலை.

### ராஜபக்சவினரின் இரகசியத் திட்டம்

எதிர்த்தரப்பில் உள்ள தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன்ற தீவிர கொள்கைவாதிகள் இதுவரை நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுவது குறித்து வெளிப்படையாகப் பேசியிருப்பதாகத் தெரியவில்லை. ராஜபக்சவின் இந்தச் செயற்பாடானது நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும போன்றவர்களை தூர விலகிச் செல்லும்படி செய்துள்ளது. எதிர்த்தரப்பில் இருக்கும் அதேசமயம் சிறிலங்கா சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஜனாதிபதி சிறிசேனவுக்கு ஆதரவாக செயற்பட வேண்டும், அதேசமயம் ஐ.தே.கவை ஆதரிக்கலாகாது என்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிர்காலப் பொதுத் தேர்தல்களில் சிறிசேனவைப் போட்டியிட முடியாதபடி செய்துவிட்டு பிரதம மந்திரி பதவிக்கு போட்டியிடுவதற்கான வழி வகைகளை செய்து கொள்வது ராஜபக்சவின் தந்திரம் என்றும் கருதப் படுகின்றது.

நிலைப்பாட்டில் இவர்கள் இருந்து வருகிறார்கள். ரணில்விக்கிரமசிங்கவுடன் இரகசிய சந்திப்பொன்றை நிகழ்த்தியிருப்பதுடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக அறிக்கையும் விட்டிருப்பதானது சிறிசேனவுக்கு எதிரான உடன்பாடு ஒன்றை ஐ.தே.கவுடன் செய்து கொள்ளும் சதித்திட்டத்தில் ராஜபக்சவினர் இறங்கியுள்ளனர் என்பதை இது வெளிக்காட்டுவதாக அவர்கள் கருதுகிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதியானவர் எடுத்துள்ள இந்தப் புதிய நிலைப்பாட்டின் பின்னணியில் செயற்படுபவர்களில் முன்னாள் அமைச்சரும் ராஜபக்சவின் சகோதரருமான பசில் ராஜபக்ச இயங்குவதாக அறிக்கைகள் கூறுகின்றன.

ராஜபக்சவினர் இப்போது எடுத்துள்ள நகர்வானது ஒரே கல்லினால் இரண்டு பறவைகளை வீழ்த்தும் நோக்கம் கொண்டதாகும். பிரதமர் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி சிறிசேனவுக்கும் இடையிலான உறவுக்கு ஆப்பு வைக்கும் அதேநேரம், இப்போது பல்வேறு ஊழல் விசாரணைகளுக்குள்ளாகிவரும் தமது குடும்பத்தினரைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் ஐ.தே.கவுடன் உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதும் சிறிசேனவின் அரசியல் எதிர்காலத்தை நாசம் செய்வதும் நோக்கமாகும். எதிர்காலப் பொதுத் தேர்தல்களில் சிறிசேனவைப் போட்டியிட முடியாதபடி செய்துவிட்டு, பிரதம மந்திரி பதவிக்கு போட்டியிடுவதற்கான வழி வகைகளை செய்துகொள்வது ராஜபக்சவின் தந்திரம் என்றும் கருதப்படுகின்றது. ராஜபக்சவின் திட்டம் என்னவென்றால் அப்படியான ஒரு தேர்தலில் விக்கிரமசிங்க பெருமுயற்சியில்லாமல் பெரும் வெற்றியை இலகுவாகப் பெறுவார். அதேநேரம் சிறிசேனவும் ராஜபக்சவும் கட்சியில் உள்ள பிறழ்வு காரணமாகத் தோற்றுப்போவார்கள். அப்படியான ஒரு நிலைமையில் தங்கள் மீதுள்ள ஊழல் விசாரணைகளில் இருந்து இலகுவாக நழுவிக்கொள்ளலாம். ஐ.தே.கவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வெற்றி வாய்ப்புக்களை எடுத்துக்காட்டி இறுதியில் ராஜபக்சவினரை வெற்றி பெறச்செய்வதே அவர்களின் இப்போதைய திட்டமாகும்.

ராஜபக்ச குடும்பத்தினர் மீது நடத்தப் பட்டு வரும்விசாரணைகள்ராஜபக்சவின்தலைக்கு மேல் தொங்கிக்கொண்டிருக் கும் வாள் போன்று இப்போது அச்சுறுத்திக் கொண்டு இருக்கின்றது. எதுவானாலும் நிறைவேற்று அதிகாரங்களை இல்லாமல் செய்வதானது நாடாளுமன்றத்துக்குரிய பணி என்பதாக இதுவரை காலமும் ஜனாதிபதி மைத்திரிபால கூறிவந்திருக்கிறார்.

**அரசியல் கொலைகள்**

அரசியல்காரணங்களுக்காக இராணுவப் புலனாய்வாளர்களால் பல கொலைச் சம்பவங்கள் நடத்தப்பட்டிருப்பதான விவரங்களை குற்றிவியல் புலனாய்வு திணைக்களத்தினர் கண்டுபிடித்துள்ளனர். அவ்வாறான கொலைகளில் அரசியல்வாதியும் இராணுவ அதிகாரியுமான மேஜர் லக்கி அல்கம மற்றும் பொலிஸ் அதிரடிப்படையைச் சேர்ந்த எஸ்.எஸ்.பி. உபுல் செனவிரட்ன ஆகியவர்களின் கொலைகளும் அடங்கும் என்று சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கொலை பற்றிய விசாரணைகளின்போது இந்தத் தகவல்களும் கிடைத்துள்ளன. விடுதலைப் புலிகளின் உயர்மட்ட உறுப்பினர்கள் சிலருடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கொண்டிருந்த தொடர்புகளைப் பயன்படுத்தி இந்தக் கொலைகள் செய்யப்பட்டிருப்பதாக இராணுவப் புலனாய்வாளர்களால் நீதிமன்றக் கட்டளையொன்றை அடுத்து இரகசியப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் இந்த விவரங்கள் காணப்படுகின்றனவாம். 1999 டிசெம்பரில் ஜாஎலயில் நடந்த ஐ.தே.க. கூட்டத்தில் குண்டு வெடித்து மேஜர் அல்கம இறப்பதற்கு இராணுவப் புலனாய்வாளர்களே திட்டம் தீட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். கடந்த சில ஆண்டுகளில் நடந்துள்ள முக்கிய கொலைகள் தொடர்பில் இராணுவ மற்றும் புலனாய்வாளர்கள் சம்பந்தப்பட்டிருப்பதானது, இந்த விவகாரங்களை இந்த அரசு எவ்வாறு கையாளப் போகிறது என்ற வகையில் பலரும் திகைப்பில் மூழ்கியிருக்கிறார்கள். விசாரணைகளின்போது முன்னாள் பாதுகாப்புத்துறை உறுப்பினர்கள் மற்றும் முன்னைய பாதுகாப்புத்துறை முக்கிய தலைவர்களின் பெயர்கள் வெளிப்பட்டிருப்பதாகக் கூறுப்படுகின்றது. இவ்வாறான முக்கிய நபர்கள் மீது இன்னமும் ஏன் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. அந்த வகையில் சட்டத்தைச் செயற்படுத்தும் அதிகாரிகளால் இன்னமும் ஏன் முன்னாள் பாதுகாப்புத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ல் சரத்பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்கள் விசாரிக்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## வீதியோரங்களில் மரநடுகை முழுவீச்சில் இடம்பெற வேண்டும்

தற்போது கடுமையான வெயிலின் தாக்கத்தால் நாம் தவித்து வருகிறோம். காலையில் உதிக்கின்ற சூரியன்கூட வெப்பத்தை உமிழ்கின்ற கொடுமை இப்போது காணப்படுகின்றது.

இந்த நிலையில் காப்பெற் வீதிகளில் பயணிப்பவர்களின் நிலை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. குறிப்பாக மோட்டார் சைக்கிளில் மற்றும் சைக்கிள்களில் பயணிப்பவர்கள் பாலைவனத்தினூடாகச் செல்கின்ற அனுபவத்தைப் பெறுகின்றனர். காப்பெற் வீதியில் இருந்து எழுகின்ற வெப்ப அலைகள் கண்கள் உட்பட முகத்தை மோசமாகப் பாதிப்பதால் பயணத்தைத் தொடர்வதில் அதிக சிரமங்கள் ஏற்படுகின்றன.

முன்னர் வீதியோரமாக நிழல் தரும் பெரு விருட்சங்கள் பல காணப்பட்டன. இவை பயணிகள் இளைப்பாறிச் செல்வதற்குப் பெரிதும் உதவின. அத்துடன் வீதிக்கும் ஓரளவு நிழலைத் தந்து கொண்டிருந்தன. ஆனால், வீதி அகலிப்பின் போது இந்த மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு விட்டன. தறித்து எடுக்கப்பட்ட மரங்களின் இழப்பை ஈடு செய்யும் வகையில் மீள மரநடுகையும் இடம்பெறவில்லை. சில இடங்களில் மட்டுமே மரங்களின் மீள்நடுகை இடம்பெற்றதைக் காணமுடிகிறது. ஆனால் இது போதுமானதல்ல.

இந்தியாவில் உள்ள நெடுஞ்சாலை ஓரங்களில் பயன்தரு மரங்கள் இருப்பதை அங்கு செல்பவர்கள் காணமுடியும். இவற்றினால் பல நன்மைகள் கிடைக்கின்றன.

இவ்வாறானதொரு நிலை இங்கும் உருவாக வேண்டும்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் வீதியோரங்களில் மரநடுகை ஒழுங்காக இடம்பெற்றது. மரங்களும் வளர்ந்து காணப்பட்டன. ஆனால், அந்த மரங்கள்கூட பல்வேறு நோக்கங்களுக்காக அழிக்கப்பட்டு விட்டன.

இனியாவது சமூக நலனில் அக்கறை கொண்டவர்கள் வீதியோரங்களில் மரநடுகையை மேற்கொண்டால் மிக்க பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பொ.நாகராசா

## பஸ் சேவை இடம்பெறாததால் அவலப்படும் மீள்குடியமர்ந்த மக்கள்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஊடாக பஸ் சேவைகள் இடம்பெறாமையால் இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது தெல்லிப்பழைச் சந்தியூடாகவே பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன. சில வேளைகளில் அரச பஸ்கள் மகாஜனக் கல்லூரியூடாக சேவையில் ஈடுபடுகின்ற போதிலும், அந்தச் சேவைகளால் மக்கள் அதிக பயன் அடைவதில்லை.

தற்போது தந்தை செல்வாபுரத்தில் வசிக்கும் மீள்குடியமர்ந்த மக்கள் உட்பட ஏராளமானவர்கள் தெல்லிப்பழைச் சந்திக்குச் சென்று பஸ்சேவைகளைப் பெறவேண்டிய அவலநிலையில் காணப்படுகின்றனர். யாழ்ப்பாண நகரில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தெல்லிப்பழைச் சந்திவரை சைக்கிளில் வந்து பஸ் சேவையைப் பெற்று வருகின்றனர். யாழ்.நகரில் உள்ள போதனா வைத்தியசாலைக்குச் செல்கின்ற நோயாளிகளின் நிலைதான் மிகவும் பரிதாபமாகக் காணப்படுகின்றது. அவர்கள் பஸ்களைப் பிடிப்பதற்காகக் கொளுத்தும் வெயிலில் தெல்லிப்பழைச் சந்திக்கு நடந்துசெல்ல வேண்டியுள்ளது. சிலர் பணம் செலவழித்து ஓட்டோவில் சென்று இறங்குவதையும் காணமுடிகின்றது.

மீள்குடியமர்ந்த மக்கள் தமது அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வெளியிடங்களுக்குச் செல்வதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.


ஏற்கனவே இந்த விடயம் தொடர்பாக பலமுறை தெரிவிக்கப்பட்டபோதிலும், இன்று வரை பயன் எதுவும் கிடைக்கவில்லை.

அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் அதிக கவனம் எடுத்து மகாஜனக் கல்லூரி ஊடான பஸ்சேவைக்கு வழிவகுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செ.தவமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலமைப் பரிசில் பரீட்சையிலும் கடந்த காலங்களில் உயர் நிலையில் இருந்து வந்துள்ளது. 2014ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 25 மாணவர்கள் தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் 24 மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றனர். 5 பேர் சித்தியெய்தினர்.**



# புதிய எண்ணப்பாடுகளே சமூக மாற்றத்துக்கு வித்திடும்

தேவி பரமலிங்கம்

நவீன முற்போக்குக் கல்விச் சிந்தனையின்படி பாடசாலைகள், சமூக புனர்நிர்மாணத்துக்கான ஒரு முக்கிய சக்தியாக விளங்க முடியும். பாடசாலைக்கு வெளியே மாணவர்கள் வெற்றிகரமாக வாழ்வதற்குப் போதிய திறன்களையும் மனப்பாங்குகளையும் பாடசாலை பாட ஏற்பாடு வழங்குதல் வேண்டும் என்றும் இன்று வலியுறுத்தப்படுகின்றது. இதனையே யுனஸ்கோவின் அண்மைக் காலக் கல்விச் சிந்தனைகள் பாடசாலை பற்றிய இந்தப் புதிய விளக்கத்தை வரவேற்பதாய் அமைகின்றன. இவ்வாறான புதிய எண்ணப்பாடுகளை சமூக மாற்றத்துக்கான, சமூக ஐக்கியத்துக்கான வழிகளை உள்வாங்கித் தன்னை புதுப்பொலிவு பெறச் செய்து வருகின்ற செயற்பாட்டை நவாலி சென்.பீற்றர்ஸ்.றோ.க.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஊடாக நாம் காண்கிறோம்.

அண்மையில் இந்தப் பாடசாலையின் 135 ஆவது ஆண்டு விழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இங்கு இடம்பெற்ற புதுமை என்ன? என்று பார்த்தால் நவாலி ஊர் திரண்டு விருந்தினர்களை அழைத்த காட்சி மிகவும் மனதைக் கொள்ளை கொண்டது. அங்கு நின்றவர்கள் தங்களுக்கிடையே பேசிக்கொண்டார்கள். இப்போ நல்ல அதிபர் நல்ல ஆசிரியர்கள் இணைந்ததால் இன்று ஊரே கூடி நின்று தேர் இழுப்பதுபோல அமைந்தது என்றார்கள்.

நல்லைக் குருமகா சந்நிதான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் சிறிய பாடசாலையாயினும் சமூகம் ஒன்று சேர்ந்ததால் இந்து, கிறிஸ்தவர்கள் என்ற பேதமில்லாது இணைந்து விழா எடுப்பது சிறப்புக்குரியது என்றார். தொடர்ந்து பேராசிரியர் மா.சின்னத்தம்பி தமது உரையில் ஒழுங்கமைப்பால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அதனுடன் தொடர்புபட்டவர்களை வழிநடத்திச் செல்லும் பணியான தலைமைத்துவம் இங்கு சிறப்பாகச் செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தலைமைத்துவம் ஒழுங்கான கட்டமைப்பை உருவாக்கல், குழுச் செயற்பாடுகளை நெறிப்படுத்தல், தொழில்நுட்பப் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களை அனுசரித்தல் ஊழிய வளத்தில் இருந்து உச்சப் பயனைப் பெறல். இலக்குகளிடையில் இணக்கத்தை ஏற்படுத்தல் என்கின்ற முக்கியத்தைக் கொண்டது. இவ்வாறான ஒரு செயற்பாடு இங்கு உள்ள தலைவர் க.ஸ்ரீநந்தகோபனால் நடைமுறைப்படுத்தப்பட்டமையை இன்றைய விழாவின் உச்ச நிலையில் இருந்து காண்கிறோம். சமூகம் சார்ந்து பாடசாலையைக் கட்டியெழுப்புவது மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அதி.வணக்கத்துக்குரிய கலாநிதி ஜஸ்ரின் பேணால்ட் ஞானப்பிரகாசம் யாழ்.ஆயர் தமது உரையில் எனக்கும் நவாலிப் பகுதிக்கும் நீண்ட தொடர்பு உண்டு என்றும் தான் இந்தப் பகுதி கத்தோலிக்கக் கோட்டத்துக்குப் பொறுப்பாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

இப்பாடசாலையானது தேசிய நிலை வரை மாணவர்களின் சாதனைப் படைத்துள்ளது. புலமைப் பரிசில் பரீட்சையிலும் கடந்த காலங்களில் உயர் நிலையில் இருந்து வந்துள்ளது. 2014ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 25 மாணவர்கள் தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் 24 மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றனர். 5 பேர் சித்தியெய்தினர்.

2015 ஆம் ஆண்டு 26 மாணவர்கள் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று வடக்கு மாகாண சான்றிதழ்களையும் பெற்றனர். தனி நடனம் வலய மட்டம் முதலாம் இடம் சென்ற வருடம் பெற்றமை, சதுரங்கம் மாகாணம் 4 ஆம் இடம் பெற்றமை, கோட்ட மட்டத்தில் ஆங்கிலக் குழுப்பாடல் இரண்டு இடங்களைப் பெற்றது. சிறுவா நாடகம் கோட்ட மட்டத்தில் 2 ஆம் இடம்பெற்றது.

மேலும் கடந்த ஆண்டு சமூகத்தில் உள்ளவர்களின் நிதிப் பங்களிப்பால் அதிபர் அலு வலகம், கட்புல, செவிப்புல சாதனக்கூடம் புனரமைப்புச் செய்யப்பட்டது. தற்போது எமது பாடசாலை அண்மை யில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை என்ற செயற்றிட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு மேலும் சிறந்த மாதிரிப் பாடசாலையாக வளம் பெற உள்ளது என்றும் சகல வளர்ச்சிக்கும் ஒத்துழைக்கும் சமூகத்தவர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப் பாளர், கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செய லாளர் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து அதிபர் தமது உரையை நிறைவு செய்தார்.

இளவாலை சென்.கென்றீஸ் கல்லூரி அதிபராக இருந்த பொழுது நான் இந்தப் பகுதி மக்களுடனும் இந்தப் பாடசாலையுடனும் நிறையவே பழகியுள்ளேன். அதன் நிலைகள் ஒவ்வொன்றும் எனக்குத் தெரியும். பாடசாலை தற்பொழுது உள்ள அதிபரின் அமைதி, பொறுமை, சாந்தம் போன்ற நற்குணங்களால் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் கட்டிவளர்க்கப்படுவதை இங்கு உரையாற்றியவர்களின் உரையின் தன்மையிலும் இன்றைய இந்த விழா ஒழுங்கின் தன்மையிலும் நிறையவே அறிய முடிகின்றது. அதிபரின் ஆளுமையால் பாடசாலை, அதன் சமூகம் என்பன ஒன்றித்த நிலை, இதனைவிட இந்து மக்களும் கிறிஸ்தவ மக்களும் ஒன்றிணைந்து விழா எடுப்பது மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. குறிப்பாக இந்து சகோதரர்கள் என்னை வரவேற்றார்கள்.

உண்மையிலேயே இந்தப் பகுதியில் மதப்பிரிவு இல்லாமல் எல்லோரும் ஒற்றுமையாக இருப்பது சிறப்புக்குரியது. இந்தப் பாடசாலை முன்னைய அதிபர்கள், ஆசிரியர்கள் தற்போதைய அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் இந்தச் சமூகத்தில் வாழும் அனைத்து மக்களும் நற்சிறப்புக்களைப் பெற்று இன்புற்று இருக்க இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு கைதியின் வாக்குமூலம்

-புலோலியூர் காவியா-

இலங்கையில் இருக்கின்ற 22 சிறைச்சாலைகளிலும் ஆயிரக் கணக்கான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஏதோவொரு குற்றச்சாட்டின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டவர்களாகவும் சந்தேக நபர்க ளாகவும் மேலும் வழங்கப்பட்ட தண்டனை யினை மேல் முறையீடு) செய்தவர்களாகவும் மூன்று பிரதான தொகுதியினர் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இன்னும் சற்று விரிவுபடுத்திப் பார்ப்போமானால் கைதிகளுள் 20 நாள்முதல் 200 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளவர்கள், இரட்டை ஆயள் தண்டனை வழங்கப்பட்டுள்ளவர்கள். முரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் எனப் பல வகையினர் உள்ளனர். யாதேனுமோர் குற்றச் செயல் புரிந்த கைதிக்குரிய தண்டனை யினை வழங்கும் அதிகாரம் கௌரவ நீதிபதி ஒருவருக்கு மட்டுமே உண்டென்பது எமது நாட்டு சட்டத்தின் நியதி. எனினும் சிறைக்கைதி களில் அனேகமானவர்கள் அதிகாரமற்ற தரப் பினரால் தண்டிக்கப்படுவது சர்வ சாதாரணமாகி விட்டது. அதாவது ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல்காவல் காலப் பகுதியில் சந்தேக நபர்மீது உண்மை அறிதல் எனும் வியாக்கியானத்தின் கீழ் பல வகை யிலும் சித்திர வதைகள் மேற்கொள்ளப்படு கிறது. இதனைத் தாங்கிக்கொள்ளமுடியாத ஒரு சிலர் தற்கொலை செய்து கொண்டுள்ள பதிவுகளும் இல்லாமலில்லை. கடந்த காலங் களில் இவ்வாறு துன்புறுத்தல்களுக்கு ஆளா கியவர்களில் அனேகமானவர்கள் பயங் கரவாத தடைச்சட்ட விதியின் கீழ் கைது செய் யப்பட்டிருந்தவர்கள் என்றால் மிகையில்லை. சுந்தேக நபர்களின் தடுப்புக்காவல் நிறை வடைந்ததும் அவர்கள் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள். இதன்போது துன்புறுத்தலுக்குள்ளானமை தொடர்பில் யாரும் வாய் திறப்பதில்லை. காரணம்: ஏற்கனவே விசாரணையாளர்களால் கைது செய்யப்பட்டவர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதுவே. இதனை யடுத்து சந்தேக நபர்கள் குறித்த நீதவான் நீதிம ன்றங்களினூடாக விளக்கமறியலின் நிமித்தம் சிறைச்சாலைகளுக்கு ஒப்படைக்கப்படுகிறார்கள். அடுத்தபடியாக சிறைச்சாலைகளிலும் கைதிகள் துன்புறுத்தல்களை எதிர்கொள்ளவேண்டியேற்படு கிறது. புதிதாக சிறைப்படுத்தப்படும் கைதிகளுக் கான ஆரம்பகட்ட பதிவுகள் இடம்பெறுகின்ற போது கைதிகள் மீதான குற்றச்சாட்டுக்களை கேட்டறியும் சிறைக்காவலர்கள் குற்றச்சாட்டின் தன்மைக்கேற்ப அவர்கள் மீது தமது சினத்தையும் சீற்றத்தையும் வெளிப்படுத்தி துன்புறுத்துகிறார்கள். இவை யனைத்தும் எழுதப்படாத சட்டத்தின் கீழ் அறங் கேறுவது வழமையாகிவிட்டதால் எவரும் அலட் டிக்கொள்வதில்லை "தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தானே தெரியும்" சிறைச் சுவர் களில் "கைதிகளும் மனிதர்களே" என கொட்டை எழுத்துக்களில் பொறித்து வைத்துக் கொண்டுதான் இந்தக் காரியங்கள் எல்லாம் இடம்பெற்று வரு கின்றமை குறிப்பிடக்கூடியதே. எவ்வாறாயினும் இதுபோன்ற அச்சுறுத்தல்களி லிருந்து அரசியல் வாதிகளும் பிரபலங்களும் போதைப்பொருள் வியாபாரிகளும் விலக்களிக் கப்பட்டு விலங்கிடப் படாது வரவேற்கப்படுவது சிறைச்சாலைகளில் வழ மையானதொரு கலாசாரமாகிவிட்டது. வெள் ளையர் ஆட்சிக்காலம் தொடங்கி இன்று வரை சிறைக்கூடங்களில் "தனி மனித செல்வாக்கு" தழைத்தோங்கியவண்ணமே உள்ளது. சிறை களில் இருக்கக்கூடிய போதைப் பொருள் வியா பாரிகளும் அரசியல் செல்வாக்குள் ளவர்களும் எப்படி வெளியில் சுகபோகங்களுடன் வலம் வந் தார்களோ அதற்கு நிகராக சிறைக் குள்ளும் செல் வாக்காகவே இருக்கின்றார்கள். இதற்கு சிறையதி காரிகளின் பரிபூரண ஆசீர்வாதம் அவர்களுக்கு எப்போதும் உண்டு. இத்தகைய உபசாரங்களுக்கும் சலுகைகளுக்கும் தூண்டு தலாக அமைவது சிறைச்சாலை உத்தியோகத் தர்களுக்கு பிர பலங்களால் வழங்கப்படுகின்ற பணம் மற்றும் பொருள் வடிவிலான தாராள கையூட்டல்களே. இதனால் சிறைகளில் இருக் கின்ற சாதாரண கைதி களின் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள் கூட கண்டுகொள்ளப் படாதுள்ளது. கீழ் நிலைக் கைதி கள் தமது குறுகிய தேவைகளை ஈடு செய்து கொள்வ தற்காக சிறைக்குள் செல்வந்தர்களுக்கு கால் கை பிடித்து விடுவது முதல் உடுபுடைவை கழுவு வது என சேவகம் நீண்டு செல்கிறது. சில சிறைச்சாலைகளில் பிரபலங்களுக்கென பிரத்தியேக விடுதிகளும் இயங்கி வருவதாக அறிய முடிகின்றது. குறித்த விடுதிகளில் தங்கு தடையில்லா நீர் விநியோகம், மின்விசிறி வசதி கள், விசேட உறவினர் சந்திப்பு என எண்ணற்ற வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாம். இந்த நிலையில்தான் "சட்டத்தின் முன் அனை வரும் சமமானவர்கள்" என்ற பதம் பலராலும் பாவிக்கப்பட்டு வருகிறது. எனவே நாட்டில் மலர்ந்துள்ள நல்லாட்சியில் இவ்வாறு பின் தள்ளப்பட்டுள்ள அரச திணைக்களங்களின் செயற்திறன்களைப் பரிசீலித்துஒன்றுபட்ட ஊழலற்ற இலங்கையை கட்டியெழுப்பதுறை சார்ந்தவர்கள் முன்வரவேண்டும்.

**சிறைகளில் இருக்கக் கூடிய போதைப் பொருள் வியாபாரி களும் அரசியல் செல் வாக்குள்ளவர்களும் எப்படி வெளியில் சுக போகங்களுடன் வலம் வந்தார்களோ அதற்கு நிகராக சிறைக் குள்ளும் செல்வாக் காகவே இருக் கின்றார்கள். இதற்கு சிறையதி காரிகளின் பரிபூரண ஆசீர்வாதம் அவர்களுக்கு எப்போதும் உண்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அலுமினிய உடையில் திருட வந்தோர் சிக்கினர்

ரியோடி ஜெனிரோ, ஏப்.13
தெற்கு பிரேசிலில் வங்கியைக் கொள்ளையிடச் சென்ற திருடர்கள் அலுமினிய உடையுடன் சென்று பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

இவர்கள் சுவரை உடைத்துச் சென்று வங்கியைக் கொள்ளையிட முயற்சித்தனர். ஆனால் அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் அவர்களின் நகர்வை காவலாளி அவதானித்தார். உடனடியாகப் பொலிஸார் வரவழைக்கப்பட்டுத் திருடர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

கதிரியக்க தொழிற்பாடுகளால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக உலோக ஆடைகளை அணிந்து வந்தவர்கள் கண்காணிப்புக் கமராவில் சிக்கியது பொலிசாரிடம் நகைப்பை ஏற்படுத்தியது.

இந்தத் திருட்டில் மேலும் இருவர் தொடர்புபட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த-ரி4)

# ஐரோப்பாவில் அகதிகளா… தொற்றுநோய்கள் அதிகரிப்…

## சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எச்சரிக்கை

பாரிஸ், ஏப்.13
ஐரோப்பாவில் நோய்த்தொற்றுக்கள் பெருகுவதைத் தவிர்க்கச் சுகாதார அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை அதிகரிக்கவேண்டும் என நிபுணர்கள் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

புகலிடம் தேடி வரும் அகதிகள் ஐரோப்பாவில் இல்லாத புதிய கிருமிகள், தொற்றுகள், நோய்கள் என்பவற்றுடன் நுழைகின்றனர் என ஐரோப்பிய மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நுண்ணங்கியியல்தொடர்பான மாநாட்டில் எயிட்ஸ், காசநோய், ஷிகல்லா, சிரங்கு மற்றும் பிற ஒட்டுண்ணித் தாக்கம் என்பவற்றின் தொற்றுக்கான சாத்தியம் அதிகரித்துள்ளதாக நிபுணர்கள் மாநாட்டில் தெரிவித்தனர்.

ஐரோப்பிய சமூகத்தின் மருத்துவ நுண்ணுயிரியல் மற்றும் தொற்று நோய்க்கான ஆவணம் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆவணத்தில் புதிய நோய்த் தொற்றுக்கான சவால்கள், ஆபத்துக்கள் தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டிருந்தது. கடந்த 2 வருடங்களாக ஐரோப்பாவுக்கு அகதிகள் படையெடுத்த வண்ணம் உள்ளனர். கடந்த வருடத்தில் மாத்திரம் 1.25 மில்லியன் அகதிகள் ஐரோப்பாவுக்கு குடி பெயர்ந்துள்ளனர். 2014ஆம்ஆண்டு 5 லட்சத்து 64 ஆயிரம் பேர் தஞ்சம் புகுந்தனர். தற்போதைய எண்ணிக்கை முந்தைய எண்ணிக்கையின் இரு மடங்காகும்.



அகதிகளினால் இலகுவாக நோய்கள், வைரஸ்கள் கடத்தப்படுகின்றன என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் முகாம்களில் வசிப்பவர்களுக்கு உரிய சுகாதார வசதிகள், வாழ்க்கைத் தரம் என்பன மேம்பட்டு இருப்பதில்லை. இத்துடன் அவர்கள் தொடர்ந்து பயணிப்பதால் சுத்தத்தைப் பேணுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு. எனவே கிருமி காவிகளாகவும், நோயைப்பரப்புபவர்களாகவும் இருக்கின்றனர் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அகதிகளிடம் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் இருந்து நோய் பரவும் விதம் சாதாரண வேகத்தை விட 10 மடங்கு அதிகமாகப் பரவுகின்றது என தெரிய வந்துள்ளது.

டென்மார்க்கில் நடத்தப்பட்ட ஆய்வில், டென்மார்க் நாட்டவர்களை விட 5 மடங்கு அதிகமான எண்ணிக்கையில் அகதிகளில் எயிட்ஸ் நோயாளிகள் காணப்படுகின்றனர் என அறியப்பட்டுள்ளது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு சுகாதார அதிகாரிகள் முழு மூச்சுடன் செயற்படவேண்டும். நோய்த் தொற்றுக்கான நடவடிக்கைகளை நாம் மேற் கொள்ளவேண்டும். … களைப் பாதுகாக்கும் அதே… நாட்டு மக்களின் நலனிலு… கறை செலுத்தவேண்டும். … ளுக்குச் சிகிச்சை மேற்கொ… மருத்துவமனைகளில் … தொற்றுக்கான சந்தர்ப்பங்க… கம். இவற்றுக்கான முன் எச்ச… யுடன் நாம் செயற்பட வேண்… அந்த மாநாட்டில் நிபுணர்க… ரிக்கை விடுத்தனர்.



வெடிமருந்தின் வெடிப்பு மூலம் ஓவியங்கள் உருவாக்குவதை காய்- குவோ குவியாங் என்பவர் செய்து வருகிறார். இவரது துப்பாக்கிச் சன்னப் பவுடர் ஓவியம் பிரபல்யமானது. கலையை வேறு பரிமாணத்தில் படைத்து வருகிறார். ஓவிய அமைப்பில் வெடி மருந்தை ஒழுங்கு செய்து அதனை வெடிக்க வைத்து ஓவியத்தை வரைகிறார். ஆயுத வெடி மருந்தைக் கலைக்காக பயன்படுத்தும் இவரது இந்த முறை பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. (த-ரி4)


# 100 வருடங்களின் பின்… புலி எண்ணிக்கை உயர்…

புதுடில்லி, ஏப்.13
உலகப் புலிகளின் தொகை 100 வருடங்களின் பின்னர் வரல… முதல் தடவையாக அதிகரித்துள்ளது. ரஷ்யா, வியட்நாம் கா… புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனச் சர்வதேச… துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1900 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக இந்த … கிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு பெறப்ப… ணிக்கை 3 ஆயிரத்து 200 ஆகும். இதன் பின்னர் நடத்… எண்ணிக்கையில் 3 ஆயிரத்து 890 என்ற எண்ணிக்கை… பட்டுள்ளது.

உலகப் புலிகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் மே… புலிகள் இந்தியாவில் இருப்பதாகவும், அவற்றின் எண்ணி… ஆயிரத்து 226 எனவும் மேற்கொள்ளப்பட்ட கணக்கெ… தெரிய வந்துள்ளது.

உலக விலங்கு அமைப்பும், உலகப் புலிகள் அமைப்பும் … தரவுகளைப் பெற்றுள்ளன. நிபுணர்கள் இந்த மாற்றத்துக்கு… மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர். மேலும், பல இடங்களில்… கெடுப்பு மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர்கள் தெரிவி… 1900 ஆம் ஆண்டளவில் 1 லட்சத்துக்கும் அதிகமான … காணப்பட்டன. 100 வருடங்களில் இந்த எண்ணிக்கை 3 ஆ… 200 என… அடைந்… போது … எண்ணி… யில் சிறி… னேற்றத்… கொண்டு… எனக் கூ… கின்றது.



இந்த ம… நாம் சரி… பாதையில்… கிறோம் …தைக் காட்டுகிறது எனச் சர்வதேச வன உயிர்கள் அதிகாரி … ஹம்லே தெரிவித்தார்.

மேலும் 13 நாடுகளின் தேசிய புலிகள் பாதுகாப்பு அ… மாநாடு புதுடில்லியில் இடம்பெறுவதற்குச் சில நாள்களுக்… னர் இந்த எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டளவில் புலிகளின் எண்ணிக்கையை இ… காக அதிகரிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# யூரோ கிண்ண உதைபந்தாட்டம்; தாக்குதல் நடத்த ஐ.எஸ். திட்டம்

பிரான்ஸில் நடைபெறவுள்ள யூரோ வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின்போது ஐ.எஸ். தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக விசாரணை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். பெல்ஜியக் குண்டு வெடிப்பில் கைது செய்யப்பட்ட முகமட் அப்ரினியை விசாரித்தபோது இதனை அவர் தெரிவித்ததாகப் புலன் விசாரணை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

அப்ரினின் கூற்று உண்மையானதா என்பது குறித்த விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

பிரஸ்சல்ஸ் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட மடிக்கணினி குப்பைத் தொட்டியில் இருந்து மீட்கப்பட்டது. இந்த மடிக்கணினியை ஆராய்ந்ததில், பாரிஸில் அமைந்துள்ள வர்த்தக மையம், கத்தோலிக்க அமைப்பு என்பன தாக்குதலுக்காகக் குறிவைக்கப்பட்டிருந்தன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதத்தில் இருந்து, ஜூலை மாதம் வரை பிரான்ஸில் உள்ள நகரங்களில் யூரோ கிண்ண உதைபந்தாட்டம் இடம்பெறவுள்ளது. சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும்.

கண்டெடுக்கப்பட்ட மடிக்கணினியில், 16 நிமிட ஒலிப்பதிவு ஒன்றில் பிரஸ்சல்ஸ் தாக்குதல் தொடர்பில் உரையாடப்பட்டதுடன், பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய பகுதிகளில் குறிவைக்கப்பட்டுள்ள எதிர்காலத் தாக்குதல்கள் தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.

அந்த ஒலிப்பதிவில் கேட்கப்பட்ட குரல், நஜீம் லச்ராவுயி என்ற போராளி உடையது என்றும். பிரஸ்சல்ஸ் தாக்குதலுக்கான குண்டுகளை அவரே தயாரித்தார் என்றும், மற்றைய குரல் சிரியாவில் உள்ள ஐ.எஸ். பிரதானி என்றும் விசாரணைத்தரப்பில் தகவல் வெளியாகியுள்ளது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாளை சித்திரைப் புத்தாண்டில் தேர் உலாவரும் யாழ் அத்தியடிப்பிள்ளையார் சிறப்பிதழ்-14.04.2016

## காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் 9.00 மணிக்கு தேர்த்திரு விழாவும் இடம்பெறும்.

## ஆலய வரலாறு

ஈழமணித் திருநாட்டில் முடிபோல விளங்கும் வடமாகாணத்து யாழ் குடாநாட்டிலே யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் தலைநகராக விளங்கியது நல்லூர். இது நல்லவர்கள் வாழ்கின்ற இடமாதலால் நல்லூர் எனப்பட்டது. சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்த இந்த நல்லூரின் தென்மேற்காக அமைந்த இடம்தான் அத்தியடி என்னும் அழகிய பதி. இந்த அத்தியடி ஒரு புனிதமான புண்ணியப் பதியாகும்.

இந்த சிறப்புமிகு அத்தியடியிலே வினை தீர்க்கும் விநாயகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் அழகே தனி. பொன்னம்பலத்தாடும் ஆடல் நாயகன் கனகசபையான் ஸ்ரீ நடராஜப் பெருமானாக எழுந்தருளி திருநடமிடும் தில்லைச் சிதம்பரம் இந்தியாவிலே கோயில் என அழைக்கப்படுகின்ற சிறப்பு மிகு திருத்தலமாகும்.

அந்தக் காலத்திலே யாழ்ப்பாணத்து மக்கள் பல பேர் தமிழ் நாட்டுக்கும் ஈழ நாட்டுக்குமிடையே கட்டுமரங்களின் ஊடாகவும் சிறு சிறு படகுகள் மூலமாகவும் பாய்க்கலங்கள் ஊடாகவும் சென்று வந்து வணிகஞ் செய்து வந்துள்ளனர்.

இவ்வாறு வாணிபஞ்செய்த புகழ்மிக்க வணிகர்களில் ஒருவர்தான் வீரகத்தி என்னும் விநாயக அடியார். இந்த வீரகத்தி என்னும் நாமகரணங்கொண்ட விநாயக அடியார் தில்லை நடராஜன் மேல் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பக்தி மேலீட்டினால் இந்தியாவுக்குப் போகும்போதெல்லாம் இந்தக் கோயில் எனப் புகழப்படுகின்ற சிதம்பரம் ஸ்தலத்துக்குச் சென்று வழிபாடியற்றத் தவறவே மாட்டார்.

இதில் ஒரு புதுமையும் விசேஷமும் என்னவென்றால் இந்த விநாயக அடியவரான வீரகத்தி என்ற வணிகர் சிதம்பரத்திலே தில்லை நடராஜப் பெருமானை வழிபடும்போது அவருக்குத் தில்லைக் கூத்தப் பெருமான் நடராஜர் திருநடனமிடும் ஆனந்தகோலாகல அற்புதக் காட்சியை அழகழகாக மெய்மறந்து கண்டு களிப்பார். ஆயினும் அந்த நடனக் காட்சியைக் கண்டு உள்ளமுருகித் தரிசிக்கும் போதெல்லாம் தன் குலதெய்வமான (அத்தியடிப் பிள்ளையார்) விநாயகரின் ஆனந்த நடன ஆடல்காட்சியும் அவருடைய உள்ளத்திலே தோன்றி மறைவதுண்டு. இது நாளடைவில் வீரகத்தி அடியாருக்கு உள்ளத்தில் ஒரு பெரிய நல்ல விருப்பத்தை உண்டு பண்ணியது.

இதன்வெளிப்பாடாகவே வீரகத்தி வணிகரானவர் நடனமாடும் கோலத்தில் உள்ள ஒரு விநாயகர் சிலையைச் செய்விப்பதற்காக சிதம்பரத்திலே வாழ்கின்ற சிற்பாசாரியார்களை நாடினார். இவருடைய விருப்பத்தைக் கேட்டறிந்த சிதம்பரம் சிற்பி ஒருவர் இவருக்கு ஒரு விநாயகர் திருவுருவத்தைச் செய்து கொடுத்தார். அந்தச் சிற்பி மிக்க மகிழ்ச்சியுடனே செய்து செதுக்கிக் கொடுத்த விக்கிரகமானது வலது காலைத் தூக்கி ஆடியவாறு சிதம்பர சிற்பக் கலையுடன் கூடிய இலகுவில் யாழ்ப்பாணத்துக்குத் தூக்கிக் கொண்டு எடுத்துச் செல்லத் தக்கதான ஏறத்தாழ 16 அங்குல உயரமான அழகிய நடன விநாயகராக அமைந்திருந்தது திருவருட்செயலே. அந்தச் சிலைக்கான பெறுமதியை அன்போடு கொடுத்த வீரகத்தி வணிகர் அந்த அழகான நடன விநாயகர் சிலையைப் பெற்றுக் கொண்டு ஈழவள நாட்டுக்குப் புறப்பட்டார்.

இந்த வீரகத்தி விநாயக அடியார் தான் செய்து எடுத்து வந்த நடனவடிவிலமைந்த விக்கிரகத்தைக் கீழே வைக்காது தோளிலும் தலையிலும் மடியிலும் மாறிமாறிச் சுமந்துவந்து தமிழகக் கரையிலிருந்து கட்டுமரம் மூலம் யாழ். கொழும்புத்துறையை வந்தடைந்தார். அங்கிருந்து இன்னும் பல சைவ அன்பர்கள் புடை சூழப் பிள்ளையாரைச் சுமந்து வந்து பசுமையும் எழிலும் நிறைந்து விளங்கிய அத்திமரத் தோப்பிலே ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு உழவாரம் மூலம் புல்செதுக்கி சிறுமுற்றமாக்கிய காணியிலே ஓர் அத்திமரத்தன் கீழ் சிறிதாக ஒரு கொட்டில் அமைத்து எம்பெருமான் விநாயகரைக் குடியமர்த்தினார்.

இந்த வீரகத்தி என்ற வாணிபப் பெருமகனின் ஆவலினால் சிதம்பரத்தில் உள்ள நடராஜர் கோயில் சுற்றாடலில் உருவாகிய பிள்ளையார் யாழ்ப்பாணத்திலே அத்தியடி என்னும் இடத்தில் கோயில் கொண்டு குடியமர்ந்து எழுந்தருளியமையால் யாழ். ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் என்ற திருநாமம் இவருக்கு வழங்கலாயிற்று. ஆயினும் பொதுவாக அத்தியடிப் பிள்ளையார் கோயில் என்ற பெயரே நிலைத்துவிட்டது. அத்துடன் பிள்ளையாருக்கு அத்திமுகன் என்றொரு பெயரும் வழக்கத்தில் இருக்கிறது. இங்கு ஊரின் பெயரும் இறைவனின் பெயரும் ஒருங்கே அமைந்திருப்பதும் ஒரு சிறப்பம்சம் ஆகும்.

எம்பெருமான் விநாயகரின் கருணைத் திறத்தினால் வீரகத்தி அவர்களின் வாணிபத் தொழிலும் அபிவிருத்தி அடைந்து மேன்மேலும் சிறந்து விளங்கவே வியாபாரத்தில் வரும் இலாபத்தில் ஒரு பகுதியைச் சிறுகுடிலாகக் கொட்டிலாக இருந்த கோயிலை கற்கோயிலாகக் கட்டுவதில் செலவிட்டார். அவருடன் சேர்ந்து சிறு அளவினராக இருந்த அத்தியடிக் குடிமக்கள் அயல் ஊரான யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, ஆரியகுளத்தடி, இராசாவின் தோட்டம், நல்லூர் பகுதிகளைச் சேர்ந்த அடியார்களும் ஒன்றாக இணைந்து இந்த விநாயகப் பெருமானுக்கு கருவறை, தூபியுடன் கூடிய ஒரு நல்ல மண்டபத்தையும் கட்டி ஆலயமாக்கி எம்பெருமானுக்குப் பெருஞ்சாந்தி எனப்படும் குடமுழுக்கு கும்பாபிஷேகமும் நடத்தி முடித்து தொடர்ந்தும் கோயில் பிள்ளையார் அடியார்களினால் சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

**கோயில் நிர்வாகம்**

**விளம்பர அனுசரணை:**



கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு:
021 459 0260

**T.C.T**
பல்பொருள் அங்காடி

527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


**பாரிராஜ்**
பல்பொருள் அங்காடி

உங்கள் எல்லாத் தேவைகளுக்குமான
அத்தியாவசியப் பொருள்கள், ஆடம்பரப் பொருள்கள், அழகு சாதனப்பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் தாய் - சேய் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் மின்சாதனப் பொருள்களெனப் பலதரப்பட்ட பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நம்பிக்கையுடன் நாடுங்கள்.
இச்சலுகை 10.04.2016 முதல் 20.04.2016 வரை மட்டுமே
தெரிவுசெய்யப்பட்ட அழகுசாதனப் பொருள்களுக்கு 10%-15% வரை விசேட விலைக்கழிவுகள்
மின்சாதனப் பொருள்களுக்கு (Richsonic) 5% விலைக்கழிவு
இல.344, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 021 221 7252

**குமரன் போட்டோ**
டிஜிற்றல் போட்டோ, வீடியோ

கடவுச்சீட்டு விண்ணப்பத்திற்கு படம் எடுத்து Online மூலம் இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட படப்பிடிப்பாளர்கள்
124, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 4833
077 722 2601

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தியாகமும் அர்ப்பணிப்பும் இல்லாமல் வெற்றியடைய முடியாது

## சொல்கிறார் இளம் ஓவியர் கஜேந்திரன்

சி.ப.வேந்தன்

என்னுடைய இரவுகள் துன்பமானவை ஓவியங்கள் வரையும்போது நான் என்னை மறந்துவிடுவேன். இது இல்லையென்றால் நான் என்னைப்பற்றி யோசிக்கிறதிலையும் என் சார்ந்த சிந்தனையிலும்தான் இருப்பேன். இது சிலவேளைகளில் என்னை விரக்தி நிலைக்குக் கொண்டுபோகும். விபத்தும் நிகழக் கூடிய சாத்தியமிருக்கு. அதனாலை கூடு தலான இரவுகளை நான் ஓவியங்களுக் காக ஒதுக்கிறன். அந்த ஓவியங்களை ஒரு உறவாகவும், என்னுடைய சொத் தாகவும் நான் நினைக்கிறன். இப்படிச் சொல்கிறார் இளம் ஓவியர் சிவசுப்பிரமணியம் கஜேந்திரன்.

கலைக்கூடங்களுக்குள் வைத்துக் காட்சிப்படுத்தப்படும் ஓவியக்கண்காட்சி முறைகளை உடைத்து திறந்தவெளியில் தனது ஓவியங்களை காட்சிப்படுத்தி ஓவியத்துறையில் ஒரு புதிய மரபை உருவாக்கியிருக்கிறார் இவர். செலான் வங்கியின் நிதியுதவியுடன் கடந்த 9,10,11 ஆகிய திகதிகளில் இல.253 கந்தர்மடம், பலாலி வீதியில் அமைந்துள்ள அவர் தங்கியிருக்கும் வீட்டின் முற்றத்தில் மிக எளிமையாக இயற்கைச்சுழலில் தனது படைப்புக்களை விரித்துக்காட்சிப்படுத்தியிருந்தவரை ஒரு வெயில் பொழுதில் அவருடைய ஓவியங்களுக்கிடையில் சந்தித்தபோது; அவரது ஓவியங்கள் போன்றே கனமாகப் பேசத்தொடங்கினார்.


முல்லைத்தீவுதான் என்ரை சொந்த இடம். நான் என்ரை 9 வயதிலை இருந்து பத்துவருசங்களுக்கு மேலை சிறுவர் இல்லத்தில்தான் வளர்ந்து வந்தனான். என்ரை அம்மாவையும் அக்காவையும் சுனாமியில் இழந்திற்றன். அதைப்போல என்ர தங்கையும் இறுதிப் போரில் காணாமற் போய்விட்டார். அப்பாவுடன் குடும்பப்பிணக்கு காரணமாக விலகியிருக்க வேண்டிய நிலை. இப்ப என்னுடைய இரண்டு தம்பிமார் சிறுவர் இல்லத்தில படிச்சுக்கொண்டிருக்கினம். ஓவியத்தில் எனக்கு சின்னவயசிலை இருந்து ஆர்வம் இருந்தது. அப்பவே ஏதாவது எனக்குத்தெரிஞ்சதைக் கீறிக்கொண்டிருப்பன். முதல்ல எனக்கு ஓவியம் தொடர்பில பயஸ் என்றவரும், சிவாஸ்கரன் என்றவரும்தான் நிறைய வித்தியாசமான அணுகு முறைகளைச் சொல்லித்தந்தவை. நான் தமிழீழ விடுதலைப்புலிகளோட வாழ்ந்தனான். இந்தக் காலப்பகுதியிலையும் நான்வரைஞ்ச ஓவியங்களை அவையிலையும் சிலபேர் ஊக்கப்படுத்தி சில விசயங்களைச்சொல்லித்தந்தவை. பிறகு பல்கலைக்கழகத்திலை கலை வரலாறு படிக்கிறதுக்காக தெரிவு செய்யப்பட்டு, இங்க வந்தபிறகு எனக்கு ஓவியம் தொடர்பில ஆரம்ப உந்துதலை தந்தவர் விரிவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் அடுத்ததாக தாமோதரம்பிள்ளை சனாதனன் மற்றது கிருஸ்ணவேணி இவர்கள் மூன்று பேருடைய தனி விருப்பமும். அதே நேரம் அவர்களுடைய ஆசையையும் நிறைவேற்றுகிறதாகத்தான் என்னுடைய ஓவியக் கற்றல் இருந்தது. முதலிலை நான் பல்கலைக்கழகத்தில ஒரு பட்டம் வாங்கினாப்போதும் என்றுதான் நினைச்சிருந்தனான். இவர்கள் மூலம்தான் ஓவியத்தை முழுமையா புரிஞ்சு கொண்டேன்.



முதல்ல என்னுடைய ஓவியங்கள் காலைக்காட்சி மாலைக்காட்சி இன்னொருவரைப் பார்த்து வரைதல் என்று இருந்ததுபோய் இங்கேதான் நான் ஓவியம் என்றால் என்ன என்பது பற்றி கலைவரலாற்றுக்குள்ளால பார்க்க வெளிக்கிட்டன். அதற்குப் பிறகு நானும் வேற ஒரு கட்டத்துக்கு நகரலாம் என்ற எண்ணத்தை யாழ் பல்கலைக்கழகம்தான் எனக்குத்தந்தது.

அதே நேரம் என்னுடைய ஒரு பகுதிநேர பாடத்துக்காக இராமநாதன் நுண்கலைக்கல்லூரிக்கு போகும்போது அங்கே எனக்கு இராசையா, ரமணி, சிவரூபன், மனோ போன்றவர்களது தொடர்பு கிடைச்சது. அவர்களிட்ட என்னுடைய ஓவியங்கள் அவர்களுடைய ஓவியங்கள் தொடர்பாக நிறைய கதைப்பன் அவர்கள் மூலம் நிறையக்கற்றுக்கொண்டன். அவைகளின்ர ஒரு வெளிப்பாடும் இந்த ஓவியக்காட்சிப்படுத்தலுக்கு தாக்கம் செலுத்தினதென்று சொல்லலாம்.

இந்த ஓவியக்கண்காட்சிக்கு நான் தவிப்பு என்றுதான் தலைப்பு வைச்சிருக்கிறன். இது என்ர சொந்த வாழ்க்கையின் சம்பவங்களுடைய முழுத்திரட்சியாகத்தான் இந்த தவிப்பு என்ற சொல் வருகுது, அடிப்படையில் உள்ள கோபங்கள், தவிப்புகள், வலிகள், ஆறாதகாயங்கள் துயரங்கள் போன்ற விடயங்களை எவ்வாறு ஓவியத்தின் மூலம் கடத்துதல் அல்லது என்னிலிருந்து கழற்றி விடுதலுக்கான எத்தனங்களாகத்தான் நான் இந்த ஓவியங்களைப் படைச்சிருக்கிறன்.



உலகளாவிய ரீதியில் ஓவியக்காட்சிப்படுத்தல் என்றது ஒரு கலைஞன் ஓவியங்களை வரைந்து ஒரு கட்டுப்பாட்டுக்குள்ள இயங்கக் கூடியதான ஒரு கலைக் கூடங்களுக்குள்ள வைத்துக் காட்சிப் படுத்துகிற ஒரு முறையாகத்தான் இருக்குது. ஆனா அதை விடுத்து ஒரு திறந்த வெளியிலை ஓவியத்தைக்காட்சிப்படுத்தும் செயற்பாடு யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரைக்கும் இதுதான் முதலாவதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இதன் மூலம் நான் என்ரை ஓவியங்களை மற்றவர்களுக்கு காட்சிப்படுத்தவும் அதன்மூலம் அவர்களுடன் பேசவும்பகிர்ந்துகொள்ளவும் நான் முயற்சி எடுத்திருக்கிறன். அதோடை நின்றுவிடாமல் இனிவரும் காலமும் இதைத் தொடருவேன் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கு. இந்தக் கண்காட்சியினுடைய தலைப்பு 'தவிப்பு' இந்தத் தலைப்புக் கூட ஒரு எழுத்துக்களினூடான கதை சொல்லும் இதில தவிப்பு என்றதிலை தவிப்பு என்ற எழுத்துக்களை மக்கள் உடன் புரிஞ்சு கொள்ளக்கூடிய சாத்தியம் இருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவமடு அபிக்குட்டி

# கண்ணீர்க் கதைகளைக் கூறும் மல்லாவி கஜன் தந்த ஒருபிடி மண்

கவிதைகளோ சிறுகதைகளோ உள்ளதை உள்ளபடி உரைத்து விடுவதால் இலக்கியங்களாகி விடுவதில்லை. அவற்றைச் சொல்லும் வகையும் திறனும் அவற்றில் செறிந்துள்ள மொழியின் அழகும்; அவற்றை இறவாத இலக்கியங்களாக்குகின்றன. இன்று வெளிவரும் ஆக்கங்களில் அனேகமானவை கவிதைகளாகவே உள்ளன. அவை தாம் கவிதைகள் என்று சொல்லப்படுவதால் அவற்றை எழுதுவோர் எவருமே தம்மைத் தாமே கவிஞர்கள் என்று சொல்லிக் கொள்வதும் வழமையாகி விட்டது.




இந்நிலையில் சிறுகதைகளை எழுதுவோர் தொகை அருகி விட்டதைக் காணுகின்றோம். சிறுகதைகளை எழுதுவோர் அவற்றைப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியிடும் சந்தர்ப்பங்களும்குறைந்தே காணப்படுகின்றன.

வாசிப்பின் வலிமையை உணராத நிலையும் எம்மவரிடத்தில் பெருகியே காணப்படுகின்றது. இலக்கிய ஆக்கங்களை வாசிப்பதும் இரசிப்பதும் அவற்றின் மூலம் கற்றுக்கொள்ளும் மொழி வளத்தால் சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதுவதும் குறைந்தே காணப்படுகின்றது.

எழுத்துலகை வளமாக்கும் வகையில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் சந்தர்ப்பங்களை வழங்கும்போது அத்தகைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த முந்துபவர்களில் ஒருவராக இங்கே மல்லாவிக் கஜன் அவர்களைக் காணுகின்றோம். அவர் எழுதி வெளியிட்டுள்ள ஒருபிடி மண் சிறுகதைத் தொகுப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. அதன் அழகிய அட்டைப்படம் வாசகர்களை வாசிக்கத் தூண்டுகிறது. அட்டைப் படத்தை வரைந்தவர் சிறந்த ஓவியரான மல்லாவிக் கஜன் என்பதும் அவர் பல்வேறு திறமைகள் கொண்ட ஓர் ஆக்க இலக்கிய கர்த்தாவாக திகழ்கிறார் என்பதும் புலப்படுகின்றது.

மல்லாவிக் கஜன் தன் சொந்த மண் மீது கொண்ட பற்றுறுதியையும் பார்வையையும் மொழிவழி வியக்கும் வண்ணம் எழுத்தாக்கியுள்ளார். மண் விளைத்த நிஜங்களையும் அவற்றால் விளைந்த துன்ப, துயரங்களையும் கதைகளினூடாக வாசகரின் கருத்துக்குத் தந்துள்ளார்.

ஒருபிடி மண் என்ற நூலின் தலைப்புரைக்கும் சிறுகதையில் போரினால் சொந்த மண்ணில் ஏற்பட்ட உள்ளத்தை உறுத்தும் மாற்றங்களை விளக்கியுள்ளார்.

இந்தக் கதைநூலுக்கு அணிந்துரை தந்துள்ள முல்லைத்தீபன் உள்ளதை உள்ளபடி கதை சொல்ல முற்பட்டோர் சற்றுக் கற்பனையையும் ஜனரஞ்சகத்தையும் அழகியலையும் புகுத்தினர் சமகாலத்தில் வெளிவரும் கதைகள் யாவும் கற்பனை என்ற நிலையைக் கண்டுவிட்டாலும் யாவும் பொய் என்ற நிலை வரப் போவதில்லை – என்கிறார்.

இக்கதை நூலும் இதிலுள்ளவை யாவும் வரலாற்றைச் சிறு கதைகளாக்கும் வழிகளாகவே நீள்கின்றன.

ஒருபிடி மண் மல்லாவிக் கஜனின் கன்னிப் படைப்பாகும் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கான கலியாணம், கல்வியில் நாட்டம் கொள்ள விடாது பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடும் பெற்றோர், படித்தும் வேலையற்று அலைவோரின் வேதனை எனப்பலவும் அவரது கதைகளுக்கான கருக்களாக உருப்பெற்றுள்ளன.

அப்பா எனக்குக் கலியாணம் வேண்டாம் நான் வெளிநாடு போகேல்ல எனக் கதறும் பெண்கள், என்னைக் கொல்லாதே கொல்லாதே எனக் கணவன் காலடியில் பதறும் மங்கையர். என்றவாறான வார்த்தைக் கோலங்களால் வாசகரின் மனத்தை ஈர்க்கும் பல கதைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன. அவரின் பெண்ணுரிமைக்கான உரத்த குரலை இவற்றின் மூலம் கேட்கிறோம்.

இன்றைய எமது சமூகம் பணத்துக்கே அடிமைப்பட்டுள்ளது. இன்றைய கல்வியும் பட்டம் பெறுவதற்காகவே கற்பிக்கப்படும் நிலையில் கல்வியின் நோக்கம் புரியாமல் பெற்ற பட்டத்தோடு படித்தவன் என்று கூவிக் கொண்டே வேலை தேடி அலையும் இளைஞர் கூட்டத்தைப் பார்க்கின்றோம். அதிலே ஒருவனாகிக் கதாபாத்திரமாகத் தோன்றும் தீபன் மல்லாவிக் கஜனின் அனுபவப் பிறவியாகித் தேர்வு என்ற சிறுகதையில் உலா வருகின்றான்.

இனி நேர்முகத் தேர்வு என்று ஒரு போதும் புறப்படுவதில்லை குத்தகைக்காவது அப்பா செய்த மாதிரி, தோட்டம் செய்ய வேண்டியதுதான்! என்பதைத் சொல்லும்போது தோட்டம் செய்தல் என்பது பட்டத்தைப் பெற்றோரின் தகுதிக்குக் கீழானது என்பதாய் ஒலிப்பது சற்றே கவலை தருகின்றது. விவசாயம் சார்ந்த பட்டங்கள் கூட விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் கற்பிக்கப்படவில்லை என்பதையே இந்தச் சிந்தனை எமக்கு வெளிப்படுத்துகிறது.

காணாமற் போனோர் பட்டியலில் இணைக்கப்படாமலேயே தொலைந்து போன தனது மகள் பற்றிய செய்தியை அறியத் துடிக்கும் ஆறுமுகத்துக்குக் கடைசியாகக் கிடைத்த பத்திரிகைச் செய்தி குறிப்பிட்ட பெயர்களைத் தவிர வேறு எவரும் எம்மால் கைது செய்யப் படவில்லை என்பதுதான் இதைப் பார்த்த ஆறு முகம் படும் வேதனையை விளக்க முற்பட்டிருக்கும் மல்லாவி கஜன் கனவுடனே என்ற சிறுகதையை அழகுற வடித்துள்ளார்.

யதார்த்தமான சிந்தனையும் ஆழமான உணர்வைத் தூண்டும் மொழி நடையும் ஒருபிடி மண் சிறுகதைத் தொகுப்பை இலக்கியப் பரப்பில் உயர்த்தியே வைத்துள்ளது.

பல்துறை சார்ந்த ஆற்றல்களும் இலக்கிய எழுத்தாக்கங்களால் வாசகர்களைத் தமிழ் மொழியின் பால் ஈர்க்கும் திறனும் கொண்ட இளம் எழுத்தாளரான மல்லாவி கஜனின் ஒருபிடி மண் நூலின் வெளிவருகை மேலும் அவரை எழுத்துலகில் பிரகாசிக்கத் தூண்டும் என நம்புகிறோம்.

# தியாகமும் அர்ப்பணிப்பும் இல்லாமல் வெற்றியடைய முடியாது....

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

த.வி.பு. என்றால் தமிழீழ விடுதலைப்புலிகள் என்பது. வரலாற்றைக்கட்டிஎழுப்பின ஒரு பெயராகக்கூட அது இருந்தது. அதைவிட த.வி.பு. என்பது இடம்பெயர்ந்த மக்களுக்கு எளிதில் புரியக்கூடியதான தருமபுரம், புதுக்குடியிருப்பு, விசுவமடு என்றதையும் அடையாளப்படுத்தும். இந்த இடப்பெயர்வின் வலிகளை இந்த ஓவியங்களிலை பிரதிபலிச்சிருக்கிறன். இதவிடவும் தவிப்பு எனும் பதத்துக்குள்ள தவித்தல், தப்பு போன்றவைகளும் அடங்கும்; இப்படி எல்லாமும் இதுக்குள்ள அடங்கியிருக்கு. மக்களில நானும் ஒருவன்; நான் எப்படி இருந்தேன் என்பதைக் காட்டும்போது மக்கள் எப்படி இருந்தார்கள் என்பதை காட்டக்கூடியதாக இருந்தது. எல்லா அனுபவங்களின் வெளிப்பாடுதான் இந்த ஓவியங்கள். இந்த ஓவியங்களை மக்கள் பார்க்கிறார்கள் என்பது சந்தோசம், விமர்சிக்கிறார்கள் என்பது சந்தோசம்.

ஓவியப்போட்டிகளில நான் கலந்து கொள்ளும்போது கட்டாயத்தினடிப்படையில்தான் கலந்து கொண்டனான். பொதுவாக நான் போட்டிகளில கலந்து கொள்வதை விரும்புகிறதில்லை. ஓவியத்தின தரம் பற்றி மற்றவர்கள் நிர்ணயித்தல் என்பது அவர்களுடைய விருப்பு வெறுப்புக்களினடிப்படையில்தான் நிகழுது. அத்துடன் போட்டி என்றுமட்டும் பார்க்காமல் படைப்பானது பிரதேசம் பின்புலம் என்பவைகளும் தாக்கம் செலுத்தும் இதுகாளால நான் போட்டிகளை விரும்புறதில்லை.

ஆரம்ப காலங்களைப்போலில்லாமல் இப்ப இணையத் தளங்கள்மூலம் நாங்கள் ஓவியம் சார்ந்து நிறையத் தேடலையும் கற்றலையும் செய்யலாம். அதை விடவும் இங்க யாழ்ப்பாணம் நல்லூரில சமகால இலங்கை ஆவணக்காப்பகம் என்று ஒன்று இயங்கிக் கொண்டிருக்குது. இலங்கையின் மிகச்சிறந்த ஓவியர்கள் அங்கு வந்து தங்களுடைய ஓவியங் களைப் பற்றியும் ஓவியங்கள் மூலம் தங்களுடைய கதைகளையும் பேசுவினம், அது எனக்குள்ள ஒரு கேள்வியை எழுப்பினது. என்னட்டையும் வண்ணங்கள் இருக்கு, கடதாசி இருக்கு, பென்சில் இருக்கு இவைகளை விட கதைகளும் இருக்கு, என்னாலையும் கதைசொல்ல முடியும் என்ற எண்ணம் உருவாகிச்சுது. அதைவிடவும் அங்கே வந்து பேசியவர்களில் அதிகமானவர்கள் சிங்கள ஓவியர்கள் ஏன் தமிழ் ஓவியர்களுக்கான இடைவெளி கூடுதலாக இருக்கு என்ற கேள்வியும் எனக்கு உருவானது. ஏன் அதை நான் முயற்சி செய்யக்கூடாது. அந்த இடைவெளியை என்னால ஏன் நிரப்பமுடியாது என்ற கேள்விக்குப் பின்னான ஒரு முயற்சியாகவும் இந்தக் கண்காட்சியாக எடுத்துக்கொள்ளலாம்.

எப்பவுமே சந்தோசத்தை மனசு நாடினதால என்னுடைய ஆர்வமும் விருப்பமும் கூடுதலாக விளையாட்டிலயே இருந்தது. ஆனா ஒரு அறிவார்ந்த நிலையில என்னை வெளிப்படுத்தவேணுமெண்டதால நான் ஓவியத்தில ஈடுபாடு காட்ட ஆரம்பிச்சன். அதால பகலில விளையாட்டு இரவில ஓவியம் என்று இயங்கினன்.

இப்ப ரெண்டு வருசத்தில ஓவியம் சார்ந்து நிறைய மாற் றம் நிகழ்ந்திருக்கு. சிலபேருக்கு ஓவியங்கள் விளங்குவதில் சிக்கல் இருந்தாலும், என்ன சொல்ல [illegible] கொள்ளுகிறார்கள். நான் நினைக்கிறன் இன்னும் ஒரு பத்து வருடங்களில இங்க நிறைய மாற்றம் வரும் என்று. தொடர்ச்சியானபயிற்சிபெறும்போது ஓவியத்துக்கான ரசிகர்கள் பெருக வாய்ப்பிருக்கு. அதுக்கு நிறை ஓவியக்கண்காட்சிகளையும் படைப்புக்களையும் உருவாக்கவேணும்.

நாடக நெறியாளர் குழந்தை ம.சண்முகலிங்கம் தமது உரையில் ஒரு நாடகம் நடித்துக் கொண்டிருக்கும்போது அதை நூறு ரசிகர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிறகு அதிலிருந்து வேறு பல ஆயிரம் நாடகங்கள் தோற்றம் பெறுகின்றன என்று சொன்னார். அதுதான் ஓவியத்திலும் நடக்கவேணும். ஆனா இங்க அது நடக்கிறது குறைவா இருக்குது. ஆனா காலப்போக்கில அதில மாற்றம் நிகழும் என்ற நம்பிக்கை இருக்குது.

இரவுகளில் ஓவியம் வரைதல் என்றது விடுபடுதலுக்கான அடிப்படை. ஆனாலும் அங்க ஓவியம் உருவாகும்போது அது படைப்பின்ர தொடர்ச்சியா நீளும்; ஒன்றிலிருந்து இன்னொரு ஓவியம் உருவாகும்.

நான் நினைக்கிறன் சந்தோசமான மனநிலையில் இருக்கும் ஒரு ஓவியனால சமூக கட்டமைவுக்கான ஒரு ஓவியத்தை வரைய முடியாது. துன்பத்திலிருப்பவர்களால்தான் உண்மையைச்சொல்ல முடியும். மக்கள் வாழ்வியல் நிலைப்பாடு இப்பிடி எல்லாமுமே துன்பத்துக்குள்ளாலதான் நிறைய வரவாய்ப்பிருக்கு, கோயாவிலிருந்து பிக்காசோ வரையும்துன்பங்களை அனுபவித்தவர்களாகத்தான் இருக்கினம். துன்பம்தான் சாதாரண மனிதனை அடையாளப்படுத்தும். அனுபவங்களோடான படைப்பைத்தரும்

தியாகமும் அர்ப்பணிப்பும் இல்லாமல் வெற்றியடைய முடியாது. அது ஓவியத்துறையிலையும் மிகமிக முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரிசனங்கள் - 2

அப்புச்சி

ஈழத்து இலக்கிய வரலாற்றுக் காலத்தை மறுமலர்ச்சிக் காலம், இனப்பிரச்சினைக்குரிய காலம், முற்போக்கு எழுத்தாளர் காலம், போர்க்காலம், புலம்பெயர்காலம், ஆக்கிரமிப்புக்காலம், சமாதான காலம்... என வகைப்படுத்தலாம்.

அந்த வகையில் மறுமலர்ச்சிக் காலத்தில் இருந்து முனைப்புப் பெற்ற சாதீயம், தீண்டாமை போன்ற விடயங்களை அடிப்படையாக வைத்து முற்போக்கு எழுத்தாளர் காலத்திலிருந்து எழுதப்பட்ட படைப்புக்கள் பலவும், தொடர்ந்து இனப்பிரச்சினைக்குரிய காலம். அதன்பின் போர்க் காலம் என்பவற்றோடு, தொடர்பு கொண்டு பயணித்தபோது, படைப்பாளிகள் சிலர் தங்களது நிலைகளில் நின்றவாறு தமது பங்களிப்பை வழங்கவே செய்தனர்.

சாதியம் மற்றும் தீண்டாமையின் நிகழ்வுகளை தங்கள் படைப்புகள் மூலம் வெளிப்படுத்தியவர்களில் கே.டானியல் முக்கியமானவர். இவரின் அன்றைய 'இலைக்கஞ்சி' எனும் சிறுகதை பலராலும் சிலாகிக்கப்பட்ட தொன்று. அது மட்டுமல்ல, இவரது பஞ்சமர், கோவிந்தன் போன்ற நாவல்களும் விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டன.

இதேவேளை-தான் வாழும் சமூகத்தின் பால் அக்கறை கொண்டு, தாழ்த்தப்பட்டோரின் விடிவுக்காக, தமது படைப்புக்கள் மூலம் உயர்சாதியினரின் மனிதத்தன்மையற்ற செயற்பாடுகளை அம்பலப்படுத்திய படைப்பாளிகளை ஏனையவர்கள் 'ஒருமாதிரியாகப் பார்த்து' ஒதுக்கிய நிகழ்வுகளும் இங்கு நடந்தேறியுள்ளன.

போதாக்குறைக்கு கே.டானியலுக்கு வழங்கப்பட்டது போன்று அந்த 'இழிசன எழுத்தாளன்' என்ற பட்டத்தை, சாதியில் தாழ்த்தப்பட்ட மக்களின் விழிப்பு நிலைக்காக எழுதும் படைப்பாளிகளின் பெயருக்கு முன்பாக வைத்து, தாம் சார்ந்த குழுவினருடன் அழைத்து மகிழ்ந்தவர்களும் இங்கு உண்டு

போர்க்கால சூழலுக்குள் வாழ்ந்த படைப்பாளிகள் மற்றும் படைப்பிலக்கியப் போராளிகள் இம்மண்ணில் நிலவிய தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகத் தங்கள் பேனாக்களைத் திருப்பியதோடு, மேலும் ஒரு சமத்துவ சமூக உருவாக்கத்துக்கான படைப்புக்களை போர்க்கால இலக்கியத்தோடு வெளிக் கொணர்ந்தார்கள்.

> "சாதியம் மற்றும் தீண்டாமையின் நிகழ்வுகளை தங்கள் படைப்புகள் மூலம் வெளிப்படுத்தியவர்களில் கே.டானியல் முக்கியமானவர். இவரின் அன்றைய 'இலைக்கஞ்சி' எனும் சிறுகதை பலராலும் சிலாகிக்கப்பட்ட தொன்று.

இருப்பினும், படைப்பாளிகள் சிலரது மனதுக்குள் நீறுபூத்த நெருப்பாக சாதியுணர்வு கனன்று கொண்டிருந்ததையும், அதை அவர்கள் வெளியே செயற்படுத்த முடியாத அளவுக்கு அப்போதைய புலிகள் இயக்கத்தின் நடைமுறைகள் இறுக்கமாக இருந்தன என்பதையும் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

இது குறித்து இங்கே உதாரணத்துக்கு ஒரு சம்பவம் தரப்படுகிறது. வலிகாம இடப்பெயர்வுக்குப் பின்பு வன்னிப் பெருநில பரப்பில் இயங்கிய ஒரு செய்திப் பத்திரிகை நிறுவனத்தில் அவர் ஓர் ஊடகவியலாளர் மட்டுமல்ல, படைப்பாளியும் கூட.

ஒருமுறை, வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த இன்னொரு படைப்பாளி, தான் எழுதிய சலவைத் தொழில் மற்றும் சவரத் தொழில் புரியும் சமூகம் சார்ந்த விழிப்பு நிலைப் படைப்புக்கள் இரண்டை எடுத்துக் கொண்டு, குறிப்பிட்ட அந்தச் செய்தி ஊடகத்துக்குப் போயிருக்கிறார். அங்கே அந்த ஊடகவியலாளர் (சிரேஷ்ட ஆசிரியர்) அந்த இரண்டு படைப்புக்களையும் வாங்கிப் படித்துவிட்டு, 'இதெல்லாம் இப்பதேவையா? தணலை மூடிச் சாம்பல் கிடக்குது. நீங்களேன் சாம்பலை ஊதி தணலைப் பற்றவைக்கிறியள்? இதெல்லாம் எங்கட பத்திரிகையில போட முடியாது...' என்று கூறியுள்ளார்.

படைப்புக்குரியவரோ மேற்கொண்டு எதுவும் கூறத் தோன்றாது, அவரிடம் கொடுத்த அந்த இரண்டு படைப்புக்களையும் மீளப் பெற்றுக் கொண்டு, அப்பொழுது கொழும்பில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த 'சரிநிகர்' எனும் பொதுவுடமைப் பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார். படைப்புகளை அனுப்பி இரண்டு வார இடைவெளிகள் கழிந்தநிலையில் அந்த இரண்டு சிறுகதைகளும் சரிநிகரில் பிரசுரமாகி வெளிவந்திருந்தன.

பேனாபிடித்து தன்னை ஒரு படைப்பாளி என்று இனங்காட்டுபவனுக்கு, தனக்கென்றொரு கடமை இருப்பதை உணர வேண்டும். அந்தக் கடமையானது சமூகத்தில் பாதிக்கப்படுபவர்கள் சார்பாகக் குரல் கொடுப்பதாக அமைய வேண்டும். என்னதான் பிரபாகரன் சுதந்திர சோஷலிஸ தமிழ் ஈழம்... என்று தனது கொள்கையைப் பிரகடனப்படுத்தியிருந்தும் கூட, இங்கே சாதிய சம்பந்தமான ஒரு விழிப்புணர்வுப் படைப்பு சாதிய மேலாண்மை வாதியொருவரினால் மறைமுகமாய் நிராகரிக்கப்பட்டுவிடுகிறது.

பின்நாள்களில் புலிகள் இயக்கம் பலவீனப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் சாதி வெறி மெல்லத்தலை தூக்க ஆரம்பித்தது என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மை. உதாரணத்துக்கு வன்னிப் போர்க் களத்துள் சில இடங்களில் நிகழ்ந்த கிணறுகளில் தண்ணீர் அள்ளும் விடயத்தைக் குறிப்பிட முடியும்.

சிங்களப் படைகளால் புலிகள் இயக்கம் முள்ளிவாய்க்காலுடன் முடக்கப்பட்டு அதன் தலைவரும் கொல்லப்பட்டு விட்டார்... எனத் தெரிவிக்கப்பட்ட நாளில் இருந்து, இந்தச் சாதியம் மீண்டும் பழையபடி ஆங்காங்கே வேரூன்றுவதை அவதானிக்க முடியும்.

இந்த அவதானத்தின் நிமித்தம் என்றோ படித்து மனதில் பதிந்து விட்ட ஒரு சிந்தனைக் கவிதையொன்று இப்பொழுது ஞாபகத்துக்கு வருகின்றது. அ.யேசுராசாவை ஆசிரியராகக் கொண்டு முன்புவெளி வந்த (தற்போதும் வெளிவருகிறது) 'தெரிதல்' (ஆடி, ஆவணி - 2005) எனும் இரு மாத கவிதை இதழில் புதுக்குடியிருப்பு - அலெக்ஸ் பரந்தாமன் எழுதிய 'விடை தெரியாத வினா' எனும் தலைப்பைக் கொண்ட கவிதை இது.

*மானிட வட்டத்தில்*
*பல மாறுபாடுகள்!*
*ஏடுகளில் பதிந்துவிட்ட*
*ஏற்றத் தாழ்வுகள்*
*அம்பட்டன் ; வண்ணான்...*
*பள்ளன் ; பறையன்...*
*வெள்ளாளன் ; கோவியன்...*
*யார் இவர்கள்?*
*ஏவாள் - ஆதாமில்*
*எழுந்த வாரிசுகள்!*
*அப்படியெனில்*
*ஏவாள் - ஆதாம்*
*என்ன சாதி?!?*

குரங்கில் இருந்து பிறந்தவன் மனிதன் ... என்ற டார்வினின் தத்துவத்தை ஏற்க மறுக்கும், மாற்றத்தை விரும்பாத சில படைப்பாளிகளும் உயர் குல மனிதர்களும் தமது ஆதிப் பெற்றோர் ஏவாள் - ஆதாம் என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். அப்படி ஏற்றுக்கொள்ளும் போது, இந்த ஏவாள் - ஆதாம் என்ன சாதி என்பதை எடுத்துரைக்க வேண்டிய தார்மீகக் கடமை அவர்களுக்குண்டு.

இப்பொழுது பிரபாகரனும் இல்லை. போராட்டமும் இல்லை.

இனி நாம் நினைத்தபடி எதுவும் செய்யலாம்... என நினைக்கும் சாதிமான்களுக்கும் சில படைப்பாளிகளுக்கும் மேற்கூறப்பட்ட அலெக்ஸ் பரந்தாமனின் கவிதை சமர்ப்பணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குப் பிறகு எவருமே இல்லை

## ஓர் ஆர்மோனியக் கலைஞனின் ஆதங்கம்



சி.ப.வேந்தன்

யாழ்ப்பாண மக்கள் காலம் காலமாக இயல், இசை, நாடகம் என்ற மரபினுடாக வாழ்ந்துவரும் பழக்கத்தைக் கொண்டவர்கள். தமது வாழ்வியலில் ஓர் அங்கமாக இவற்றைக் கொண்டு அதனூடே இயங்கிவருபவர்கள். இங்குள்ள. ஒவ்வொரு கிராமங்கள் தோறும் ஏதாவதொரு துறையில் பெயர் சொல்லுமளவுக்கு பலரை சுட்டிக்காட்டிவிடலாம். காலம் காலமாக பலர் கலைத்துறையில் சாதனைபடைத்துவந்தாலும், வெளியுலகுக்குத் தெரியாமல் இருந்து வருகின்றது. அந்த வகையில் கோண்டாவில் கிழக்கு எனும் கலைக் கிராமத்தில் கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக இசைக் கலையோடு இயங்கிவரும் மூத்த கலைஞர் கனகு அரியரத்தினம் ஆவார். இவர் அண்மையில் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் சாமஸ்ரீ விஸ்வ கலாஜோதி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். ஒரு வெளிச்சப் பொழுதில் உதயன் புதன்பொய்கைக்காக அவரைச் சந்தித்த வேளை....

எனக்கு அத்தான் முறையிலை ஒருத்தர் இருந்தார். ஆர்மோனியக் கலைஞர் பேதுருப்பிள்ளை என்பவர் தான் அவர். அவர் தனது ஆர்மோனியம் பழுதாப் போட்டுது என்பதால் திருத்தித்தரச் சொல்லி அப்பாவிடம் கொண்டு வந்து குடுத்தவர். அப்பா அதைத்திருத்தினாப் பிறகும் அதை கொஞ்ச நாள் வீட்ட கிடந்தது. அப்ப எனக்கு பதின்மூன்று வயசு. நான் அதை எடுத்து சும்மா வாசிச்சுப் பார்த்தேன். அதிலை ஒன்றும் எனக்குத் தெரியாது. சும்மா போட்டு கட்டைகளை அமர்த்திப் பார்க்கிறது காத்தை வலிக்கிறது எண்டு செய்வன். ஒருநாள் அதை அப்பா பார்த்திட்டு தம்பி அத்தான் வரேக்க உனக்கும் பழக்கச்சொல்லி கேட்கிறோன், நீ அவருக்கிட்டே கேட்டுப் பழகு என்று சொன்னார். அத்தான் கொஞ்சம் தண்ணி பாவிப்பவர், அதாலை ஒரு போத்தல் கள்ளும் வாங்கி வைச்சுக் கொண்டு அவரைப் பார்த்துக் கொண் டிருந்தேன். அவர் வந்தவுடனே நான் அவரிட்டபோய் எனக்கும் சொல்லித் தாங்க எண்டு கேட்டேன். சரி பெட்டியத் தூக்கிக்கொண்டு வாடா எண்டு சொல்ல நானும் போய் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து அவருக்கு முன்னாலை இருந்தேன். எனக்கு எப்பவுமே இடக் கைப்பழக்கம்தான். எல்லாமே இடக் கையாலேதான் செய்யிறது. அப்ப நானும் வலக்கையாலை காத்த வலிச்சுக்கொண்டு இடக்கையாலை வாசிக்க திடீரெண்டு கன்னத்திலை ஒரு அடிபடாரெண்டு விழுந்திட்டுது. நான் அப்பிடியே கெலிச்சுப்போனேன். "இடக்கையாலை வாத்தியக்கருவி வாசிக்கக்கூடாது வலக்கையாலை வாசி" எண்டு சொன்னார். ஏண்டா பழக வந்தன் எண்டமாதிரி இருந்துச்சுது. ஆரம்பமே அடிவிழ பயந்து போனன். பழகிறதெண்டதே பெரிய வேலை. அதிலையும் வலக்கையை பழக்கத்துக்கெடுத்து பழகுறதெண்டது எனக்குப் பெரிய கஷ்டமாகப் போட்டுது. பிறகு வரேக்கை போகேக்கை எல்லாம் சொல்லித்தருவார். அவர் தன்னட்ட வேற பெட்டி இருக்கு அதாலை நீ இதை வைச்சுக் கொஞ்ச நாளைக்குப் பழகு எண்டு சொல்லிட்டுப்போட்டார். பிறகு நான் எல்லா நேரமும் அதை எடுத்து வைச்சு வாசிச்சு வாசிச்சு அவர் வாறநேரமெல்லாம் கேட்டுக்கேட்டு கொஞ்சங் கொஞ்சமாப் பழகத்தொடங்கீற்றன். அதற்குப் பிறகு இடக்கையிண்ட பழக்கம் எனக்கு நன்கு இல்லாமல் போட்டுது.

எனக்கொரு அண்ணா உரும்பிராயிலை இருந்தவர். அவருடைய பெயர் துரை. அவர் துரை மெல்லிசைக்குழு ஒன்றை நடத்தினவர். அந்த நாளையிலை நல்ல பாட்டுக்காரன். அகில இலங்கை வானொலியிலை எல்லாம் மெல்லிசைக் கச்சேரிகள் நடத்தியவர். அப்ப அவர் வீட்ட வரேக்கயெல்லாம் அப்பா அவரிட்ட தம்பி அவன் இதிலை ஆர்வமா இருக்கிறான், இதுகளை பார்த்துச் சொல்லிக்குடு எண்டு சொல்ல, அவரும் தானும் பாட்டுகளைப் பாடி அதுகளுக்கு எப்பிடி வாசிக்கோணும் என்ன பிழை என்ன சரி எண்டு சொல்லித்தருவார். அப்ப நான் ஓரளவு வாசிக்க வெளிக்கிட்டாப் பிறகு, அப்பஎனக்குச்சம்பளம் 850 ரூபாய் தான். அந்த சம்பளத்திலை அந்த விலைக்கு ஒரு ஆர்மோனியப்பெட்டியை வாங்கித்தந்தார். அப்ப துரை அண்ணா ஆரம்பத்திலை பெரிய கச்சேரிகளுக்கு என்னைக் கூட்டிக்கொண்டு போகாமல் சின்னச்சின்ன கச்சேரிகளுக்குஎன்னைகூட்டிக்கொண்டே வாசிக்க வைச்சு பழக்கினவர். அந்த நேரம் ஆர்மோனியத்திலை பெரும் கலைஞன் ஜோன்கவாஸ் இருந்தவர். அவரிட்டை பழகினதில் அப்பாவும் ஒரு பெரிய கலைஞன். அப்ப ஜோன் கவாசும் பேரெடுத்துக்கொண்டு வந்த நேரம். என்ரை வயசு தான் அவ ருக்கும் ஒரே மட்டம். அவற்றை சொந்தக் காரற்றை வீடொண்டு எங்கடை ஊரிலை இருந்தது. அங்க அவர் வரேக்க அவரிட்ட போய் எனக்கும் சொல்லித்தாங்க எண்டு கேட்க, நீ நல்லா வாசிக்கிறாய் தானேடா தொடர்ந்து வாசிச்சுக் கொண்டு வந்தியெண்டா பழகிடலாம் எண்டு சொல்லிப் போட்டு தான் போற கச்சேரிகளுக்கெல்லாம் என்னையும் வரச் சொல்லி தனக்குப் பக்கத்திலை இருத்திப் போட்டு வாசிச்சுக் காட்டுவார். எனக்கொரு பழக்கம் இருக்கு, சொல்லித்தந்து குறிப்புகளை படிப்பிசா வாசிக்க மாட்டன். அது வராது. ஆரும் வாசிச்சா அதைப் பார்த்துக் கொண்டிருந்து, அதைமாதிரி வாசிப்பன். அப்ப கூடுதலாக ஜோன்கவாசுக்குப் பக்கத்தில இருந்து அவர் வாசிக்கிற நுணுக்கங்களைப் பார்த்துப்போட்டு அதை மாதிரி வாசிச்சுப் பழகுவன். சில நேரம் அவர் இடையிலை எங்கையும் வெளிலை போட்டு வாறத்துக்கிடையில் என்னட்டை தந்திட்டுப் போவார். அப்ப அவர் வரும் வரைக்கும் நான்தான் தொடர்ந்து வாசிக்கிறது. பிறகு துரை அண்ணனோட சேர்ந்து சின்னமேளம் அதுகள் எல்லாம் போய்ச்செய்யிறது அப்ப நான் இதோடை சேர்ந்தது மெலோடிக்காவும் வாசிப்பன். கூடுதலா சின்ன மேளத்துக்கு மெலோடிக்கா வாசிப்பன். அதிலை இருந்து இண்டைக்கு வரைக்கும் ஏதோ என்னாலை முடிஞ்சவரைக்கும் இதைசிறப்பாகச்செய்துகொண்டு வாறன். எங்கையும் முறையாக குரு விட்டை படிச்சதோ இல்லாட்டி எழுத் திலை எழுதி பாடமாக்கி இதிலை கற்றுக்கொண்டதோ இல்லை. ஏதோ ஒரு ஆர்வத்தாலையும் இதிலை இருக்கிற ஆசையாலையும் எல்லோரிட்டையும் கேட்டுக் கேட்டு பார்த்து முடிஞ்ச வரைக்கும் இந்தக் கலையைப் பழகி விட்டன். அது எனக்கு பெருமான் குடுத்த பெரும் பேறுதான்.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மன்னார் எண்டு எல்லா இடமும் நான் கச்சேரிகள் செய்திருக்கிறன். துரை அண்ணனோடை சேர்ந்து நிறையக் கச்சேரிகள், பஜனைகள் செய்திருக்கிறன். எங்கடை ஊரிலை இருக்கிற நாடகமன்றங்கள் வேற வெளி இடங்களிலை இருக்கிற நாடக மன்றங்களுக்கெல்லாம் வாசிக்கிறனான். கூத்துக்கள், நாடகங்கள், பஜனைகள் எண்டு இப் பிடியே போகுது.

எனக்கு மூன்று ஆண்பிள்ளைகளும் ரெண்டு பெண் பிள்ளைகளும் இருக்கினம். ஆனா இதிலை ஒருவரும் இந்தக் கலையைப் பின்பற்றுவதில்லை, எண்டது தான் என்னுடைய கவலை. அவைக்கு இதிலை ஆர்வம் வருகுதில்லை. எந்த வித பிண்ணனியும் இல்லாம நான் தேடித்தேடி கற்றுக்கொண்டனான். ஆனா என்னுடைய பிள்ளைகளுக்கு பிண்ணணி இருந்தும் அவை பயிலினம் இல்லை.

இப்போதைய பிள்ளைகள் எலக்ரோனிக் வாத்தியக் கருவிகளிலை காட்டுற அக்கறையையும் ஈடுபாட்டையும் இதிலை காட்டுவதில்லை. இது அதுக்கு எந்த விதத்திலையும் குறைஞ்சது இல்லை. இந்த நினைப்பை இப்பத்தைய பிள்ளைகள் விளங்கிக் கொள்ளவேணும்.

எனக்கு என்ன பிரச்சினை கஷ்டம் வந்தாலும் ஒரு கொஞ்ச நேரம் வாத்தியத்தை எடுத்து வாசிச்சனெண்டா கொஞ்ச நேரத்திலை மனசு லேசான மாதிரி இருக்கும். எங்கே கச்சேரி நடந்தாலும் நான் அங்கே போய் ரசிப்பன். ஆரிட்ட என்ன நுணுக்கம் இருக்கோ அதை அவதானிச்சு நானும் அதைப் போல செய்வன்.

இப்ப இருக்கிற பிள்ளைகளுக்கு நாங்கள் சின்னனிலை இருந்தே இந்தக் கலையிலை ஆர்வத்தைக் கொண்டு வரவேணுமெண்டா ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலையும் நாங்க அதைப்பழக்க வேணும். ஒவ்வொரு கிராமங்களிலையும் அந்தக் குழந்தைகளைத் தெரிவு செய்து சொல்லிக்குடுக்கோணும். அரசு இதிலை அக்கறை செலுத்தவேணும். இந்தக் கலையாலை வருமானம் கிடைக்கிறதில்லை எண்டு சொல்ல ஏலாது. இதிலையும் நல்ல வருமானம் பெறலாம்.

எங்கடைபெரியப்பா நல்லஒத்துழைப்புத் தந்த மனுசன். அவர் என்னுடைய முன்னேற்றத்திலை நிறையச் சந்தோசம் காணுகிற ஒருவர். என்னுடைய வீட்டிலையும் என்னுடைய மனைவி பிள்ளைகள் எல்லாரும் நல்லா இரசிப்பினம். நான் கச்சேரிகளுக்கு வெளிக்கிட்டா சகல ஒத்துழைப்பும் தருவினம். ஆனால் என்னுடைய சந்ததியிலை அடுத்து ஒருத்தரும் இதிலை ஈடுபாடு காட்டவில்லை எண்டதுதான் பெரும் கவலை. இதைக் கட்டாயப்படுத்தி செய்ய ஏலாது தானே? பாப்பம் கடவுள் என்ன நினைக்கிறானோ அதுதானே தம்பி நடக்கும். தனது மனதை தேற்றிக்கொள்கிறார் இந்த மூத்த கலைஞன்.



இப்போதைய பிள்ளைகள் எலக்ரோனிக் வாத்தியக் கருவி களிலை காட்டுற அக் கறையையும் ஈடுபாட்டையும் இதிலை காட்டுவதில்லை. இது அதுக்கு எந்த விதத்திலையும் குறைஞ்சது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைந்து
வருடம் முழுவதும்
வென்றிடுங்கள்!



உற்சாகத்துடன் ஒன்றிணைந்து இவ்வருடத்தை வெற்றிகரமான ஆண்டாக ஆக்குங்கள். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

COMMERCIAL BANK

+94 112 353 333 www.combank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











கடந்த மாதம் 20 ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண் டபத்தில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் புதல்விகளான செல்விகள் பவதாரணி, பவித்திரா சகோதரிகளின் பரத நாட்டிய அரங் கேற்றம் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், கௌரவ அதிதியாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும், விசேட அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும் கலந்து கொண்டனர்.






## கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு

வன்னியூர் செந்தூரன் எழுதிய மரணபூமியின் குரல் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் அதிபர் க. யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ச .அனிருத்தன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி த .பங்கயச்செல்வனும், கௌரவ விருந்தினர்களாக கலாசார அதிகாரி பண்டிதர் பிரதீபன், வவுனியா தமிழ் மாமன்ற மேற்சபை உறுப்பினர் மருத்துவர் செ .மதுரகன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். வாழ்த்துரைகளை கலைஞர்களான மருத்துவர் செ.மதுரகன், செ.கயானன் கம்பி களின் மொழி பிறேம், யோ .புரட்சி ஆகியோர் வழங்கினார்கள்.
–வெளியீட்டுரையை செந்தணல் வெளியீட்டக செயலாளர் கவிச்சுடர் சிவரமணி வழங்கினார்.
–நூல் வெளியீட்டை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அனிருத்தன் வெளியிட்டு வைக்க ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி த. பங்கயச்செல்வன் பெற்றுக்கொண்டார்.
–விருந்தினர் உரைகளை பிரதேச செயலர் அனிருத்தன், கோட்டக்கல்வி அதிகாரி பங்கயச்செல்வன் ஆகியோர் நிகழ்த்தினர். நூல் ஆய்வுரையை முத்தையன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய அதிபர் சி .நாகேந்திரராசா நிகழ்த்தினார். மூத்த கலைஞரும், கலாசார அதிகாரியுமான பண்டிதர் பிரதீபன் செந்தணல் வெளியீட்டகம் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். கலைஞர் உரையை பண்டிதர் பிரதீபன் நிகழ்த்தினார். (108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "வேள்வித் திருமகன்" நாடக ஆற்றுகை

கைதடியூர் நி.ஹரன்

நாடகக் கலையின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றுகின்ற நிறுவனங்களில் ஒன்றாக திருமறைக் கலாமன்றம் விளங்கி வருகின்றது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை அன்று மாலை 7 மணியளவில் திருமறைக்கலாமன்றத்தின் பிரமாண்டமான தயாரிப்பில் தை.யஸ்ரின் ஜெலூட்டின் நெறியாள்கையில் "வேள்வித் திருமகன்" என்ற நாடகம் மன்ற அரங்கில் ஆயிரக்கணக்கான பரர்வையாளர் மத்தியில் ஆற்றுகை செய்யப்பட்டது.

இந்த நர்டகத்தின் கதைச் சுருக்கம் பின்வருமாறு அமைந்திருந்தது. நடைமுறையில் உள்ள திருச்சபை சட்டதிட்டங்களுக்கு அமைய திருச்சபை பேரவையினர் செயற்பட்டு வருகின்றனர். அதேவேளை, இயேசு மக்களுக்குச் சிறந்த போதனைகளை மேற்கொண்டு மக்களின் ஜனநாயகத் தலைவனாக போற்றப்பட்டு வருகின்றார். இவரின் செயற்பாடுகள் சட்டதிட்டங்களை மீறுவதாக இருந்ததால் திருப்பேரவையினருக்கும் இயேசுவுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியது. திருப்பேரவையினர் இயேசுவின் மேல் பல்வேறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவரைக் குற்றவாளியாக்கி ரோம் நாட்டு ஆளுநர் பிலாத்து முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். ஆளுநரினால் இயேசு நிரபராதியாகக் கண்டு கொள்ளப்பட்டாலும் இயேசுவுக்கு எதிராகப் பொய்ச்சாட்சிகளைச் சொல்ல மக்களில் பெரும்பாலானோரை தம்வசப்படுத்தி திருப்பேரவையினர் வைத்திருந்ததால் அவரால் இயேசு நிரபராதி எனக்கூறி விடுதலை செய்ய முடியவில்லை. நாடகத்தின் உச்சக்கட்டமாக இயேசு சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்படுகின்றார். ஈற்றில் இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறையிலிருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து சென்று விட்டதாக அறிவிக்கப்படுகின்றது. இதுவே இந்த நாடகத்தின் கதைச் சுருக்கமாக அமைந்திருந்தது.

இயேசு, யூதாஸ் உள்ளிட்ட பன்னிரண்டு சீடர், மரியாள், கைபாஸ், அன்னாஸ் அடங்கலாக திருப்பேரவை உறுப்பினர் உரோம்நாட்டு ஆளுநர் பிலாத்து, பரபாஸ் என்ற கள்வன், யூத மக்கள் மற்றும் படை வீரர்கள், மேரி கள் போன்றோர் இந்த நர்டகத்தில் கதாபாத்திரங்களாகச் சித்திரிக்கப்பட்டனர்.

நடிப்பு இன்றேல் நாடகம் இல்லை என்று கூறுமளவுக்கு நாடகத்தின் பிரதான மூலகமாக நடிப்பு விளங்குகின்றது. அந்த வகையில் இந்த நாடகத்தில் இயேசு, பரபாஸ் போன்ற பாத்திரங்கள் ஏற்று நடித்தவர்களின் நடிப்பு ரசிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. குறிப்பாக கைபாஸ், பிலாத்து, மரியாள் போன்றோரின் நடிப்புப் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்திழுத்தது. எனினும் ஏனைய ஒருசில உதிரிப் பாத்திரங்களின் நடிப்புப் போதாமல் இருந்தது. அவர்களுடைய பங்களிப்பும் சிறப்பாக இருந்திருக்குமாயின் நாடகம் இன்னும் உயர்ந்த நிலைக்கு சென்றிருக்கும். மேலும் நாடகத்தில் நடிகர் அசையும்முறை, நிற்கும்முறை, பாத்திரம் ஒன்று கதைக்கும்போது ஏனைய பாத்திரங்களின் துலங்கல் நிலை, நடிகர்களின் குரலுக்கேற்ப பேசும் முறை போன்ற ஒருசில நடிப்பு மூலகங்களை இன்னும் கவனத்தில் கொள்வதன் மூலம் நாடகத்தை மேலும் மெருகூட்டலாம்.

> நடிப்பு இன்றேல் நாடகம் இல்லை என்று கூறுமளவுக்கு நாடகத்தின் பிரதான மூலகமாக நடிப்பு விளங்குகின்றது. அந்த வகையில் இந்த நாடகத்தில் இயேசு, பரபாஸ் போன்ற பாத்திரங்கள் ஏற்று நடித்தவர்களின் நடிப்பு ரசிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது.

மேடையில் நடிகர் ஒருவர் வந்தவுடனேயே அவர் குறிப்பிட்ட பாத்திரம் தான் என நடிகரின் புறத்தோற்றத்தை மாத்திரம் வைத்து இனங்கண்டு கொள்வதற்கு வேட உடை மற்றும் ஒப்பனை உதவி புரிகின்றது. அந்தளவுக்கு வேட உடை, ஒப்பனையின் முக்கியத்துவம் நாடகத்தில் பிரதான இடத்தை வகிக்கின்றது. இந்த நாடகத்தில் வேட உடை மற்றும் ஒப்பனை சிறப்பான வகையில் அமைந்திருந்தது. நாடகக் கதையின் காலத்தை, பாத்திரத்தை, மனநிலையைத் துலாம்பரமாகவும் அழகாகவும் வெளிப்படுத்தும் வகையில் இந்த நாடகத்தின் வேட உடை ஒப்பனை அமைந்திருந்தது.

இந்த நாடகம் இரவு வேளையில் ஆற்றுகை செய்யப்பட்ட காரணத்தால் ஒளியமைப்பு காத்திரமான இடத்தை வகித்தது. பாத்திரங்களின் வேட உடை, ஒப்பனையை பார்வையாளருக்குத் தெளிவாகக் காட்டும் வகையில் ஒளியமைப்பு அமைக்கப்பட்டிருந்தது. எந்த நேரத்தில், எந்தக் காட்சியைப் பார்வையாளர்கள் பார்க்க வேண்டும் என்பதை ஒளியமைப்பு வெளிப்படுத்தியது. பொட்டொளி, பரப்பொளி போன்றவற்றால் அரங்கில் ஒளி பாய்ச்சப்பட்டது. மங்கலாக்கி மூலம் தேவையான இடங்களில் ஒளி பாய்ச்சல் குறைக்கப்பட்டிருந்தது. சில காட்சிகளின் தேவைக்கேற்ப தீப்பந்தங்கள் பயன்படுத்தப்பட்டமை. அந்தக் காலத்தின் யதார்த்த நிலையை எடுத்தியம்பியிருந்தது. இயேசு சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்படும்போது அமைக்கப்பட்ட ஒளியமைப்பு பார்வையாளரை வெகுவாகக் கவர்ந்திருந்தது. எனினும் ஒரு சில இடங்களில் பாத்திரங்களைத் தெளிவாகத் தெரியப்படுத்தாது தனது பணியை ஒளியமைப்பு செய்யத் தவறிவிட்டது.

அடுத்ததாக அரங்க வடிவமைப்பைப் பார்த்தால் மிகவும் பிரமிக்கத்தக்க வகையில் அமைக்கப்பட்டிருந்தது. நாடகத்தின் முழுமைக்கு அரங்க வடிவமைப்பு பிரதானமான பங்கை வழங்கியது என்றால் அது மிகையாகாது. அரங்க வடிவமைப்பு மூன்று பிரதான பகுதிகளாக அமைக்கப்பட்டிருந்தது. அரங்கின் நடுப்பகுதி திருப்பேரவையினர் சார்ந்த நிகழ்விடமாகவும், அரங்கின் வலப்பக்கம் பிலாத்து ஆளுநரின் பகுதியாகவும், இடப்பக்கம் இயேசு சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்படும் இடமாகவும் அமைந்திருந்தது. எனினும் ஊர்வலப் பண்பு சார்ந்ததாக இந்த நாடகத்தின் சில காட்சிகள் அமைந்திருந்ததால், மேலதிகமாக இந்த இடங்களில் வெவ்வேறு காட்சிகள் ஆற்றுகை செய்யப்பட்டன. பார்வையாளர் அரங்குக்குள் வருகைதரும் வழியின் மேற்புறம் ஆற்றுகை வெளியாக அமைக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக ஆளுநரின் இருப்பிடம் அமைக்கப்பட்டிருந்த முறைமை சிறப்புக்குரியது.

இசையமைப்பு சிறப்பான வகையில் அமைந்திருந்தது. ஓகன், தபேலா, வயலின், ட்ரம் போன்ற இசைக்கருவிகளின் உதவியுடன் இசை இந்த நாடகத்துக்கு வழங்கப்பட்டது. பார்வையாளர் இடையிடையே நாடக மனநிலையிலிருந்து விடுபடும் நிலைக்குச் சென்றபோது அவர்களை மீண்டும் நாடக மனநிலைக்கு இழுத்து வந்து நாடகத்தோடு ஒன்றித்து வைத்த பெருமை இசையமைப்பைச் சாரும். நாடகத்தின் ஆரம்பமே இதமான பாடலுடன் அமைந்திருந்தது. இயேசுவின் அற்புதங்கள், பெருமைகள் பாடலில் வெளிப்படுத்தப்பட்டன. இயேசு சிலுவையைச் சுமந்து வரும்போது பாடப்பட்ட பாடல் உண்மையில் பார்வையாளரை மெய்சிலிர்க்க வைத்தது. நாடகத்தின் முடிவில் பாடப்பட்ட பாடல் உற்சாகத்தை ஏற்படுத்தி பார்வையாளர் மகிழ்ச்சியான மனநிலையோடு வீடு செல்வதற்கு வழிவகுத்திருந்தது.

நாடகத்தின் அழகியலுக்கு முடிவில் ஆற்றுகை செய்யப்பட்ட நடனம் வலுச்சேர்த்தது. மற்றும் ஈட்டி, தீப்பந்தம், சிலுவை, இருக்கை போன்ற அரங்கப் பொருள்களின் பயன்பாடும் இந்த நாடகத்தின் அழகியலுக்கு உதவி புரிந்தது. நாடகத்தின் சில குறியீட்டு அம்சங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. உதாரணமாக பிலாத்து ஆளுநர் தனது கையைத் தண்ணீரால் கழுவி வெள்ளைத் துணியினால் துடைத்ததன் மூலம் தனக்கும் இயேசுவின் தண்டனைக்கும் சம்பந்தமில்லை என்பது காட்டப்பட்டது. மேலும், நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட சில வார்த்தைகள் தற்கால சமூகத்துக்கும் பொருந்தக்கூடிய வகையில் அமைந்திருந்தது. எடுத்துக் காட்டாக "காட்டிக் கொடுப்புக்கள் இல்லாத வரலாறு இல்லை", "காட்டிக் கொடுத்தவன் கதிஐயோ பாவம்" என்ற வார்த்தைகளைக் குறிப்பிடலாம். நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களின் அர்ப்பணிப்புடன் வேள்வித் திருமகன் நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தமை இங்கு உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இதமான இரவுப் பொழுதில் லேசாகக் காற்று வீச, திறந்தவெளி அரங்கில் இந்த நாடகம் ஆற்றுகை செய்யப்பட்ட முறைமை பார்வையாளர்கள் மனதைக் கவர்ந்திருந்தது. குறிப்பாகக் கிறிஸ்தவ மக்களின் தவக்காலப் பொழுதில் இந்த நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டதன் மூலம், அவர்களின் இறைபக்தியை மேலும் வளர்ப்பதற்கான ஓர் ஆயுதமாகவும் இந்த ஆற்றுகை அமைந்திருந்தது. எனவே தொடர்ந்தும் இதுபோன்ற பிரமாண்டமான படைப்புக்களைத் தயாரித்து மக்களின் மத்தியில் இறைபக்தியை வளர்ப்பதோடு நாடக இரசனையையும் வளர்க்க வேண்டும் என எதிர்பார்த்து நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை
### சித்திரை-01

வியாழக்கிழமை 14.04.2016
திதி: அட்டமி பி.இ.03.12 வரை
நட்சத்திரம்: புனர்பூசம்
மு.இ.07.59 வரை
ராகுகாலம்: 01.35-03.05 வரை
சுபநேரம்: 07.35-09.05 வரை
துர்முகி வருஷப் பிறப்பு

## பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!

- வீட்டில் புகை அதிகமாகக் காணப்படுகிறதா? அறையில் ஈரத் துணியைத் தொங்க விட்டால் புகை காணாமல் போய் விடும்.
- அலுமினியப் பாத்திரங்களில் அடிப்பிடிப்புக் கறையை நீக்க உப்புக் காகிதத்தால் தேய்த்தால் பாத்திரம் புதுப்பொலிவுடன் இருக்கும்.
- பச்சை வெங்காயம் சாப்பிட்ட நாற்றத்தைப் போக்க உப்புக் கலந்த நீரில் வெங்காயத்தை ஊற வைத்து எடுத்து சாப்பிட்டால் காரம், நாற்றம் இருக்காது.
- மிதியடிக்கு அடியில் அதே அளவில் பழைய பேப்பரை வெட்டி வைத்து விட்டால் மிதியடிகள் அழுக்கு எல்லாம் பேப்பரில் சேர்ந்திருக்கும்.
- வாழைப்பழம் சீக்கிரம் கறுத்து விடாமல் இருக்க ஈரத் துணியால் சுற்றி வைத்தால் புதியன போன்று இருக்கும்.
- பீன்ஸ், அவரை போன்ற காய்களை வேக வைக்கும் போது எலுமிச்சை, தக்காளி ஜூஸ் சிறிது பிழிந்தால் சீக்கிரம் வெந்துவிடும்.
- லேசான வெந்நீரில் வெங்காயத்தை நனைத்து வெட்டினால் கண்கள் எரியாது.
- உணவில் அதிக அளவு உப்புச் சேர்ந்து விட்டால் உரித்த உருளைக் கிழங்கை அப்படியே உணவில் போட்டு விடுங்கள். உணவில் அதிகமாக இருந்த உப்பு குறைந்துவிடும்.
- கொஞ்சம் நீரில் கடுகு எண்ணெய் கலந்து மிருதுவான துணியில் நனைத்து மரச் சாமான்களை துடைத்தால் வார்னீஷ் செய்தது போல் இருக்கும்.
- பழைய புத்தகங்களை பூச்சி அரிப்பில் இருந்து பாதுகாக்க புத்தக அலமாரியில் சிறிதளவு புகையிலையை தூவினால் பூச்சி அரிப்பு இருக்காது.



## நேற்றைய கடலுணவு
### விலை நிலவரம்


| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 800 | 600 | 800 |
| நண்டு | 250 | 700 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 600 | 700 | 500 | 400 | 600 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 600 | – | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 400 | 450 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 500 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 350 | 400 | 350 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 450 | 400 | 250 |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 400 | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 250 | 350 | – | 250 | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 100 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 200 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 350 | 300 | 160 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 300 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 50 | – |
| பாலை | 400 | 250 | 250 | 300 | 500 | 250 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 400 | 300 | – |






## சிறிய சிலைகள்

சிறிய சிலைகள் விற்பனை செய்யப்படுகின்றன. அன்பளிப்புப் பொருள் களாகவும், வீட்டு அலங்காரப் பொருள்களாகவும் இவற்றைப் பயன் படுத்தலாம். நுணுக்கமான அழகான வேலைப்பாட்டுடன், அலங்கரிக்கப்பட்டுள்ள இவற்றின் விலை 600 தொடக்கம் 2500 ரூபா வரை ஆகும்.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 30 | 40 | 60 | 60 | 60 | 25 | 30 |
| கத்தரி | 100 | 60 | 70 | 80 | 70 | 40 | 40 | 50 |
| கரட் | 100 | 80 | 80–200 | 100 | 100 | 120 | 100 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 80 | 100 | 80 | 40 | 100 | 60 |
| பாகல் | 120 | 100 | 140 | 100 | 100 | 100 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 80 | – | 80 | – | 70 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 90 | 80 | 100 | 75 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 80 | 90 | 60 | 120 | 80 | 65 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 25 | 50 | 15 | 35 |
| தக்காளி | 100 | 100 | 40 | 140 | 120 | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 40 | 40 | 40 | 40 | 30 |
| கீரை | 20 | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 20 | 30 | 30 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 150 | 100 | 100 | 160 | 120 | 90 | 120 |
| புடோல் | 40 | 50 | 50 | 50 | 50 | 40 | 30 | 160 |
| கோவா | 50 | 80 | 80 | 60 | 50 | 100 | 50 | 40 |
| வெண்டி | 80 | 60 | 80 | 60 | 80 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 100 | 110 | 120 | 120 | 120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 140 | 120 | 120 | 120 | 90 |
| தேங்காய் | 40 | 38 | 50 | 40–50 | 30 | 40 | 20–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 | 90 | 80 | 100 | 75 | 100 |
| தேசிக்காய் | 200 | 350 | 200 | 200 | 240 | 200 | 300 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 80 | 200 | 120 | 140 | 120 | 70 | 80 |
| இராசவள்ளி | 140 | – | 140 | 160 | 160 | – | 110 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400 | 250 | 300 | 300 | 350 | 300 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |

## கீரை வடை




### தேவையான பொருள்கள் :

உளுத்தம்பருப்பு – 1 கப்
கடலைப்பருப்பு – கால் கப்
ஏதேனும் ஒரு கீரை – 1 கட்டு
பெரிய வெங்காயம் – 1
பச்சை மிளகாய் – 2
இஞ்சி – 1 துண்டு
சீரகம் – அரைத் தேக்கரண்டி
உப்பு – ருசிக்கேற்ப
எண்ணெய் – தேவையான அளவு

### செய்முறை :

உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பை ஒரு மணி நேரம் ஊற விடுங்கள்.

கீரையை நன்கு அலசிய பின் மிகவும் பொடியாக நறுக்குங்கள்.

பருப்பு ஊறிய பிறகு, தண்ணீரை நன்கு வடியுங்கள்.

பின்னர் மிளகாய், இஞ்சி, சீரகம் சேர்த்து கரகரப்பாக அரைத்தெடுங்கள்.

அதில் பொடியாக நறுக்கிய வெங்காயம், கீரை, உப்புச் சேர்த்து நன்கு பிசையுங்கள்.

எண்ணெயைக் காய வைத்து சற்று மெல்லிய வடைகளாக தட்டி, காயும் எண்ணெயில் எண்ணெய் கொள்ளுமளவு போட்டு, நடுத்தரத் தீயில் நன்கு வேகவிட்டெடுங்கள்.

ருசியான கீரை வடை தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்ததில் பிடித்தது

அன்பை வெளிப்படுத்தும் எதையும் கொண்டு வாருங்கள் என்று நான்கு மாணவிகளை அனுப்பினார் ஆசிரியை.
ஒரு மாணவியின் கைகளில் மலர் இருந்தது. இன்னொரு மாணவியிடம் வண்ணத்துப்பூச்சி இருந்தது. மற்றொரு மாணவியிடம் ஒரு குஞ்சுப் பறவை இருந்தது. முதலில் போன மாணவியோ கடைசியில் வெறுங்கையோடு வந்தாள்.
ஏன் என்று ஆசிரியை கேட்ட போது, "நானும் மலரைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. செடியிலேயே இருக்கட்டும் என்று விட்டுவிட்டேன். வண்ணத்துப்பூச்சியைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. சுதந்திரமாய்ப் பறக்கட்டும் என்று விட்டுவிட்டேன் குஞ்சுப் பறவையைப் பார்த்தேன். தாய்ப்பறவை தேடுமென்று விட்டுவிட்டேன்" என்றாள் மாணவி. அந்த மாணவியை அணைத்துக் கொண்ட ஆசிரியை சொன்னார்
"அன்பு என்றால் இதுதான்".
உங்களால் உலகுக்கு எதையேனும் இலவசமாகக் கொடுக்க முடியும் என்று நினைத்தால் அன்பைக் கொடுங்கள்... ஏனெனில் உலகம் அதற்குத்தான் அதிகமாக ஏங்கிக் கிடக்கின்றது.



# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 6 | | | | |
| | | | | 8 | 7 | | 1 | |
| | | 1 | 5 | | | 7 | | |
| 1 | | | | 7 | 8 | | | 6 |
| 7 | 6 | | | 1 | | | 8 | 2 |
| 8 | | | 6 | 4 | | | | 7 |
| | | 6 | | | 4 | 5 | | |
| | 1 | | 9 | 5 | | | | |
| | | | | 2 | | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 1 | 8 | 6 | 7 | 9 | 5 | 3 |
| 8 | 6 | 5 | 3 | 4 | 9 | 1 | 2 | 7 |
| 3 | 9 | 7 | 5 | 2 | 1 | 6 | 8 | 4 |
| 6 | 5 | 4 | 9 | 1 | 3 | 8 | 7 | 2 |
| 2 | 3 | 8 | 4 | 7 | 6 | 5 | 1 | 9 |
| 1 | 7 | 9 | 2 | 8 | 5 | 3 | 4 | 6 |
| 7 | 8 | 3 | 6 | 5 | 4 | 2 | 9 | 1 |
| 5 | 1 | 6 | 7 | 9 | 2 | 4 | 3 | 8 |
| 9 | 4 | 2 | 1 | 3 | 8 | 7 | 6 | 5 |


சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவேநிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில்ஏனையவற்றைநிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




# வருகிறது இரண்டாம் பாகம் "கோ-2"

டார்லிங், யாகா ராயினும் நாகாக்க படத்துக்கு பிறகு நிக்கி கல்ராணியை தமிழ் படங்களில் காணவில்லை. சிறிது இடைவெளிக்குப் பிறகு, அவர் நடித்திருக்கும் "கோ 2" எதிர்வரும் மே மாதம் வெளியீட்டுக்குத் தயாராகி இருக்கிறது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி நிக்சனை நிருபர் ஒருவர் எடுத்த புகழ்பெற்ற பேட்டி தான் பல அரசியல் தந்திரங்களுக்கு காரணமாக இருந்தது. இதை அடிப்படையாக வைத்து, தமிழ்ச் சினிமாவில் வெற்றி படங்கள் உருவாகி இருக்கின்றன. கே.வி.ஆனந்த் இயக்கத்தில் வெற்றி பெற்ற "கோ" இதன் பின்னணியிலான ஒரு கதை எனலாம். இந்தப் படத்தை தயாரித்த எல்ரெட் குமார், ஜெயராமன் அடுத்து "கோ 2" படத்தைத் தயாரிக்கின்றனர். இந்தப் படத்தை சரத் இயக்குகிறார். பாபி சிம்ஹா, பிரகாஷ்ராஜ், நிக்கி கல்ராணி இதில் நடித்திருக்கின்றனர். இதுபற்றி பாபி சிம்ஹா கூறும்போது, "இதுவரை செய்யாத புதியவேடம் ஏற்றிருக்கிறேன். எனக்கு புதிய அனுபவ மாகவும் இது அமைந்தது" –என்றார்.

பொருள்களை பயன்படுத்தி விட்டு தூக்கி வீசுவது போல் மனிதர்களை தூக்கி வீசாதீர்கள். மனிதர்களுக்கு மனதுடன் கூடிய உயிர் இருக்கிறது.



இவன் அறிவைக் கண்டு நான் வியக்கிறேன்....



ஒரு பெண் கலங்கிய கண்களுடன் பிறந்த வீட்டுக்குச் செல்லும் போது அவள் கணவன் ஆண் என்ற தகுதியை இழந்து விடுகிறான்...!

மதுமிதா :-) @madhupriyah
ஒவ்வொருவருடைய கண்ணீரும் விலை மதிப்பற்றது. தேவையற்ற காரணத்துக்காகவும் தவறான மனிதர்களுக்காகவும் கண்ணீர் சிந்தக் கூடாது.

Mr.Visho™ @visho_offl · 10h
காலத்துக்கேற்ப நம்மை நாமே புதுப்பித்துக் கொள்ளவில்லையெனில்... இந்தச் சமூகத்தில் இருந்து வலுக் கட்டாயமாக நாம் விரட்டியடிக்கப்படுவோம்.



**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய இலக்கை அடைவீர்கள். சேமிக்கும் அளவில் வருமானம் உயரும். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**இடபம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப்பணி படிப்படியாக நிறைவேறும். இலாபம் மிதமாக இருக்கும். வெளியூர் பயண திட்டத்தில், திடீர் மாறுதல் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் கலைரசனை மேலோங்கும். தொழிலில், உற்பத்தியை அதிகரித்து, ஆதாயத்தைப் பெருக்குவீர்கள். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் குடும்பச் செலவுக்காக, கடன் வாங்க நேரிடும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**சிங்கம்:** கௌரவத்துக்காக பணம் செலவழிப்பீர்கள். விடாமுயற்சியால், தொழில், வியாபாரத்தில், வருமானம் காண்பீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.



**கன்னி:** குடும்ப சூழ்நிலை, வளர்ச்சிக்கு துணை நிற்கும். சுயமுயற்சியால், தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். இலாபம் கூடும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**துலாம்:** பேச்சிலும், செயலிலும் முரண்பாடு ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளர, கூடுதல் உழைப்பு தேவைப்படும். மிதமான வருமானம் கிடைக்கும். குடும்பத்தினர் ஆதரவாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:** அவசரகதியில் செயற்பட நேரிடும். தொழிலில், குளறுபடியை சரி செய்வது நல்லது. பெண்கள், திடீர் செலவைச் சமாளிக்க முடியாமல் திணறுவர். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பை பின்பற்றவும்.

**தனுசு:** செயலில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் உயரும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் கூடும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் போட்டி, பந்தயத்தில் வெற்றி பெறுவர்.

**கும்பம்:** எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தரக் கூடாது. தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் பணப்பொறுப்பை ஏற்க வேண்டாம். உறவினரால் உதவி உண்டு.

**மீனம்:** மனதில் சுயகௌரவ சிந்தனை மேலோங்கும். தொழிலில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். உணவு விடயத்தில், எச்சரிக்கை தேவை. மாணவர்கள் நன்றாகக் கற்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு

கலந்துரையாடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பங்குபற்றவுள்ளார். கொழும்பில் எதிர்வரும் 18 ஆம் திகதி இந்தச் சந்திப்பு இடம்பெறும்.

எனவே உறுப்பினர்கள் தமக்குத் தெரிந்த காணிப் பிரச்சினைகள் தொடர்பான விவரத்தை எனக்குத் தந்தால், ஜனாதி பதியுடன் பேசுவதற்கு இலகுவாக இருக்கும் - என்றார்.

இதேவேளை, வடக்கில் காணி விவகாரம் தற்போது சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது. பாதுகாப்புத் தரப்பினரால் அடையாளப்படுத்தப்பட்ட பொதுமக்களுக்குச் சொந்தமான 108 இடங்களைச் சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காணி சுவீகரிப்புக்கு முன்னோடியாக நில அளவை மேற்கொள்ளப்படுகின்றது. இதனை பொதுமக்களுடன் இணைந்து அரசியல்வாதிகள் தடுத்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக யாழ்.மாவட்ட அரச அதிபரை, அலுவலகத்தினுள் பூட்டி போராட்டமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே, ஜனாதிபதி இந்த அவசர சந்திப்புக்கான அழைப்பை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5-ரி5)

## உதயனின்

13 ஆம் திகதி - புதுவருடப் பிறப்பிற்கு முதல் நாள் - அதிகாலை 4.30 மணியளவில், உதயன் பிரதான அலுவலகத்துக்குள் முகங்களை மூடியவாறு 3 ஆயுததாரிகள் நுழைந்தனர். உதயன் பணியாளர்களை ஆயுத முனையில் அச்சுறுத்தி - அடக்கி விட்டு, துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து, எச்சரிக்கை செய்து விட்டு, இயந்திரப் பகுதிக்குத் தீமூட்டினர்.

ஆயுததாரிகள் தாம் கொண்டு வந்த ஒரு வகைப் பதார்த்தத்தை, இயந்திரங்கள் - அச்சடிக்கப்பட்ட பிரதிகள் - அச்சுத்தாள்களின் மீது ஊற்றினர். பின்னர் தீ வைத்து எரித்தனர். இதனால், இயந்திரப் பகுதி, அச்சுத் தாள்கள், அச்சடிக்கப்பட்ட பத்திரிகைப் பிரதிகள் என்பன முழுமையாக தீயில் எரிந்து சாம்பராகின.

அழிவுகளை ஏற்படுத்திய ஆயுததாரிகள் வெளியேறிய சில மணி நேரங்களின் பின்னர், பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். கொழும்பிலிருந்து வருகை தந்த தடயவியல் நிபுணர்களும் ஆய்வுகளை மேற்கொண்டனர். இருப்பினும், இதுவரை இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் சந்தேகத்தின் அடிப்படையில் கூடக் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை, உதயன் பத்திரிகை 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இன்று வரை 38 தாக்குதல் சம்பவங்களுக்கு முகம் கொடுத்துள்ளது. இந்தச் சம்பவங்களினால் உதயன் பணியாளர்கள் 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவற்றுடன் தொடர்புடைய குற்றவாளிகள் எவரும் இன்று வரை - நல்லாட்சி அரசு ஆட்சி அமைத்து 14 மாதங்கள் கடந்த பின்னரும் - கைது செய்யப்படவுமில்லை, தண்டிக்கப்படவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## வடக்கு தீர்வு

22 ஆம் திகதியே வெளியிடப்படும் என்றும், 30 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் கையளிக்கப்படும் எனவும், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அரசியல் தீர்வுத் திட்ட வரைவு மாகாண சபையின் நேற்றைய விசேட அமர்வில் சமர்ப்பிக்கப்படும் என்று, கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்குரியவாறே நிகழ்ச்சி நிரலும் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்றைய தினம் திடீரெனத் தீர்வுத் திட்ட விவகாரம் ஒத்தி வைக்கப்பட்டது. இதற்கான காரணம் அவைத் தலைவரினால் தெரிவிக்கப்படவில்லை. ஆளும் கட்சி உறுப்பினர் இ.ஆனோல்ட், என்ன காரணத்துக்காகத் தீர்வுத் திட்ட வரைவு வெளியீடு தி டீரென ஒத்திவைக்கப்பட்டது என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பதிலளித்தார். தீர்வுத் திட்ட வரைவை 3 குழுக்கள் இணைந்து உருவாக்கின. கடந்த அமர்வில் இரண்டு குழுக்களின் தீர்வுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்போது பல்வேறு உறுப்பினர்களாலும் திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டன. இதில் நடைமுறைச் சிக்கல் இருக்கின்றது. மூன்றாவது குழுவின் யோசனைகள் இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. நேரமின்மையால் என்னால் சில விடயங்களைச் செய்ய முடியாமல் போய்விட்டது.

தீர்வுத் திட்டம் தொடர்பில் உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர். அவற்றையெல்லாம் உள்ளடக்க வேண்டியிருக்கின்றது. இதனால் இன்றைய தினம் சமர்ப்பிக்கவில்லை. விரைவில் இவற்றையெல்லாம் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படும் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்க நியமிக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் குழு நாளை மறுதினம் 15 ஆம் திகதி ஒன்று கூடிக் கலந்துரையாடல் நடத்தும். இதன்போது வரைவு இறுதி செய்யப்பட்டு, எதிர்வரும் 22 ஆம் திகதி சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படும் என்றும், அதன் பின்னர் 30 ஆம் திகதி இறுதித் தீர்வு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் கையளிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(த-வ-5-ரி5)

## ஏகமனதாக

விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினால், போக்குவரத்து நியதிச் சட்டம் கடந்த பெப்ரவரி மாதம் மாகாண சபை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது நியதிச் சட்டம் குழுநிலையில் விவாதிக்கப்பட்டிருந்தது. நேரம் போதாமையினால் எஞ்சிய விட யங்கள் ஆராயப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் நேற்றைய அமர்வில், வீதிப் போக்குவரத்து நியதிச் சட்டம் சபையில் குழுநிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு விடயமும் ஆராயப்பட்டுத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, திருத்தங்களுடன் நிய திச் சட்டம் சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதேவேளை, வீதிப் போக்குவரத்து நியதிச் சட்டம் ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் நடைமுறைக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ-5-ரி5)

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி மேரி தேக்ளா கிறிசோஸ்ரொம்- தி.கு



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். திருக் குடும்பசபையைச் சேர்ந்தவருமான அருட் சகோதரி மேரி தேக்ளா கிறிசோஸ்ரொம் செவ்வாய்க்கிழமை 12.04. 2016 இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.04.2016) புதன் கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்,
மாகாணத் தலைவி

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(J 319)
(12.18)

### வைத்தியகலாநிதி சுப்பிரமணியம் கனகரட்ணம்

(இளைப்பாறிய தபால் அதிபர், சமாதான நீதிவான்)



வட்டு வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் இல.82/112 இராமநாதன் தொடர்மாடி கொழும்பு 13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியகலாநிதி சுப்பிரமணியம் கனகரட்ணம் 11.04.2016 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிமணியம் - பரிமளம் தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா - சாரதாம்பாள் தம்பதியரின் மருமகனும், தனபாக்கியலஷ்மியின் அன்புக் கணவரும், முத்தாரின் அன்பு மருமகனும், கீதாஞ்சலி (UK), கிருஷ்ணவேணி (UK), வைத்திய கலாநிதி, கிருஷ்ண பிரசாத் (கொழும்பு), ராதாகிருஸ்ணா (முகாமைத்துவ உதவியாளர் - யாழ். போதனா வைத்திய சாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார் (பொறியியலாளர்-UK), யோகேந்திரன் (பொறியியலாளர்-UK), ரூபினி (முகாமைத்துவ உதவியாளர் - திறந்த பல்கலைக் கழகம் நாவல), கோணேசன் (ஆசிரியர் - கேகாலை சாந்தமரியாள் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்மிகா (UK), ரக்சன் (UK), கிருதினன் (UK), அஸ்வினன் (UK), ஷர்னி (UK), துர்க்கவாசினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஞானானந்தராஜா (இளைப் பாறிய பிரதம புகையிரத நிலைய அதிபர்) சிவப்பிரகாசம் (துறைமுக அதிகாரசபை அதிகாரி), மணிவாசகம் (இராணுவப் பொறியியலாளர்), நாகேஸ்வரி மற்றும் சண்முகானந்தசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நித்தியானந்தம், சச்சிதானந் தம் (ஆஸ்திரேலியா), தயானந்தம், தூயமணி, திலகராணி, முருகானந்தன் (UK) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2016) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் (தெல்லிப்பழை வீதி, வட்டு.வடக்கு, சித்தன்கேணி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தெல்லிப்பழை வீதி, வட்டு.வடக்கு,
சித்தன்கேணி

**077 623 0743, 077 192 3276**

## மரண அறிவித்தல்கள்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### திருமதி அன்னபூரணம் பரஞ்சோதி

(ஆச்சாரியார்)



பிறப்பு 02.03.1929 | இறப்பு 11.04.2016

அராலி தெற்கு, கரைப்பிட்டிப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னபூரணம் பரஞ்சோதி 11.04.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு பரஞ்சோதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - அருளம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற இராஜகோபால் மற்றும் வரதராஜா, கருணாகரன், மகேந்திரன், தெய்வேந்திரன், ராதா, சறோஜினிதேவி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


அராலி கரைப்பிட்டி பிள்ளையார்
கோயிலடி.

தகவல்:
குடும்பத்தினர்

**075 828 3217**

(ஜே/318)
(11,17,18)

### மாணிக்கவாசகர் வையந்திக்குமார் (சிவா)



தோற்றம் 09.10.1963 | மறைவு 10.04.2016

யாழ்.சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Toulouse ஐ வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் வையந்திக்குமார் 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர்-தங்கரத்தினம் தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான மணிமாஸ்ரர் - அம்முனுக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகனும், நீனாவின் அன்புக் கணவரும், தர்ஷிகா, தர்ஷனா, நதீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளராணி (பிரான்ஸ்), புஸ்பராணி (இணுவில்), இந்திராணி (சுன்னாகம்), வசந்தகுமார் (சுவிஸ்), கமலராணி (சுவிஸ்), ஜெயராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராமலிங்கம், சிவஞ்செயல், சந்திரசிங்கம், நந்தினி, ரவீந்திரன், அருளார் நிமலன்,பாபு, பிந்து (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மது(இந்தியா), சிறிதேவி (இந்தியா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2016) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மயில்வாகனம்
சந்திரசிங்கம்
(மைத்துனன்)

பெரியமாவடி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

**072 895 3038, 021 300 2125**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG)**
**மாந்தைகிழக்கு பிரதேசசபை பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் , வட மாகாணம்.**

நட்டாங்கண்டல் மயானத்திற்கான எரி கொட்டகை அமைத்தல் -
ஒப்பந்த இல: **NP/MU/MEPS/PSDG/W/01/2016.**

நட்டாங்கண்டல் இறுதி கழிவகற்றுமிடத்திற்கான வேலி அமைத்தல்-
ஒப்பந்த இல: **NP/MU/MEPS/PSDG/W/02/2016.**

1. வடமாகண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின்கீழ் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டத்திற்குமான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, மாந்தை கிழக்கு பிரதேசசபை தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட விதிபுன ரமைப்பு வேலைக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட அமைப்பு மற்றும் வீதிக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. **தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.**
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் (தொலைபேசி: 024 324 3663 e.mail – manthaieastps@yahoo.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 2.00 மணி வரை 05.05.2016 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் எனும் இடத்திலிருந்து 13.04.2016ஆம் திகதியிலிருந்து 05.05.2016 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **1000/-** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு மாந்தைகிழக்குபிரதேசசபை, பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் எனும் முகவரிக்கு 05.05.2016ஆம் திகதி மாலை 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று – 05 07. 2016) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/MU/MEPS/PSDG/W/01/2016 | நட்டாங்கண்டல் மயானத்திற்கான எரிகொட்டகை அமைத்தல் | 0.43 | 1 மாதம் | C 10 அல்லது அதற்குமேல் | 4400.00 (காசாக செலுத்தப்படல் வேண்டும்.) | |
| NP/MU/MEPS/PSDG/W/02/2016 | நட்டாங்கண்டல் இறுதிக்கழிவகற்று மிடத்திற்கான வேலி அமைத்தல் | 2.29 | 2 மாதம் | C 8 அல்லது அதற்குமேல் | 23000.00 (BOND) | 07.07.2016 |

11) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு மாந்தைகிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் அலுவலக கட்டடத்தில் 27 .04. 2016 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒபபந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.

தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு
மாந்தை கிழக்கு பிரதேசசபை.
பாண்டியன்குளம்,
நட்டாங்கண்டல்.
12.04.2016

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் பணி புரியும் **கு.ஜனேந்திரன்** அவர்களின்பாசமிகுபெரியப்பா **சின்னத்தம்பி சண்முகநாதன்** அவர்களின் மரணச் செய்தி கேட்டு வேதனை அடைவதோடு அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமையாளரும், ஊழியர்களும்**
**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**212,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

## வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை
## மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 07**
**ஆதன இலக்கம் :- 406/8 (புதிய இலக்கம்)**
**யாழ். மானிப்பாய் வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு :- J/133 ஆனைக்கோட்டை.**

வட்டாரம் 07, யாழ் மானிப்பாய் வீதி. ஆதன இலக்கம்406/8 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை " பருத்திக்காடும் மறுபிரிவுகளும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 10.06 கொண்ட) இவ்வாதனமானது யாழ்ப்பாணம் அளவெட்டி வடக்கு. முதலியார் கோயிலடியைச் சேர்ந்த சண்முகம் ஜெயசுந்தரம் பெண் திரவியம் ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி இல: 612/4 காங்கேசன்துறை வீதியைச்சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசம் கைம்பெண் யோகேஸ்வரி என்பவருக்கு பிரசித்த நொத்தரிஸ் திரு.ந. விஸ்வலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 5226 ஆம் இலக்க 2015.03.10 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திரு. எஸ். மகாலிங்கம் அவர்களால் வரையப்பட்ட 1514 ஆம் இலக்க 2015.03.07 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " பருத்திக்காடும் மறுபிரிவுகளும்" நிலப்பரப்பு 01 குளி 10.06 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செபஸ்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசம் கைம்பெண் யோகேஸ்வரி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறித்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

# பனை அபிவிருத்திச் சபை
# சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம் மீள்குடியேற்றம், மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

## சுயதொழில் வாய்ப்பு!
## வாழ்வாதார மேம்பாடு!

பனையின் மூலப்பொருள்களை மூலாதாரமாகக் கொண்டு பின்வரும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

01. பனங்கைப்பணிப் பயிற்சி
02. பனந்தும்புப் பயிற்சி
03. பனஞ்சாற்றுப் பயிற்சிகள்
04. பனைசார் உணவுப்பயிற்சிகள்
05. பதநீர்சார் பயிற்சிகள்

பயிற்சிகளில் இணைய விரும்புபவர்கள் தங்கள் விவரங்களை கிராம அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய மற்றும் சமூக பொது அமைப்புக்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொது அமைப்புகள் ஊடாகவும், நேரிலும், பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டோர், விசேட தேவைக்குரியோர், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மீள்குடியமர்ந்தோர், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர், மற்றும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டோர் என்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.பயிற்சிகள் முடிவில் உற்பத்திக்கான உபகரணங்கள், தொழிநுட்ப ஆலோசனைகள், மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதுடன் உற்பத்திக்கான சந்தைவாய்ப்பும் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

**பனை அபிவிருத்திச் சபை**
**தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம்,**
**முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 021 222 2034, (077 3620584)**

**செயலாளர்,**
**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிவில்

றைய அமர்வில், பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர பிரேரணை ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரனினால் சமர்ப்பிக் கப்பட்டது.

பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற் றிய ரவிகரன், இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட் டத்தில் வெளிமாவட்ட மீனவர்கள் முல் லைத்தீவுக் கடற்கரையில் அனுமதியின் றித் தங்கியிருந்து மீன் பிடியில் ஈடுபடுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமெனத் தீர் மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் மாவட்ட நிர்வாகத் துக்குத் தெரியாமல் கடற்றொழிலில் ஈடு பட்டிருக்கும் வெளிமாவட்ட மீனவர்களின் விவரங்கள் அரச அதிபரின் பணிப்பின் படி, கிராம அலுவலர்களால் சேகரிக்கப் பட்டு வருகின்றன.

கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலு வலர் பிரிவில், புலிபாய்ந்த கல் அருகா மையில் இவ்வாறு அத்துமீறிக் குடியேறி கடற்றொழிலில் ஈடுபட்ட தென்னிலங்கை மீனவர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கச் சென்ற கிராம அலுவலர் சீவரட் ணம் யேசுரட்ணம், அத்துமீறிக் கடற் றொழிலில் ஈடுபடும் வெளிமாவட்ட மீன வர்களால் தாக்கப்பட்டார்.

பின்னர் இந்த மீனவர்களால் தொலை பேசி மூலம் தகவல் அனுப்பப்பட்டு 593 ஆவது படைப்பிரிவின் கேணல் சமந்த சில்வா உட்பட சில இராணுவத்தினர் அங்கு வருகை தந்துள்ளனர். கேணல் சமந்த சில்வா கிராம அலுவலரின் தேசிய அடையாள அட்டை மற்றும் உத்தியோக அடையாள அட்டை என்பவற்றைப் பறி முதல் செய்து, அவரை மரியாதைக் குறை வாகத் திட்டியுள்ளார்.

இது என்ன? சிவில் நிர்வாகமா? அல்லது இராணுவ ஆட்சியா? நடக்கின்றது. பொறுமைக்கும் எல்லை உண்டு என் பதைத் தெரிவிப்பதோடு, இராணுவ - கடற் படையின் ஒத்துழைப்புடன் அரங்கேற்றப் படும் இப்படியான சட்டம் ஒழுங்கு சீர் குலைவை மாவட்டத்தின் மக்கள் சார்பாக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அவர்கள் பிழை செய்தால் குற்றமில்லை, நாங்கள் பிழை செய்யாமலே குற்ற வாளிகள் ஆக்கப்படுகின்றோம். இப்படி யான அராஜகங்கள் நிறுத்தப்படவேண்டும் என்று நல்லாட்சி அரசுக்கு தெரிவிக் கின்றேன் - என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சி உறுப்பினர்களும், சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத் தலையீட்டை வன்மையாகக் கண்டித்துக் கருத்துத் தெரிவித்தனர். இறுதியில் இந் தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரே ரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட் டது.

(து-வ-5-ரி5)

## கீரிமலையில்

காங்கேசன்துறை கடற்படைத் தளபதி யினால், தெல்லிப்பழைப் பிரதேச செய லாளரிடம் இதற்குரிய ஆவணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் கீரி மலை, நகுலேஸ்வரம் பகுதி கடந்த 26 வருடங்களாக இருந்து வருகின்றது. நகு லேஸ்வரம் கோயிலுக்கு முன்பாகவுள்ள இந்தப் பகுதியில், கடற்படையினர் தமது முகாம்களை அமைத்திருந்தனர்.

இந்தக் காணிகளைச் சுவீகரிப்பதற்குப் பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டிருந்தன. இருப்பினும் மக்களின் எதிர்ப்பினால் அது கைவிடப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில், இந்தக் காணிகளை விடுவிப்பதற்கு, சில மாதங் களுக்கு முன்னரே கடற்படையினர் இணங்கியிருந்தனர். நேற்றைய தினம் இதனை உத்தியோகபூர்வமாக மக்களிடம் கையளித்துள்ளனர்.

காணிகளின் உரிமையாளர்கள், தெல் லிப்பழை பிரதேச செயலர் க.சிறிமோகன், வலி.வடக்குப் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

17 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள், ரேணுகா ஆச்சிரமம், செம் மண் வாய்க்கால் மயானம் என்பனவும் இதன்போது விடுவிக்கப்பட்டுள்ளன. பொன்னாலை - கே.கே.எஸ். வீதியின் சிறு துண்டும் இதன்போது பொதுமக் களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டுள் ளது.

**புத்தர்சிலையை விட்டுச்சென்ற கடற்படை**

இதேவேளை, கடற்படையினர் இந்தப் பகுதியில் அமைந்திருந்த அரச மரத்தின் கீழ் புத்தர் சிலை ஒன்றை வைத்திருந்தனர். மக்களிடம் காணிகளைக் கையளித்த போதும், அந்தப் புத்தர் சிலையை அகற்ற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(த-5-10ரி)

## கிராம

செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அந்தச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவின் கொக் குத் தொடு வாய் வடக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை, அத்துமீறிக் குடி யேறியிருந்த தென்னி லங்கை மீனவர்கள் தொடர்பில் தகவல் திரட்டு வதற்குச் சென்ற கிராம அலுவலர்கள் தாக்கப்பட்டி ருந்தனர். அத்துடன் குறித்த கிராம அலுவலர் கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டதுடன், அவர்களின் அடையாள அட்டைகளும் அவர்களி னால் பறிக்கப்பட்டிருந் தன.

இதனையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாகக் கிராம அலுவலர்கள் போராட்டம் நடத்தியிருந்த னர். சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீட்டை அவர்கள் கண்டித்தி ருந்தனர். வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்விலும் இது தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவ விசா ரணை மேற்கொள்வதற்காகக் கொழும் பிலிருந்து விசேட இராணுவ அணி யொன்று முல்லைத்தீவுக்குச் செல்ல வுள்ளதாக, இராணுவத் தரப்புத் தகவல் கள் தெரிவித்துள்ளதாக அதில் கூறப்பட் டுள்ளது.

(த-வ-5)


## மரண அறிவித்தல்

**தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம் (ரவி)**



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கரியாலை நாகபடு வானை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம் நேற்று (12.04.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் சோதி தம்பதியரின் அன்பு மருமகனும், தாரணியின் (தாரா) அன்புக் கணவரும், கௌசிகன், காலஞ்சென்ற பிரிந் தன் மற்றும் தமிழ்ப்பிரியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமணிதேவி, ஜெயமணிதேவி, அறிவழகன் (அருள்) ஆகி யோரின் பாசமிகு சகோதரனும், லோகநாதன், சிவசாந்தன், வனிதா, புஸ்பராசா (பிரான்ஸ்), புஸ்பகுமார் (டென்மார்க்), காலஞ்சென்ற புஸ்பலதா மற்றும் ஸ்ரீபிரியா ஆகியோரின் பாச மிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கரியாலை நாக படுவான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரியாலை, நாகபடுவான்,
முழங்காவில்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

## முதலித்தம்பி தம்பிஜயா



யாழ் இணுவில் வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமா கவும் கொண்ட முதலித்தம்பி தம்பிஜயா நேற்று(12.04. 2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசாத்தியின் அன்புக் கணவரும் சத்தியதேவி, சிவகுமாரன்(முகாமையாளர் ஆசிரிய மத்திய நிலையம் மானிப்பாய்).மனோகரி(லண்டன்), சோபிதா(பிரான்ஸ்), கமலாசனி (ஆசிரியர் யா/ இராமநாதன் கல்லூரி), பாலகுமார்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் இராமச் சந்திரா, ஜெயமலர் பாஸ்கரன்(லண்டன்), தேவபாலன்(பிரான்ஸ்), இராஜம னோகரன் (யாழ் மாநகர சபை), கார்த்திகா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கீர்த்தனன், கஜானன், தர்சன், சிவலவன்.அபிநயா.ஹரிகேசன், பிரசாந்தி, பிரியங்கா, பிரதா, பிரசாயினி, பிரணவி, சுகசிந்தவி, அக்சயன், சாஸ்வதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை, பொன்னுத்துரை கனகம்மா மற்றும் பூமணி ஞானமணி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2016) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

## சின்னப்பா ஐயாத்துரை

(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 . 02 . 1922 |  | 12 . 04 . 2016 |

கோவிலாக்கண்டி மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் சரசாலை தெற்கு, சாவகச் சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா ஐயாத்துரை 12.04. 2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா-பொன்னு தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும்காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர்-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் தில்லைவனராஜா (ஓய்வு பெற்ற இ.போ.ச.சாலை பரிசோதகர்), மல்லிகாவதி, தர்மராஜா(ஓய்வு பெற்ற சுகாதாரப் பிரிவு சாரதி), யோகராஜா(பதவி நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் விவசாயபீடம் யாழ் பல்கலைக் கழகம்), சிவானந்தராஜா(தேசிய வீடமைப்பு அதிகாரசபை யாழ்ப்பாணம்), நகுலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுசிலாதேவி(ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சின்னத்துரை.மனோரஞ்சினி, ஜெயரதி.கமலாதேவி, அருந்தவராஜா (ஞானம் ஸ்ரோஸ் மந்துவில்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இன்பராஜ் (லண்டன்), அருள்வேள்- கோசலா (சிங்கப்பூர்), செந்தூரன்- சியாமினி(லண்டன்), ஐங்கரன்-பிரியா,செல்மயூரன்-ஜெயஜீவனி(லண்டன்) இராஜேஸ்வரன்- தயாரதி, புவனச்சந்திரன்-தயாவேணி (லண்டன்) ,தவக்குமார்-கீதாயினி, ரஞ்சித்-கிருபாலினி(லண்டன்), சிவவாணி, சிவவதனி,சர்மிளன்-லக்சிகா (இத்தாலி),கிரிதரன், பிரதீஸ்-சுகந்தினி (இத்தாலி),சிவபரன், அமுதன் (லண்டன்), நிரஞ்சன்-ஜெயதாரணி (கனடா), அச்சுதன், அமிர்தவர்சினி, நிகேஷ் (லண்டன்), கேதீஸ், நற்சபேஷ்.மிதுனா, சுபராஜ், கஜராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும் திருவேள், வேனினி, அபிசனன், அபிசாளினி, பவிஸ்னா, அக்சயன், தனுஷகன், கபிஸனா, சர்யுன்.பிரணவி, நிதின், நேகா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.04.2016 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் (சரசாலை) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.


சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 465 6317


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழுவின் பிரதம தேர்வாளராக சனத் ஜெயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்

## அரவிந்த டி சில்வாவுக்கும் முக்கிய பதவி



இலங்கை அணியின் பிரதம தேர்வாளராக, அந்த அணியின் முன்னாள் தலைவரான சனத் ஜெயசூரிய, எதிர்வரும் மே முதலாம் திகதி முதல் நியமிக்கப்படவுள்ளதாக, இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திலங்க சுமதிபால உறுதிப்படுத்தியுள்ளார். மற்றொரு முன்னாள் தலைவரான அரவிந்த டி சில்வா இலங்கை கிரிக்கெட் சபையில் கிரிக்கெட் விவகாரங்களுக்கான தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்காக நியமிக்கப்பட்ட அரவிந்த டி சில்வா தலைமையிலான தெரிவுக்குழுவின் பதவி, ஏப்ரல் மாத இறுதியுடன் முடிவடையவுள்ள நிலையிலேயே, பிரதம தேர்வாளராக சனத் ஜெயசூரிய உறுதிப்படுத்தப் பட்டுள்ளார். சனத் ஜெயசூரியவின் நியமனம் தொடர்பாக, இலங்கை கிரிக்கெட் சபையில் ஏற்கனவே ஓரளவு உறுதியான முடிவு எடுக்கப் பட்டிருந்தாலும், விளையாட்டுத்துறை அமைச்சரால் அந்தப் பதவி உறுதிப்படுத்த வேண்டுமென்பதால், அது தொடர்பான அறிவிப்பு வெளியிடுவது தாமதாகியிருந்தது. இந்த நிலையிலேயே, கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால, இது தொடர்பான அறிவிப்பை நேற்று வெளியிட்டார்.

பிரதம தேர்வாளராக சனத் ஜெயசூரிய அறிவிக்கப்பட்டாலும், தெரிவுக் குழுவில் இடம்பெறவுள்ள ஏனைய உறுப்பினர்களின் விவரம் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. ஆனால், முன்னாள் இலக்குக் காப்பாளரான றொமேஸ் களு விதரண, முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான ரஞ்சித் மதுரசிங்க ஆகியோர், இந்தக் குழாமில் இடம்பெறுவரென எதிர் பார்க்கப்படுகிறது. இந்தக் குழாமின் பதவிக்காலம் தொடர்பாக இது வரை உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால் 2019ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ணத் தொடர்வரை, இந்தக் குழுவின் நடவடிக்கைகள் இடம்பெறும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்னர், 2013ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2015ஆம் ஆண்டு மார்ச் வரை, இலங்கையின் பிரதம தேர்வாளராக சனத் ஜெயசூரிய பதவி வகித்ததோடு, அக்காலத்தில் ரி-20 உலகக்கிண்ணத்தை வென்றிருந்தது. ஆனால், சிரேஷ்ட வீரர்களான மகேல ஜெயவர்தன, குமார் சங்கக்கார ஆகியோருடன் சிறந்த உறவைப் பேணியிருக்காத சனத் ஜெயசூரிய, அவர்க ளோடு பகிரங்கமாக வாய்த்தர்க்கங்களிலும் ஈடுபட்டிருந்தார். இது, அவரது காலத்தில் காணப்பட்ட முக்கியமான குறைபாடாகக் கருதப்பட்டது. இதேவேளை, இலங்கை கிரிக்கெட்டை முன்னேற்றுவதை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை கிரிக்கெட் சபையில் கிரிக்கெட் விவகாரங்களுக்கான தலைவராக, இலங்கை அணியின் முன்னாள் தலைவரான அரவிந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளதாக, இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால, நேற்றுத் தெரிவித்தார்.

இவருடைய பதவிக்காலம் தொடர்பான தகவல்களும், இது வரை வெளிவரவில்லை.

(ம)

## இன்றைய மோதல்கள்

**விக்ரோறி வி.க.தொடர்**

மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் அணி மோதவுள்ளது. மேற்படி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகன தாஸ் அணியுடன் மோத வுள்ளது.

**அல்ஹிஜிரா வி.க.தொடர்**

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய அஸ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லயன்ஸ் அணியை எதிர்த்து அல் இக்பால் அணி மோதவுள்ளது. (ம-23)

## பிராவோ 300 இலக்குகள்

இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் குஜராத் லயன்ஸ் அணியின் சார்பாக விளை யாடிவரும் டுவைன் பிரா வோ, கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கெதிராக நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நான்கு இலக்குகளை வீழ்த் தியதன் மூலம் ரி-20 ஆட்டங்களில் 300 இலக்குகளைக் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளார். மேற்படி ஆட்டத்தில் டேவிட் மில்லரின் இலக்கைக் கைப்பற்றிய போதே டுவைன் பிராவோ, இந்த மைல்கல்லை எட்டினார். இதுவரை, 292 ரி-20 ஆட்டங்களில் விளையாடியுள்ள டுவைன் பிராவோ, இந்த ஆட்டத்துடன் சேர்த்து 302 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். (ம)

## விடைபெற்றார் ஜேம்ஸ் ரெய்லர்

இருதயக் கோளாறு காரணமாக இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் ஜேம்ஸ் ரெய்லர் தனது 26ஆவது வயதிலேயே கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற நேரிட்டுள்ளது.

இருதயத்தின் வலது அறையில் தசை சுருங்கி விரிவதில் இவருக்கு தீவிர பிரச்சினைகள் இருப்பது மருத்துவப் பரிசோதனையில் தெரிய வந்தது. இருதய தசை சுருங்கி விரிவதில் பிரச்சினைகள் இருந்தால் அது மாரடைப்பில் போய் முடியும். இதனால் அவர் ஓய்வை அறிவித்துள்ளார்.

மார்ச் 2012இல் கால்பந்து வீரர் பாப்ரிஸ் மும்பா இதே காரணத்தல் தான் மைதானத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு சாவடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஜேம்ஸ் ரெய்லருக்கு இதற்கான அறுவைச் சிகிச்சை விரைவில் நடைபெறவுள்ளது. அவர் தற்போது நாட்டிங்கம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம)

## தொடர்ச்சிகள்...

### பிணையில்

குறித்த அரசியல் கைதியைப் பிணையில் எடுத்தவரைக் காணவில்லை என்றும், அவரைத் தம்மிடம் ஒப்படைத்துவிட்டுக் கைது செய்யப்பட்டவரை மீட்டுச் செல்லுமாறும் பயங்கரவாதப் பிரிவினர் கூறியுள்ளதாகக் கைது செய்யப் பட்டவரின் சகோதரி தெரிவித்தார்.

சாவகச்சேரி மறவன்புலோவில் ஆயுதங்கள் மீட்கப்பட்ட நிலையில், தற்போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி திருவையாறு பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் கேதீஸ்வரன் (வயது 21) என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவர் 2014 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதியும் அரசியல் கைதியாக அவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்று, அவரது சகோதரி குறிப்பிட்டார்.

குறித்த அரசியல் கைதியின் பெயரில் இருந்த சிம் கார்ட் ஒன்றிலிருந்து முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட கோபி, அப்பன் உள்ளிட்டவர்களுடன் அழைப்புத் தொடர்பு இருந்ததாகப் பயங்கரவாதப் பிரிவினர் குற்றஞ்சாட்டியிருந்தனர். பின்னர் சிறையில் உண்ணாவிரதமிருந்து, கடந்த வருடம் நவம்பர் 13 ஆம் திகதி அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பில் கைது செய்யப் பட்ட அரசியல் கைதியின் சகோதரி தெரிவிக்கையில்,

அவருக்கு எதிராகக் கொழும்பு 8 ஆம் இலக்க நீதிமன்றில் வழக்கு நிலுவையில் உள்ளது. அவரைப் பிணையில் விடுவித்தபோது, கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த விவேகானந்தன் (வயது - 23) என்பவர் கையெழுத்திட்டிருந்தார்.

அதன் பின்னர் கடந்த 4 மாதங்களாக விவேகானந்தன் எமது வீட்டுக்கு வந்து செல்வார். அவர் கொழும்பில் கூலி வேலை செய்வதாக எமக்குக் கூறியிருந்தார். அவர் கிளிநொச்சிக்கு வரும்போது, எமது வீட்டுக்கும் வருவார். அவர் ஏற்கனவே பாவிக்கப் பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றை யாழ்ப்பாணத்திலுள்ள கராஜ் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்து பயன்படுத்தி வருகிறார். அந்த மோட்டார் சைக்கிள் பழுதடைந்ததால் கராஜ் ஒன்றில் விட்டிருந்தார்.

இந்தநிலையில் கடந்த 6 ஆம் திகதியிலிருந்து அவரைக் காணவில்லை என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் எமது வீட்டுக்கு வந்து கூறியதோடு, அவர் எங்கே என்றும் கேட்டனர். எமக்கு அவர் பற்றிய விடயம் எதுவும் தெரிந்திருக்கவில்லை. அவர் கொழும்பு சென்று எப்பொழுது திரும்புவார் என்றும் தெரியாது. வரும்போது எமது வீட்டுக்கு வருவார் என்று அவர்களுக்குக் கூறியதோடு, விவேகானந்தனுக்கு அழைப்பை ஏற்படுத்தியபோதும் கிடைக்கவில்லை.

இந்தநிலையில் அவரைக் காணவில்லை என்றும், அவரை ஏன் உங்கள் வீட்டில் தங்க வைத்தீர்கள் என்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கேட்டிருந்தனர்.

பின்னர் சில நாள்களாக எமது தந்தையையும் சகோதரர்களையும் விசாரணைக்கு அழைத்திருந்தனர். அவர்கள் விசாரணைக்குச் சென்று வந்திருந்தனர். அதன்பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணி அளவில் எமது வீட்டுக்கு வந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், மீண்டும் விசாரணை செய்யவேண்டும் என்று கூறி அழைத்துச் சென்றனர்.

அவரை வவுனியாவில் தடுத்து வைத்திருப்பதாகக் கூறினர். பின்னர் கொழும்பு 4 ஆம் மாடிக்குக் கொண்டு சென்று விட்டதாகக் கூறினர். அவரை பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைத்துள்ளதாகவும், தேவையென்றால் அங்கு சென்று பார்க்குமாறும் இறுதியாகக் கூறியுள்ளனர்-என்றார்.

அவரைத் தந்தையார் சென்று பார்வையிட்டிருந்தார். அவர் பைத்தியம் பிடித்ததுபோல் உள்ளார் என்று தந்தையார் கூறியுள்ளார்.

இதேவேளை அவர் என்ன காரணத்துக்காகக் கைது செய்யப் பட்டுள்ளார் என்பது உள்ளிட்ட விடயங்களுக்காகப் பொலிஸ் பேச்சாளருடன் தொடர்புகொண்டபோதும் பதில் கிடைக்கவில்லை. (த-வ-4)

### பதில் பொலிஸ்மா

இலங்கக்கோன் நேற்று ஓய்வு பெற்றதை அடுத்து, பொலிஸ்மா அதிபருக்கான பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. புதிய பொலிஸ்மா அதிபருக்கான பெயரை அரசமைப்புச் சபை பரிந்துரை செய்யும் வரை பதில் பொலிஸ்மா அதிபர் கடமையாற்றுவார்.

இதேவேளை, கடந்த காலப் பொலிஸ்மா அதிபர்களுள் சிறந்தவராக இலங்கக்கோன் திகழ்கிறார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(த-வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிண்ணம் வென்றது மோகனதாஸ்

கரணவாய், ஏப். 13
வரணி இயற்றாலை கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகத்தை 7 இலக்குகளால் தோற்கடித்து கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகம் 9.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக செந்தீபன் 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தனுசியன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

60 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் 9.2 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகள் இழப்புக்கு இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக பார்த்தீபன் 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். ஆட்டநாயகனாக பார்த்தீபனே தெரிவு செய்யப்பட்டார். (ம-108)





## டயமன்ஸ், மனோகரா அணிகள் சம்பியனாகின கரவெட்டி பிரதேச இளைஞர் கழக எல்லேயில்

கரணவாய், ஏப். 13
கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் மனோகரா விளையாட்டுக் கழகமும் நடப்பு வருடத்தின் வலயச் சம்பியனாகின.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் குறித்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன. முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மனோகரா விளையாட்டுக் கழகம் 50 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பாக மிதுசன், தனேஸ் இருவரும் தலா ஓர் ஓட்டத்தைப் பெற்றனர். 3 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் 25 பந்துகளில் இலக்கை அடைந்து சம்பி யனாகியது. அந்த அணியின் சார்பாக பிறேம்குமார், ஐங்கரன் மற்றும் ஆதித்தியன் மூவரும் தலா ஓர் ஓட்டத்தைப் பெற்ற னர். தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிவகுமரன் அணி ஓட்டங்கள் எதனையும் பெறாது ஆட்டமிழந்தது. ஓர் ஓட்டத்தை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய மனோகரா விளையாட்டுக்கழகம் இலகுவில் சம்பியனாகியது. (ம-108)

## பெருவிளையாட்டுக்கான அட்டவணை தயாரித்தல்

மாங்குளம், ஏப். 13
வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான நடப்பு வருடத்துக்கான பெருவிளையாட்டுப் போட்டிகளுக்கான அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு எதிர்வரும் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் மன்னார் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஒவ்வொரு வலயத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள், உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)

## அருளொளி வி.கழகத்தின் துடுப்பாட்டத் தொடர்கள்

மாங்குளம், ஏப். 13
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடமராட்சி அருளொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடர் எதிர்வரும் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. 18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான தொடர், திறந்த வயதுப் பிரிவினருக்கான ஆண்களுக்கான தொடர், திறந்த வயதுப் பிரிவினருக்கான பெண்களுக்கான தொடர் என மூன்று பிரிவாக நடைபெறவுள்ள இந்தத் தொடர்களில் பங்குபற்ற விரும்பும் அணிகள் ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். (ம-422)



## வெற்றியுடன் விடைபெற்றார் பக்கியோ

தனது இறுதி மோதலில் திமோதி பிரட்லியை வீழ்த்தி வெற்றியுடன் விடைபெற்றார் பிரபல குத்துச்சண்டை வீரரான மனி பக்கியோ.

லாஸ் வேகாசில் இடம்பெற்ற இந்த மோதலில் 116:110 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மனி பக்கியோ வெற்றிபெற்றார். தனது வாழ்நாளில் 66 மோதலில் பங்கேற்ற மனி பக்கியோ, அதில் ஆறு வகையான எடைப்பிரிவுகளில் உலகப் பட்டங்களை வென்றுள்ளார். ஓய்வுக்குப் பின்னர் பிலிப்பைன்ஸில் தனது அரசியல் வாழ்க்கையில் கவனஞ் செலுத்தப் போவதாக அவர் தெரிவித்துள்ளார். (ம)



## சைக்கிளோட்டமும் வீதியோட்டமும்

யாழ்ப்பாணம், ஏப். 13
அரியாலையின் சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு வடமாகாண ரீதியாக சைக்கிளோட்டம், வீதியோட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையத்தின் முன்பாக இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மேற்படி போட்டிகளில் ஆண்களுக்கான சைக்கிளோட்டம் 50 கிலோ மீற்றர் தூரம் உடையதாகவும் பெண்களுக்கான சைக்கிளோட்டம் 15 கிலோ மீற்றர் தூரம் உடையதாகவும் நடைபெறும். வீதியோட்டம் இருபாலாருக்கும் 10 கிலோ மீற்றர் தூரம் உடையதாகவும் நடைபெறும். (ம-23)

## லெய்செஸ்டர் சிற்றி அபாரம்

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற லெய்செஸ்டர் சிற்றி, சந்தர்லாண்ட் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் லெய்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது.

லெய்செஸ்டர் சிற்றி சார்பாக பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜேமி வர்டி பெற்றிருந்தார். இந்த ஆட்டத்தில் பெற்ற வெற்றியுடன் 72 புள்ளிகளைப் பெற்றுள்ள லெய்செஸ்டர் சிற்றி, இங்கிலாந்து பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் தொடர்ந்தும் முதலிடம் வகிக்கின்றது. (ம)




## கிளிநொச்சியில் இருந்து ஐம்பத்துமூன்று பேர் தெரிவு தேசியமட்ட இளையோர் சதுரங்கத் தொடருக்காக

கிளிநொச்சி, ஏப். 13
இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் தேசிய மட்ட இளையோர் சதுரங்கத் தொடருக்காக கிளிநொச்சியில் இருந்து ஐம்பத்துமூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட மட்டத் தெரிவுப்போட்டிகள் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெற்றன. 8 வயதின் கீழ், 10 வயதின் கீழ், 12 வயதின் கீழ், 14 வயதின் கீழ், 16 வயதின் கீழ், 18 வயதின் கீழ் என்ற வயதுப் பிரிவுகளில் இருநூறுக்கும் அதிகமான வீர வீராங்கனைகள் குறித்த தொடரில் கலந்து கொண்டனர். இவர்களில் 53பேர் தேசிய மட்ட இளையோர் சதுரங்கத் தொடருக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசியமட்டத் தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக இலங்கை சதுரங்கச் சம்மேளனம் அறிவித்துள்ளது. (ம-405)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகறை – காளியம்பாள் இறுதியில் நாளை மோதல்

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திவரும் தாச்சித் தொடரின் இறுதியாட்டத்தில் புது மடம் வைகறை அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் வி.கழகம் நாளை மோதவுள்ளது.
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் தலைவரான செ.சண்முகலிங்கத்தின் தலைமையில் புது மடம் வைகறை வி.கழக மைதானத்தில் மாலை 4மணிக்கு நடைபெறவுள்ள இந்த ஆட்டத்துக்கு பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ம)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 12.04.2016 | வெற்றி வாரம் 1967 | வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்
20 28 40 44
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 3,099,240 /-

நியத்த ஜய
வெற்றி வாரம் 453
திகதி 12.04.2016
வர்ணம் மஞ்சள்
விஷேட வெற்றி இலக்கம்
1153
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 10,722,120/=
11 18 43 44 W
Tel: 011 4 824 824
19.04.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## வேலை வாய்ப்புக்கள்

இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார்
வேலைவாய்ப்புக்களை உங்கள் மொபைலில்
SMS மூலம் பெற
REG < இடைவெளி> JOBS என டைப்
செய்து 77010 க்கு SMS
அனுப்புங்கள்.

தொடர்புக்கு: 076 767 7222

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பண்டத்தரிப்பு பிரான்பற்று வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்த விளையாட்டு விழா

எதிர்வரும் 16.04.2016 ஆம் திகதி காலை 6.00 மணிக்கு மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி 60Km அதனைத் தொடர்ந்து பி.ப ஒரு மணிக்கு மைதான நிகழ்வுகளும் பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் நடைபெறும்.
அனைவரையும் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்.

IPS
ICT Certificate Function-2016
தலைவர்
திரு. S. சிவபாலன்
இணைப்பாளர். தொழில்சார் சற்கைகள் நிறுவனம்.
பிரதம விருந்தினர்
பேரா[illegible]யர். மேதகு. சிறிசற்குணராஜா
பீடாதிபதி, விஞ்ஞ[illegible]னபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
இடம்: IPS. திருநெல்வேலி திகதி: இன்று (13.04.2016) நேரம்: 3.30pm
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நிர்வாகம் IPS. திருநெல்வேலி

ஓம் சாயி
பாபா வோடு திருவுலா

எதிர்வரும் 15.04.2016
வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு
" இராம நவமி" யை முன்னிட்டு
புத்தூர் ஸ்ரீ ஷிரடி சாயி பாபாவுடன்
வல்லை ஸ்ரீ ஆஞ்சநேயர்
ஆலயத்துக்கு திருவுலா செல்வோம்.
" பாபாவோடு திருவுலா செல்வோம்
பாபாவின் திருவருள் பெறுவோம்"
ஸ்ரீ ஷிரடி சாயிபாபா பிரார்த்தனை மையம்
சுன்னாகம் றோட், புத்தூர்.

# ஹைதராபாத்தை இலகுவாக வீழ்த்தியது பெங்களூர்
## வில்லியர்ஸ், கோக்லியின் விளாசல்கள் கைகொடுக்க



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ், சண்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பெங்களூர் அணி 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. கெயில், வில்லியர்ஸ், கோக்லி, வற்சன், சர்பராஸ்கான், என்று அதிரடிப் பட்டாளத்தை பெங்களூர் அடுக்கி வைத்திருந்தாலும் கெயிலுடன் ஆரம்ப வீரராக களமிறங்குபவர் யார் என்ற எதிர்பார்ப்பு மிகையாக நிலவியது. வற்சன் அந்த இடத்துக்கு எதிர்வுகூறப்பட்டாலும் களமிறங்கியது என்னமோ கோக்லியே. ஒரே ஓட்டத்துடன் கெயிலை போல்ட் செய்தார் புவனேஸ் குமார். களத்தில் வில்லியர்ஸ். கெயிலை வீழ்த்தியமைக்கான எந்தப்பயனும் ஹைதராபாத்துக்கு கிட்டவில்லை. கோக்லி, வில்லியர்ஸ் இணையின் மிரட்டல் ஆரம்பமானது. கரண் சர்மா, ஹென்றிக்ஸ் இருவரினதும் பந்துவீச்சு நேற்று எடுபடவேயில்லை. பந்துப் பரிமாற்றத்துக்கு மூன்று பவுண்டரிகள் என வெளுத்து வாங்கப்பட்டது. மிஸ்டர் 360 (வில்லியர்ஸ்) நேற்று மீண்டும் தன்னை நிரூபித்தார். வில்லியர்ஸ் 26 பந்துகளிலும் கோக்லி 40 பந்துகளிலும் தமது அரைச்சதத்தை நிறைவு செய்தனர். இணைப்பாட்டமாக 157 ஓட்டங்கள் பகிரப் பட்ட வேளையில் 75 ஓட்டங்களுடன் கோக்லியின் இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது. கரண் சர்மாவின் பந்தில் தொடர்ச்சியாக மூன்று சிக்சர்களை விளாசினார் வற்சன். 82 ஓட்டங்களுடன் வில்லியர்ஸ் ஆட்டமிழக்க வற்சனின் இன்னிங்ஸ் 19 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. இறுதிக்கட்ட இன்னிங்ஸை சராசரி மாறாமல் முன்னெடுத்தார் சர்பராஸ் கான். புவனேஸ் குமார் வீசிய 19ஆவது பந்துப்பரிமாற்றத்தில் சர்பராஸின் துடுப்பில் இருந்து 20 ஓட்டங்கள் சீறிப்பாய்ந்தன. முடிவில் பெங்களூர் 227-4.
பந்துவீச்சில் ஹைதராபாத் சார்பாக ரகுமான், புவனேஸ்குமார் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.
120 பந்துகளில் 228 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. ஹைதராபாத்திடம் இந்த இலக்கை எட்டக்கூடிய துடுப்பாட்ட வரிசை இல்லை. ஆனால் வோர்ணர், தவான் இருவரும் பத்துப் பந்துப்பரிமாற்றம் வரை தாக்குப்பிடித்தால் நெருக்கடியை ஏற்படுத்த முடியும். தவானின் தடுமாற்றம் ஐ.பி.எல். தொடரிலும் நீடிக்கிறது. எட்டே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பெங்களூரின் வெற்றியை சிறிது நேரம் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வைத்தார் வோர்ணர். அடிக்கொருதடவை சிக்சர்களை விளாசி 21பந்துகளில் அரைச்சதத்தைப் பதிவுசெய்தார். 58 ஓட்டங்களுடன் வோர்ணரை வெளி யேற்றினார் வற்சன். வோர்ணரைத் தவிர வேறெந்த வீரரினதும் ஆட்டத்தில் திருப்தியில்லை. ரெட்டி மட்டும் பின்வரிசையில் சிறிது மிரட்டினார். இருந்தபோதும் 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் ஹைதராபாத் அணியால் 182 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.



பந்துவீச்சில் வற்சன், சகால் இருவரும் தலா இரு இலக்குகளையும், மில்னி, பிரவீஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## வேலை வாய்ப்பு

கோண்டாவிலில் இயங்கும் மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்றுக்கு பகுதி நேரக் கடைமையாற்ற பெண் உதவியாளர் தேவை. முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. பயிற்சி பெற விரும்பு வரும் தொடர்புகொள்ளலாம்.
075 9292402

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி Post Office
Road பெருங்குளம்
சந்தியில் 6 பரப்புக்காணி,
5 அறைகளுடன் 4 குளியல்
அறைகளையும் கொண்ட
வசிக்கக்கூடிய வீடு
விற்பனைக்குண்டு.
077 703 9661, [illegible]

# பின்வரிசைத் தடுமாற்றமே தோல்விக்குக் காரணம்
## - மில்லர்

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் அணியிடம் தோல்வியடைந்தது பஞ்சாப். இந்தத் தோல்விக்குப் பஞ்சாப் அணி 20 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்ததே காரணம் என்று தெரிவித்துள்ளார் அந்த அணியின் தலைவரான மில்லர்.
தோல்வி குறித்து மில்லர் மேலும் தெரிவிக்கையில் – நாங்கள் 20 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்து விட்டோம். துடுப்பாட்டத்தில் பின்வரிசை வீரர்கள் மிகவும் தடுமாறிவிட்டார்கள். 180 ஓட்டங்களைக் குவித்திருந்தால் நல்ல நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கலாம். பிராவோ மிகவும் அபாரமாகப் பந்துவீசி, எங்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி விட்டார். அடுத்த ஆட்டத்தில் எங்கள் அணி வீரர்கள் சிறப்பாக ஆடுவார்கள் என்று நம்புகிறேன் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.